www.padippakam.com


# புதிய கலாச்சாரம்

ம.க.இ.க. மாத இதழ்

ரூ. 5.00


## அமெரிக்க சொர்க்கத்தின் ஆசிய அடிமைகள்!

ஆப்பிரிக்க அடிமைகளால் உருவாக்கப்பட்ட அமெரிக்காவில் இப்போது ஆசிய அடிமைகள். சொர்க்கத்தை தேடிப் பயணம் புறப்பட்ட இந்த ஏழைகள் நியூயார்க் கட்டிடங்களின் நிலவறைப் பொந்துகளில் அடைக்கப்படுவார்கள். அங்கிருந்து அமெரிக்காவுக்குத் தேவையான ஆடைகளை அவர்கள் உற்பத்தி செய்வார்கள்.



www.padippakam.com

# மான்சாண்டோ கதை இலாகா வழங்கும் தீபாவளி!

நரகாசுரன் செத்ததைக் கொண்டாடுவதுதான் தீபாவளி என்ற கதையைக் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்படி ஒரு கதையைக் கேட்டிருக்கிறீர்களா?

"தீபாவளி எப்பொழுதும் அக்டோபர், நவம்பர் மாதத்திலேயே வருகிறது. இது ஈரப்பதமுள்ள அறுவடைக்காலமாகும். பயிர்களை அழிக்கும் பூச்சிகளின் எண்ணிக்கை இம்மாதங்களில் அதிகரிக்கும். இதனால்தான் இம்மாதங்களில் பல நாட்கள் விளக்குகள் வைத்து தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள். இந்த விளக்குப் பொறிகளினால் பூச்சிகள் அழிக்கப்படுகின்றன. இது பூச்சிகளை அழிக்க பழைய காலத்தில் அனுபவபூர்வமாக உணரப்பட்ட ஒரு உண்மையாகும்."

"தீபாவளியின் போது வெடி வெடிப்பது கூட ஒரு பூச்சிக்கட்டுப்பாட்டு நடவடிக்கையாகும். வெடியிலுள்ள சல்பர் பூச்சிக்கொல்லியாக இருப்பதுடன், கிராமம் முழுவதையும் நோய்க் கிருமிகளை ஒழித்து வியாதிகளிலிருந்து பாதுகாக்கிறது. அப்போது வீட்டிற்கு சுண்ணாம்பு அடிப்பதும் பூச்சிகளிடமிருந்து சுற்றுப்புறத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகும். இதை மனதில்வைத்துக் கொண்டே, வீட்டை சுண்ணாம்புச் சலவை செய்வது தீபாவளியின் ஒரு பகுதியாகப் பரிந்துரைக்கப்படுகிறது."

"நாம் இந்த நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்த்தால், இன்று நாம் சொல்லும் "ஒருங்கிணைந்த பூச்சிக்கட்டுப்பாடு நிர்வகிப்பு" (INTEGRATED PEST MANAGEMENT) என்ற புதிய கோட்பாட்டை அந்த காலத்திலேயே சப்தமும், ஒளியும் நிறைந்த ஒரு பண்டிகையின் மூலம் கலாச்சாரமாக உருவாக்கிய நமது முன்னோர்களின் அறிவுக் கூர்மையை நம்மால் உணர முடியும்."

மேற்கண்டது விஜயபாரதம் பத்திரிகையில் 'வீரத்துறவி' இராமகோபாலனின் வேதவிளக்கம் என்று நினைத்தால், நீங்கள் ஏமாந்து போவீர்கள். இது (கிறித்துவ) அமெரிக்க பன்னாட்டு விதைக்கம்பெனியான மான்சாண்டோவின் தனிச்சுற்று இதழான "உயிரியல் தொழில் நுட்பம்" (BIO TECHNOLOGY) என்பதில் வெளியிடப்பட்டிருக்கும் கட்டுரை. ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு ஒரு பக்கம் இருக்கட்டும். முதலில், தீபாவளியைப் பற்றியே ஒரு ஒருங்கிணைந்த



கட்டுக்கதை நம் நாட்டில் கிடையாது. நரகாசுரனைக் கொன்றது என்றும், பத்மாசூரனைக் கொன்றது என்றும் வாய்க்கு வந்தபடி சொல்லிக் கொள்வது உண்டு.

ஒரு புராணத்தில், பூமியை பாயாய்ச் சுருட்டிக் கொண்டு கடலுக்குள் ஒளிந்து கொண்ட அசுரனை வதம் செய்ய பன்றி அவதாரம் எடுத்து கடலுக்குள் போய் வந்த மகாவிஷ்ணு சுருட்டிய பூமியை திரும்ப விரித்தபோது அந்த மகாவிஷ்ணுப் பன்றியும், பூமியும் புணர்ந்து அதனால் பிறந்த நரகாசுரனின் அட்டகாசம் தான் தீபாவளிக்கு மூலகாரணம் என்ற மட்டரகமான கதையும் உண்டு.

> இந்து வீட்டு பூனையல்ல எந்த (மதத்து) வீட்டுப் பூனையும் எலிபிடிக்கும் என்ற எளிய உண்மைகூட நமக்குத் தெரியாது என்று கதை கட்டுவதில் மான்சாண்டோ ஜகத் குருக்களையும் தாண்டிவிட்டது.

இப்படிப்பட்ட மகா, மகா அரக்கர்களை வதம் செய்ய மகாவிஷ்ணு பன்றி லெவலுக்கு இறங்கிவந்து பாடுபட்ட கதைகளை எல்லாம் கவிழ்த்துப் போட்டுவிட்டு வெறும் பூச்சிபுடிக்கும் திருவிழா என்றால்?

ஒரு ஈ எறும்புக்குக் கூட தீங்கிழைக்காததுதான் இந்து மதத்தத்துவம். பண்டிகைக்குப் போடும் மாவுக்கோலமே ஈ எறும்பு பசியாறத்தான் என்று ஜீவகாருண்யம் பேசுபவர்கள் எப்படித்தான் சீரணிக்கப் போகிறார்களோ?! இதையும் தாண்டி தீபாவளி இந்துப்பண்டிகை அல்ல, ஜைனர்களின் பண்டிகை என்ற வாதங்களும் உண்டு.

சமணர்களின் பள்ளிகளைத் திருடியதைப் போல அவர்களுடைய பண்டிகையான தீபாவளியும் இந்து மதத்தால் திருடப்பட்டது என்கின்றன வரலாற்று ஆய்வுகள்.

தீபாவளியை ஒரே மாதிரியாக யாரும் கொண்டாடுவது இல்லை என்பது ஒருபுறமிருக்க, தீபாவளியே கொண்டாடாத கிராமங்களும் உண்டு. சுண்ணாம்பு அடிப்பதோ, விளக்கு வைப்பதோ இங்கே பெரும்பாலும் கிடையாது. இந்த லட்சணத்தில், 'ஆல் அவுட்டும்' 'குட் நைட்டும்' வைத்து பூச்சிவிரட்டும் நடுத்தர வர்க்கம், பூச்சிக் கட்டுப்பாட்டுக்காக வெடிவெடிக்கிறதாம். கேட்பவர்களுக்கு அறிவு இருக்காது என்ற அசட்டுத் துணிச்சலில் கேப்பு டப்பியில் நெய்வடிகிறது என்கிறது மான்சாண்டோ.

தீபாவளி எந்தக் காலத்திலும் மக்கள் பண்டிகையாக இருந்ததில்லை. இன்றும் கூட தீபாவளி பிழைத்திருப்பது 'நரகாசுரனின் சாவால்' அல்ல. அனைத்திந்திய அளவில் ஒரே நேரத்தில் வழங்கப்படும் போனஸ்தான் தீபாவளியை உயிருடன் வைத்திருக்கிறது. துணி வியாபாரம் முதல் தொலைக்காட்சிப் பெட்டி வியாபாரம் வரை அனைத்தையும் ஒரு பண்டிகையின் கீழ் ஒருமுகப்படுத்தி, கூட்டுறவு பண்டக சாலைகள் மூலம் கடனும் வழங்கி துணிகள், பட்டாசு, நுகர் பொருட்கள் அனைத்தையும் விற்க அரசாங்கமே ஏற்பாடு செய்யும் அதிகார பூர்வ பண்டிகைதான் தீபாவளி.

தீபாவளிச் சரடோடு திருப்தியடையாத மான்சாண்டோ இன்னொரு புதுச்சரடும் விடுகிறது.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# சீனப்புரட்சியின் ஐம்பதாம் ஆண்டு

இது சீனப்புரட்சியின் 50-வது ஆண்டு. 1949 - அக்டோபர் முதல் நாளன்றுதான் மக்கள் சீனத்தின் தோற்றத்தைப் பிரகடனம் செய்தார் தோழர். மாவோ. ஜப்பானிய இராணுவம், அமெரிக்கா மற்றும் மேற்குலக முதலாளித்துவ நாடுகளின் துணையோடு போரிட்ட சியாங் - கே - ஷேக்கின் கொமிந்தாங் இராணுவம், உள்நாட்டு நிலப்பிரபுக்களின் படைகள் ஆகிய அனைத்தையும் தன் சொந்த வலிமையைக் கொண்டு முறியடித்து செங்கொடியை உயர்த்தியது *சீனப் பொதுவுடைமைக் கட்சி. சீனப்புரட்சி* என்பது வெறும் அரசியல் ராணுவ நடவடிக்கையல்ல; அது மனிதகுல வரலாறு இதுவரை கண்டிராத உண்மைக் காப்பியம்.

இன்று சீனப்புரட்சியின் பொன்விழாவையொட்டி உலக முதலாளித்துவப் பத்திரிகைகள் முதல் தமிழகத்தின் சன் தொலைக்காட்சி வரை எல்லாத் தகவல் தொடர்பு சாதனங்களும் இன்றைய சீனத்தின் அருமை பெருமைகளை சிலாகிக்கத் தொடங்கியுள்ளன. சீனாவின் பொருளாதார வளர்ச்சி பிரமிக்கத் தக்கதாக இருக்கிறது. சாலைகள் சுத்தமாக உள்ளன, மக்கள் தினமும் காலையில் உடற்பயிற்சி செய்கிறார்கள், பெண்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள்... என்று சீனாப்புராணம் பாடத்துவங்கியுள்ளனர். ''சர்வாதிகார நாடு, மூங்கில் திரை நாடு, பாம்பு, தவளை தின்பவர்கள் என்றெல்லாம் சீனத்தைத் தூற்றிவந்த முதலாளித்துவ உலகம், இன்று ஏன் போற்ற வேண்டும்? மக்கள் சீனத்தின் துவக்க விழாவின் போது - 1949 இல் - சீன அரசையே அங்கீகரிக்க மறுத்த முதலாளித்துவ நாடுகள், பொன்விழாவின் போது ஏன் புகழ்பாட வேண்டும்?

வசிட்டன் வாயால் பிரம்ம ரிஷிப்பட்டம் கிடைக்கக் காரணம் இருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளாக சீனத்தில் ஆட்சி நடத்துவது போலிக் கம்யூனிசம் - அதாவது முதலாளித்துவம். ஆனால் சீனத்தில் போலிகம்யூனிஸ்டுகள் தங்கள் கொள்கையை 'சந்தை சோசலிசம்' என்று அழைத்துக் கொள்கிறார்கள். தென் - வடக்கு என்றொரு திசையிருக்க முடியாது. சந்தை என்பது முதலாளித்துவத்தின் வீடு. அங்கே சோசலிசம் குடித்தனம் நடத்த முடியாது. வெறும் கோட்பாட்டு ரீதியாக நாம் இதைக் கூறவில்லை. இன்றைய சீனாவின் நடப்புகள் அதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. ஏற்றத்தாழ்வுகள், லஞ்ச ஊழல்கள், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, விபச்சாரம், நகர்ப்புறச் சேரிகள் ஆகியவை பெருகி வருகின்றன; வயிற்றுப் பிழைப்புக்காக மக்கள் இலட்சக்கணக்கில் நாட்டை விட்டே ஓடுகின்றனர். ஏனென்றால் பன்னாட்டு நிறுவனங்கள் சீனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அதனால்தான் முதலாளித்துவ வசிட்டர்கள் சீனத்திற்குச் சான்றிதழ் வழங்குகிறார்கள்.

முதலாளிகள் கம்யூனிஸ்டுகளைக் காரணமில்லாமல் பாராட்டுவதில்லை; காரணமில்லாமல் அவதூறு செய்வதுமில்லை. ''மாவோவின் சீனத்தில் 1959 முதல் 61 வரை மூன்றாண்டுகளில் 3 கோடி விவசாயிகள் பட்டினியால் செத்தார்கள். ஸ்டாலின் ரசியாவில் 1930 களில் பல லட்சம் விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டார்கள்'' என்று இரண்டு ஆதாரமில்லாத பொய்களும் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டு, இன்றளவும் முதலாளித்துவ அறிஞர் பெருமக்களால் தண்ணீர் ஊற்றிப் பராமரிக்கப்படுபவை. இந்த அவதூறுக்குக் காரணம் மிக எளிமையானது. அந்தக் காலகட்டங்களில்தான் விவசாயத்தில் தனி உடைமையை ஒழித்துக் கூட்டுப் பண்ணைகளை நிறுவும் முயற்சி இரு நாடுகளிலும் நடந்தது. அந்தக் காலகட்டத்தில்தான் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற எந்த அந்நிய நாட்டின் உதவியும் இல்லாமல் இருநாடுகளும் தொழில் துறையில் சுயசார்பாக மாபெரும் முன்னேற்றத்தைக் கண்டன.

அதேபோல, கம்யூனிஸ்டு கட்சிக்குள்ளேயே இருந்த முதலாளித்துவ சிந்தனைப் போக்குள்ளவர்களையும், அதிகார வர்க்கத் தன்மை கொண்டவர்களையும் பகிரங்க விசாரணைக்குட்படுத்தும் கலாச்சாரப் புரட்சியை மாவோ தொடங்கியபோதும், ரசியாவில் சோசலிசத்திற்குக் குழி பறிக்கும் முயற்சிகளை ஸ்டாலின் முறியடித்த போதும் கூக்குரல்கள் எழுப்பப்பட்டன. அந்தக் கூக்குரல்களுக்கு உரியவர்கள்தான் இன்றைய சீனத்தைப் பாராட்டுபவர்கள்.

ரசியாவிலும் சீனத்திலும் சோசலிசம் தோல்வியடைந்ததென்பது முற்றிலும் எதிர்பாராத விசயமல்ல. பல்லாயிரம் ஆண்டுகளாக அனுபவித்து வந்த உடைமையை இழந்த முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வர்க்கங்களும், அவர்களது குலக்கொழுந்துகளும், சமூகத்தில் கிருமிகளைப் போலப் படர்ந்திருக்கும் உடைமை வர்க்கச் சிந்தனைகளும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வெறித்தனமாகவும், நயவஞ்சகமாகவும் முயல்வர், என்று லெனின் முதல் மாவோ வரை அனைவரும் எச்சரிக்கத்தான் செய்தார்கள். இருப்பினும் இந்தச்சுற்றில் தொழிலாளி வர்க்கம் தோற்று விட்டது. அடுத்த சுற்று நெருங்குகிறது.

சோசலிசத்தின் பயனை உய்த்துணர்ந்த சீனத் தொழிலாளர்களும் உழவர்களும் இன்றைய முதலாளித்துவ அடிமைத்தனத்தைத் தொடர்ந்து சகித்துக் கொள்ள மாட்டார்கள். உலகமயமாக்கம் பெற்றெடுத்த சீனத்தின் சேரிகளில், கஞ்சித் தொட்டிக்குக் கையேந்தும் வரிசைகளில், வேலையற்றோர் பட்டாளங்களில், சுதந்திர வர்த்தக வலயங்களின் தொழிற்சாலைகளில், புறக்கணிக்கப்படும் கிராமப்புறங்களில்... புதியதொரு சீனப் புரட்சியின் குரல் உங்களுக்குக் கேட்கவில்லையா?


கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 17
• குரல்: 5
• அக்டோபர் 99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9



படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.


படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்க சொர்க்கத்தில் ஆசிய அடிமைகள்

வியர்வை நாற்றம்; அழுகிய குப்பைகளிலிருந்து கிளம்பும் நெடி; கழிப்பறையில் சிறுநீர் கழிக்கும் ஒலி; அருகிலேயே அடுப்பில் மீன் வறுக்கும் வாசம்; தலை மேலே குறட்டைச் சத்தம்; இன்னொரு மூலையில் தொலைக்காட்சியின் இரைச்சல்; எங்கும் கவிந்திருக்கும் சிகரெட் புகை; சாராய நெடி.

பத்தடிக்குப் பத்தடி அளவுள்ள இந்த அறையினுள் 8 பேர்; அறைக்கு சன்னலில்லை; சுவரின் உச்சியில் அரை அடி விட்டத்தில் ஒரு ஓட்டை - காற்று வெளியே போகவும் உள்ளே வரவும் அவ்வளவுதான் இடம்.

இது சிறைக் கொட்டடியில்லை; பம்பாய், கல்கத்தாவின் குடிசைப் பகுதியில்லை — நியூயார்க்.

மண்ணுலக சொர்க்கமான அமெரிக்காவின் மாபெரும் நகரம். 100 மாடி 150 மாடிக் கட்டிடங்கள் நிரம்பிய அந்த கான்கிரீட் காட்டின் ஏதோ ஒரு கட்டிடத்தில் இது ஒரு பொந்து.

இந்தப் பொந்தில் வசிப்பவர்கள் காலை 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு 7 மணிக்கு வேலை செய்யத் துவங்க வேண்டும்.

வேலை செய்யும் தொழிற்கூடமோ பக்கத்து அறைதான். 15 அடிக்கு 18 அடி அளவுள்ள அறைக்கு 15 தையல் எந்திரங்கள். ஒரு நாளைக்கு 16 மணி நேரம் வேலை. வாரத்தில் ஏழு நாட்களும் வேலை.

இந்தச் சித்திரவதைக் கூடங்களுக்கு அமெரிக்கப் பத்திரிகைகள் சூட்டியிருக்கும் பெயர் **வியர்வைக் கடைகள்.** நியூயார்க், லாஸ் ஏஞ்செல்ஸ் போன்ற அமெரிக்காவின் பெருநகரங்கள் அனைத்திலும் நிரம்பியுள்ள இத்தகைய 'வியர்வைக்கடை'களில் பணியாற்றும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய அனைவரும் தாய்லாந்து, சீனா போன்ற ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் - கொத்தடிமைகள்.

துபாய்க்கும் சிங்கப்பூருக்கும் வேலை தேடிச் சென்று ஏமாந்து கொத்தடிமைகளாகும் நம்மூர் மக்களின் கதையைக் காட்டிலும் கொடியது இவர்களது கதை.

''லாஸ் ஏஞ்செல்ஸ் நகரிலுள்ள அதி நவீன தையற்கூடம் ஒன்றின் புகைப்படத்தை எங்களுக்குக் காட்டினார்கள். பார்ப்பதற்கே மிகவும் கவர்ச்சிகரமாய் இருந்தது. காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை; வாரத்தில் 5 நாட்கள் வேலை. மாதம் 2400 டாலர் சம்பளம். விடுமுறை நாட்களில் டிஸ்னி லாந்து போன்ற இடங்களுக்குக் கூட்டிச் செல்வோம் என்று ஆசை காட்டினார்கள்; நம்பி வந்தோம்.''

''லாஸ் ஏஞ்செல்ஸ் விமான நிலையத்திலிருந்து நேரே இந்தப் பொந்துக்குக் கொண்டுவந்தார்கள். எங்களிடமிருந்து பாஸ்போர்ட், பணம் அனைத்தையும் பிடுங்கிக் கொண்டார்கள். அதிகம் பேசாதே — கேள்வி கேட்காதே — யாரோடும் நட்பு சேராதே - என்ற எச்சரிக்கையுடன் இங்கே அடைக்கப்பட்டோம்.''

''தாய்லாந்தில் 8 மணி நேரம் உழைத்துச் சம்பாதித்ததை இங்கே 16 மணிநேரம் உழைத்துச் சம்பாதிக்கிறோம்.''

இது லே போதாங் என்ற தாய்லாந்துப் பெண்ணின் கதறல்.

யூ லி என்ற சீனப்பெண்ணின் கதை இன்னும் கொடூரமானது.

''அமெரிக்காவில் வேலை வாங்கித் தருகிறோம். அங்கே சம்பாதித்து எங்கள் கடனைக் கொடுத்தால் போதும்'' என்று சொன்ன ஏஜெண்டுகளின் பேச்சை நம்பி, தன் கணவனை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தாள் யூ லி.

1991-இல் அமெரிக்கா போன கணவனிடமிருந்து பணம் வரவில்லை; கடிதமும் இல்லை; ஆளையும் காணவில்லை. அனுப்பி வைத்த ஏஜெண்டுகளைக் கேட்டால் ''இன்னும் கடன் அடையவில்லை'' என்றார்கள். தன்னந்தனியாக 3 குழந்தைகளை வைத்துக் கொண்டு 5 ஆண்டுகளாக வாழ்வதற்குப் போராடி வந்த யூ லி ஒரு முடிவுக்கு வந்தாள்.

மிச்சமிருந்த எல்லா உடைமைகளையும் விற்றுத் தன் கணவன் வாங்கிய கடனை அடைத்தாள். ''என்னையும் என் பிள்ளைகள் மூன்று பேரையும் என் கணவனுடன் நியூயார்க்கில் சேர்த்து விடுங்கள்'' என்று ஏஜெண்டுகளிடம் மன்றாடினாள்.

அதற்கு 1,32,000 டாலர் செலவாகும்; நீங்கள் வேலை செய்து அடைக்க வேண்டும் என்றார்கள் ஏஜென்டுகள். யூ லி ஒப்புக் கொண்டாள்.

இப்போது யூ லியும் 3 பிள்ளைகளும் நியூயார்க் நகரில். மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. கணவனைப் பார்த்துவிட்டாள். ஆனால் குடும்பம் சேர்ந்து வாழ முடியவில்லை. ஆளுக்கோரிடத்தில் வேலை. சேர்ந்து வாழவேண்டும் என்ற கனவுக்காகத் தனித்தனியாக உழைக்கிறார்கள்.

ஐந்து பேரும் ஒரு நாளைக்கு 17 மணிநேரம் உழைக்கிறார்கள். மாதந்தோறும் 3000 டாலர் கடன் கட்டுகிறார்கள். ஆனால் கடன் அடையவில்லை; அடையப் போவதுமில்லை.

படிக்க வேண்டிய பிள்ளைகளைக் கொத்தடிமையாக்கி விட்டதற்காக வருந்தி அழுகிறாள் யூ லி.

● ○ ●

கண்ணீர்க் கதைகளுக்குப் பஞ்சமில்லை.

இந்தத் தொழிலாளர்களெல்லாம் ஆசிய நாடுகளிலிருந்து மாஃபியாக் கும்பல்களால் கொண்டுவரப் பட்டவர்கள். முறையான கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) இருந்தால் அதை இத் தொழிலாளர்களிடமிருந்து பறித்து வைத்துக் கொள்கின்றன இந்த மஃபியா கும்பல்கள். ஆனால் பெரும்பாலான தொழிலாளர்கள் கள்ளத் தோணியில் கொண்டுவரப்பட்டவர்கள்.

ஒவ்வொர் ஆண்டும் அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாகக் குடியேறும் சீனர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் என்கிறது அமெரிக்க உளவு நிறுவனம். தாய்லாந்திலிருந்தோ 24,000 பேர். சட்டபூர்வமாகவே தாய்லாந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறுவோர் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேர்.

இந்தச் சட்டவிரோதக் குடியேற்றங்களை அமெரிக்க அரசு ஏன் தடுத்து நிறுத்த வில்லை என்று கேட்டால், அந்தக் கேள்விக்கான விடைகளில் ஒன்றுதான் இந்த வியர்வைக் கடைகள்.

பலமாடிக் கட்டிடங்களின் இடுக்குகளிலும், காற்றுப் புகாத பரண்களிலும், நிலவறைகளிலும் இயங்கும் இத்தகைய வியர்வைக் கடைகள், நியூயார்க் நகரில் மட்டும் 400.

''வேலை நிலைமைகளைப் பற்றியோ, கூலியைப் பற்றியோ யாராவது



படிப்பகம்

www.padippakam.com

புகார் செய்தால் மறுகணமே அவர்கள் அமெரிக்காவை விட்டுத் துரத்தப்படு வார்கள். எனவே யாரும் வாய்திறக் கவே அஞ்சுகிறார்கள்'' என்கிறார் சீனத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் விங் லாம்.

அமெரிக்காவை விட்டு ஓடத் தயா ராக இருப்பவர்களையும் அப்படி ஓடி விடுவதற்கு அனுமதிப்பதில்லை மபியா் கும்பல்கள். ''எங்களுக்குச் சேரவேண் டிய தொகையை கொள்ளையடித்தாவது கொடுத்துவிட்டுப் போ'' என்று மிரட்டு கிறார்கள். கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறார்கள். கொத்தடிமையாக நீடிப்பதா, கிரிமினலாக் மாறுவதா என்ற கேள்வி வந்தால் முதலாவதைத்தான் தெரிவு செய்கிறார்கள் அந்த ஏழைத் தொழிலாளர்கள்.

நியூயார்க் நகரின் தொழிலாளர் சட் டப்படி ஒரு மணி நேரத்திற்கான குறைந் தபட்ச ஊதியம் 5.15 டாலர். இந்தக் கொத்தடிமைகளுக்குக் கொடுக்கப்படு வதோ ஒரு டாலர்.

அந்தச் சம்பளமும் ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை. இரண்டு மாதச் சம்பளத்தைப் பிடித்து வைத்துக் கொள்வதென்பது மிகவும் சகஜம். அமெ ரிக்காவின் காவல்துறை, குடியேற்றத் துறை, தொழிலாளர்துறை ஆகிய மூன் றுமே இந்த இரகசிய உலகத்தைக் கண்டு கொள்வதில்லை.

●○●

மே தினப் போராட்டத்தின் மூலம் உலகத்தொழிலாளர்களுக்கு ''8 மணி நேர வேலை'' எனும் அடிப்படை உரி மையைப் பெற்றுத்தந்த நாட்டில், மே தினப் போராட்டத்திற்கு முன்னால், சென்ற நூற்றாண்டில் நிலவியதைக் காட் டிலும் கொடூரமான சுரண்டலும் ஒடுக்கு முறையும் தொடர்கிறதே இதற்குக் கார ணம் என்ன?

வியர்வைக் கடைகள் குறித்து ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கும் அமெரிக் காவின் ரீடர்ஸ் டைஜஸ்ட் பத்திரிகை இதற்குப் பதில் சொல்கிறது.

''அவர்கள் தங்கள் சொந்த நாட்டி னராலேயே இரக்கமில்லாமல் சுரண்டப் படுகிறார்கள்.''

உண்மைதான், தமது சொந்த நாட் டைச் சேர்ந்த மாஃபியாக் கும்பல்களால் தான் அவர்கள் கடத்தப்படுகிறார்கள்; அவர்களால்தான் துன்புறுத்தப்படுகிறார் கள்.

ஆனால் யாருக்காக? அந்த வியர் வைக் கடைகளின் பொந்துகளிலிருந்து அவர்கள் உற்பத்தி செய்யும் காற்றோட் டமான சட்டைகளை அணிபவர்கள்



யார்? அவற்றை விற்று ஆதாயம் அடை பவர்கள் யார்?

அமெரிக்காவின் மிகப்பிரபலமான ஆயத்த ஆடை விற்பனை நிறுவனங்க ளும், ஏற்றுமதி நிறுனங்களும்தான் இந்த வியர்வைக் கடைகளின் சரக்கைக் கொள் முதல் செய்பவர்கள்.

இந்தியாவிலிருந்தும் பிற ஏழை நாடுகளிலிருந்தும் ஆயத்த ஆடைகளை இறக்குமதி செய்யும் அமெரிக்க நிறுவ னங்களின் பிரதிநிதிகள், நேரடியாக சென்னைக்கும், பம்பாய்க்கும் வந்தி றங்கி, தங்களது ஆடைகள் எங்கே தைக் கப்படுகின்றன, எப்படித் தைக்கப்படு கின்றன என்று சோதனை செய்கிறார் களே — துணை ஒப்பந்தத்தில் வேலை செய்யும் சிறிய முதலாளிகளின் தையல கங்களைக் கூட அவர்கள் விட்டுவைப்ப தில்லையே - அத்தகைய அமெரிக்க முத லாளிகள் தங்கள் நாட்டின் வியர்வைக் கடைகளை மட்டும் பார்வையிடாதது ஏன்?

''கலிஃபோர்னியாவில் இத்தகைய வியர்வைக் கடையொன்றை தொழிலா ளர் துறை அதிகாரிகள் சோதனையிட்ட போது அங்கே உற்பத்தியாகும் ஆடைக ளெல்லாம் அமெரிக்காவின் மிகப்பெ ரும் ஆடை விற்பனையகங்களுக்குச் சொந்தமானவை எனத் தெரியவந்தது'' என்கிறது ரீடர்ஸ் டைஜஸ்ட்.

நியூயார்க்கின் மிகப்பெரும் ஆடை நிறுவனங்களான வால் - மார்ட், கே - மார்ட் ஆகியோரது விற்பனையில் பாதி நியூயார்க் கொத்தடிமைகளின் தயாரிப்பு தான் என்கிறது - டைம் வார ஏடு. வால் - மார்ட், கே - மார்க் ஆடைகள் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றுக்கும் ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன.

சதாம் உசேனின் கழிப்பறையில் இரசாயன ஆயுதத்தின் நெடி வீசுவதை வானத்திலிருந்தே மோப்பம் பிடிக்கத் தெரிந்த கிளிண்டனின் நாசியில் வால் மார்ட் சட்டைகளில் வீசும் வியர்வை யின் நெடி ஏறாதது ஏன்?

இது ஒரு வர்த்தகத் தந்திரம். மலி வான உழைப்புச் சந்தை என்ற ஒரே கார ணத்தினால்தான் இந்தியா போன்ற ஏழை நாடுகளிலிருந்து ஆயத்த ஆடை களை இறக்குமதி செய்கிறார்கள் அமெ ரிக்க முதலாளிகள். இந்த ஆயத்த ஆடை ஏற்றுமதித் தொழிலில் இந்தியா உள் ளிட்ட பல ஆசிய நாடுகளில் உள்ள பல லட்சம் தொழிலாளர்களின் தலைவிதி பிணைக்கப்பட்டு விட்டது.

மலிவு விலையில் உழைப்பை இறக் குமதி செய்த அமெரிக்கா, இப்போது உழைப்பாளிகளையே மலிவு விலையில் இறக்குமதி செய்கிறது.

அன்று ஆப்பிரிக்கக் கறுப்பின மக் களை விலங்குகளைப் போல வலைவீ சிப் பிடித்து, தாயை கரும்புத் தோட்டத்தி லும், பிள்ளையை நிலக்கரிச் சுரங்கத்தி லும் பிரித்துப் போட்டு, அவர்களின் ரத் தத்தை உறிஞ்சி அமெரிக்க சொர்க்க பூமியை உருவாக்கிக் கொண்டார்கள்.

இன்று அந்தச் சொர்க்கத்தின் நியான் விளக்குகளில் சொக்கி விழும் விட்டில் பூச்சிகளான பூ லி போன்றோ ரைக் கள்ளத்தோணியின் மூலம் கவர்ந்தி ழுக்கிறார்கள்.

இது ஒரு ராஜ தந்திரம். தமக்கு ஆடை ஏற்றுமதி செய்யும் இந்தியா,



படிப்பகம்

www.padippakam.com

# கனடா: படித்த அடிமைகள்!

அமெரிக்காவின் வடக்கு எல்லையில் இருக்கும் கனடாவிற்கு குடிபெயரும் படித்த 'அடிமை'களின் கதையைக் கேளுங்கள். ஒவ்வொரு ஆண்டும் கனடாவுக்குக் குடி பெயரும் ஆசிய நாட்டவர்கள் 2 இலட்சம் பேர். அதில் இந்தியர்கள் மட்டும் சுமார் 20,000 பேர். குடியுரிமை பெறுவதற்காக, அதாவது இந்தியாவை விட்டு ஓடுவதற்காக தலைக்கு 5 லட்சம் வீதம் ஆண்டு தோறும் 1000 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியையும் அழிக்கிறார்கள் இந்த இந்தியர்கள்.

என்னுடைய 'திறமை'க்கு இந்தியாவில் மதிப்பில்லை என்று அங்கே போனவர்களுக்குக் கிடைக்கும் மரியாதை என்ன? மருத்துவம், உயிரியல், பொறியியல், கட்டிடக்கலை ஆகியவற்றில் இங்கே உயர்பட்டம் பெற்றவர்கள் அங்கே போய் வாட்ச்மேன், துப்புரவுப் பணி போன்ற வேலைகள் செய்கிறார்கள். படித்த படிப்புக்கு வேலை இல்லையா என்று கேட்டால் ''உங்கள் ஊர் டிகிரி இங்கே செல்லாது. எங்கள் ஊர் டிகிரி வேண்டும்'' என்கின்றன கனடிய நிறுவனங்கள். எனவே வேலை செய்து கொண்டே கனடா பட்டம் வாங்கப் படிக்கிறார்கள்.

பட்டம் வாங்கியபின் எப்பேர்ப்பட்ட மருத்துவர், விஞ்ஞானி, ஆடிட்டராயிருந்தாலும் ஓராண்டுக்குச் சம்பளமில்லாமல் 'சேவை' செய்யச் சொல்கின்றன தனியார் நிறுவனங்கள். ஒவ்வொரு ஆண்டும் இரண்டு லட்சம் ஆசிய நாட்டவர்கள் கனடாவுக்கு இலவச சேவை செய்கிறார்கள் என்கிறது 'அவுட்லுக்' வார ஏடு.

இது அநீதியில்லையா, புதியவகை அடிமைத்தனமில்லையா என்று கேட்டால் பட்டென்று பதில் சொல்கிறார் கனடாவின் குடியுரிமைக்கான அமைச்சர் இசபெல்லா பாசெட்: ''நீங்கள் இங்கே வந்து இறங்கியவுடனே, உங்கள் படிப்புக்கேற்ற வேலையை வைத்துக் கொண்டு நாங்கள் வரவேற்க வேண்டும் என்று நினைத்தீர்களா?''

அடிமைகளுக்குச் சரியான சாட்டையடிதான். எனினும் 'உழைப்பு'க்குப் பொருந்தும் இந்த நீதி, அங்கிருந்து நமது நாட்டிற்குள் வந்திறங்கும் மூலதனத்துக்குப் பொருந்துவதில்லையே அது ஏன்?

சீனா, பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து போன்ற நாடுகள் கிளிண்டனின் அரசியல் ஆணைக்குப் பணிய மறுத்தால், ஆடை இறக்குமதி நிறுத்தப்படும். ஒரே நொடியில் இந்நாடுகளின் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் தெருவில் வீசப்படுவார்கள்.

ஆசியாவின் ஆடை இறக்குமதியாகாத அத்தகைய தருணங்களில் ஆசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்தக் கொத்தடிமைகள் அமெரிக்காவின் நிர்வாணத்தை மறைத்து நாகரிகப் படுத்துவார்கள். ஆசியத் தொழிலாளிக்கெதிராக ஆசியத் தொழிலாளிகள்!

இது ஒரு வர்க்கத் துவேசம்! மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் கணினி வல்லுநர்களையும் குடியுரிமை தந்து இறக்குமதி செய்து கொள்ளும் அமெரிக்கா இந்த உழைப்பாளிகளுக்கும் குடியுரிமை தரலாமே!

சட்டப்படி குடியுரிமை தந்தால், சட்டப்படி ஊதியம் கேட்பார்கள். அவர்களைக் கள்ளத் தோணிகளாகவே வைத்திருந்தால்தான், தேவை முடிந்தபின், அவர்களது இளமை முடிந்தபின், அவர்களைக் கந்தல் துணியைப் போலக் கடலில் வீச முடியும். வீசிவிட்டுக் கள்ளத் தோணியைத் தடுக்கத் தவறியதாக அந்த நாட்டைக் குற்றம் சாட்டி மிரட்டவும் முடியும்.

இதுதான் சுதந்திர வர்த்தகம்! தேசங் கடந்து அமெரிக்கா, ஐரோப்பாவிலிருந்து வரும் மூலதனத்திற்கு இங்கே ரத்தினக் கம்பளம்; மாலை மரியாதைகள். தேசங்கடந்து செல்லும் நம் உழைப்புக்கு அங்கே கொத்தடிமைத் தனம்!

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பை எதிர்க்கிறது பென்டகன். ஏனென்றால் அமெரிக்க ராணுவத்தின் சீருடைகள் ஆசியக் குழந்தைகளால் தைக்கப்படுகின்றன.

பிள்ளைக்கறி தின்னும் இந்த நாயன்மார்கள்தான் தாங்கள் சுத்த சைவமென்றும், பரீதாபாதிலிருந்து (டில்லி) அனுப்பப்படும் கம்பளங்களில் ''இது குழந்தைகளால் நெய்யப்பட்டதல்ல'' என்று முத்திரை குத்தி அனுப்ப வேண்டுமென்றும் கோருகிறார்கள்.

இந்த நாயன்மார்களிடம் எச்சில் பிரசாதம் வாங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ''சிவகாசி மத்தாப்பூ கொளுத்தமாட்டோம்'' என்று நாளைய அமெரிக்கக் குடி மக்களான பத்மா சேஷாத்ரி, சர்ச் பார்க் கான்வென்டு பிள்ளைகளை வைத்து மனிதச் சங்கிலி நடத்துகிறார்கள்.

● ○ ●

*அப்படியா*
*அப்படி ஓர் இடம் இருக்கிறதா?*
*ஒன்றுமே தெரியாதது போல*
*பாசாங்கு செய்கிறார்கள்*
*ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்.*
*அப்படியொரு ரகசிய உலகம்*
*இருக்கிறது என்பதை.*
*சகமனிதர்கள் உமிழும் கழிவிலும்*
*குப்பை கூளத்திலும்தான் - அங்கே*
*சிலர் வாழ்கிறார்கள் என்பதை*
*ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்.*

— என்று அமெரிக்காவில் கறுப்பின மக்கள் வாழும் சேரிகளைப் பற்றி மனம் குமுறிப் பாடினார் கறுப்பினப் பாடகி டிரேஸி சாப்மன்.

விண்ணை முட்டும் 150 மாடிக் கட்டிடத்தின் மொட்டை மாடியில் நின்று கொண்டு, கியூபா முதல் சீனம் வரை, உலக மக்கள் அனைவருக்கும் ஜனநாயகமும் மனித உரிமையும் வழங்கப்பட வேண்டும் என்று முழங்குகிறார் கிளின்டன்.

அந்தக் கட்டிடத்தின் நிலவறையில் புதைந்திருக்கும் வியர்வைக் கடையிலிருந்து ஒரு குரல் கேட்கிறது. ''நாங்கள் நாய்களைப் போலத் தின்கிறோம்; பன்றிகளைப் போல வாழ்கிறோம்'' என்கிறார் 66 வயதான சோன் லீ என்ற சீனத் தொழிலாளி.

வால் - மார்ட் சட்டை அணிந்து, கென்டகி சிக்கன் தின்று, கோக் குடித்து ஏப்பம் விட்ட பாமரேனியன்களும், சீமைப் பன்றிகளும் ''மனித உரிமை வாழ்க'' என்று கைதட்டுகின்றன.

● சூரியன்






படிப்பகம்

www.padippakam.com

சீனச் சிறுகதை:

# தேர்தல்

● குவின் ஜாவோ யாங்

*இது சீனப் புரட்சியின் ஐம்பதாவது ஆண்டு. புரட்சிக்குப்பின்னால் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் என்ற அரசமைப்பின் கீழ் நடைபெற்ற தேர்தலை விளக்குகிறது இந்தக் கதை. "கம்யூனிஸ்டு நாடு என்றால் தேர்தலே கிடையாது, கட்சியின் சர்வாதிகாரம்தான்" என்றும், நமது நாடுதான் ஜனநாயக நாடென்றும் முதலாளித்துவப் பத்திரிகைகள் தொடர்ந்து பொய்ப்பிரச்சாரம் செய்கின்றன.*

*இந்திய ஜனநாயகத்தின் யோக்கியதையை நாம் புதிதாக அம்பலப்படுத்தத் தேவையில்லை. கேடிகள், கிரிமினல்கள், திருடர்களைத் தவிர வேறு யாரும் வேட்பாளராகவே நிற்க முடியாது என்பதை மக்களே அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறார்கள்.*

*சீனத்திலோ, மக்களுக்குத் தொண்டாற்றி, மக்களின் மதிப்பையும் அங்கீகாரத்தையும் பெறாத யாரும் வேட்பாளராகக் கூடப் போட்டியிட முடியாது என்பதையும், வேட்பாளரின் குறைநிறைகள் மக்கள் மத்தியில் அலசி ஆராயப்படும் என்பதையும் இச்சிறு கதை தெளிவுபடுத்துகிறது.*

*அனைத்துக்கும் மேலாக, பெண் விடுதலை, பெண்களின் குடும்ப, சமூக, அரசியல் அடிமைத் தனங்களை எதிர்த்த போராட்டம் உழைக்கும் மக்கள் மத்தியில் எப்படி நடத்தப்பட்டிருக்கிறது என்பதை அலங்காரங்கள் இன்றி மிகச் சாதாரணமாக விவரிக்கிறது இக் கதை.*

*இந்தியாவைப் போலவே மிகவும் பின்தங்கியிருந்த சீனத்தில் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன் தேர்தலில் நின்ற ஒரு பெண் வேட்பாளரின் அனுபவம் இது. இங்கே பெண்களுக்கான ஒதுக்கீடு மூலம் பஞ்சாயத்துத் தலைவியான பெண்கள் 'அவர்' மூலம்தான் ஆட்சி நடத்தமுடிகிறது — என்ற வெட்கக்கேடும் இந்தக் கதையைப் படிக்கும் போது நினைவுக்கு வரத்தான் செய்கிறது.*

● ○ ●

இதுவே சீனத்தின் முதல் தேர்தல், நாடு முழுக்க தேர்தல், யாரைத் தேர்ந்தெடுப்பது? - அதற்காகத்தான் இன்றைய கிராமக் கூட்டம். ஒவ்வொரு பிராந்தியத்திலும் மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதிகள் எவ்வளவு என்று தீர்மானித்திருந்தார்கள். அவர்களைப் பிராந்தியத்திலிருந்து தேர்ந்தெடுத்து மக்கள் பேராயத்துக்கு (மக்கள் காங்கிரஸ்) அனுப்ப வேண்டும்.

சியாங் பிராந்தியத்திலிருந்து மூன்று பேர். ஏற்கனவே மூன்று வேட்பாளர்கள் நிற்கவைக்க முடிவு செய்யப்பட்டுவிட்டது. முதல் நபர், குவின் ஷீ ஜூ - இவர் கிராமத்தின் கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளராக கடந்த ஆறு வருசமாக இருந்து வருகிறார்; இரண்டாமவர், வாங் ஷூன் டே - பழைய பாரம்பரிய மருத்துவர், வட்டாரத்திலேயே மாதிரி மருத்துவ ஊழியர் என்று பெயரடுத்தவர்; மூன்றாமவர், குவின் ஜியா குய் - இளைஞர். இருபதே வயது. பரஸ்பர உதவிக்குழுவின் தலைவர். ஆனால் பெண்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு வேட்பாளரை நிற்க வைக்க முடிவு செய்திருக்கிறார்கள் - வேறு யாருமல்ல; குவின் ஜியா குய்யின் மனைவி, ஜாங்குயா ஃபெங்.

பின் சியாங் ஜென் எழுந்து நின்று பேசினாள். எல்லோரையும் வசீகரிக்கும் இனிய, தெளிவான குரல். "எதற்காக நான்காவது வேட்பாளர்? பரஸ்பர உதவிக் குழுவின் தலைவரான குவின் ஜியா குய் அவரது மனைவியின் உதவி இல்லாமல் இவ்வளவு சாதனைகளைச் செய்திருக்க முடியுமா? இரண்டு வருடத்துக்கு முன்னால் முதன் முதலில் அதனை அமைத்தபோது எங்களுக்கு விவசாய வேலை ரொம்பவும் புதிது. ஒவ்வொரு வீடாகச் சென்று இப்படிப்பட்ட குழு கிராமத்துக்கே அவசியம் என்று எங்கள் பெற்றோரிடமும், மாமி - மாமனிடமும் எடுத்துச் சொல்லி விளங்க வைத்தது யார்?"

"எல்லா கஷ்டமான வேலைகளையும் முதலில் எடுத்துச் செய்து முன்மாதிரியாக நின்று எங்கள் முதுகு வலியைக்கூட மறக்கச் செய்தது யார்? எவ்வளவு வேலை செய்தோம், அதற்கு எவ்வளவு கூலி என்று அளக்க முனைந்தபோது; சம உழைப்புக்குச் சம கூலி என்று வாதாடியது யார்? அது ஆணா, பெண்ணா என்று பிரித்துப் பார்க்கக் கூடாது என்று உறுப்பினர் கூட்டத்திலேயே பிரச்சனையை வைத்தது யார்? நண்பர்களே, அவள் செய்கிற வேலைகளிலேயே மூழ்கி விடுகிறாள்; யாரிடமும் பீற்றிக் கொள்வதில்லை. அதனால் அவள் ஓர் ஊழியர் என்பது மட்டுமே கிராமத்தாருக்குத் தெரியும். அவள் என்ன வேலைகளைச் செய்தாள் என்று யாருக்குமே முழுமையாகத் தெரியாது."

லி குய்ஹூவா என்ற இளம்பெண் அடுத்ததாகப் பேசுவதற்கு அனுமதி கேட்டாள். "ஒரு மாதத்துக்கு முன்னால் வட்டார மாதிரி தொழிலாளர் மாநாட்டுக்குப் பார்வையாளராகச் சென்றேன். அங்கே குவின் ஜியா குய்யின் அறிக்கையைக் கேட்டேன். அவர் பேசும்போது "கள வேலைகளுக்குச் செல்வதற்காகப் பெண்களை அழைத்து ஏற்க வைத்தேன்." என்றார். குழுவின் எல்லாச் சாதனைக்கும் தானே பொறுப்பு என்று பேசினார். சியாங்கில் ஒருமுறை மாநாட்டில் ஒரு முறை, ஆக இரண்டு முறையும் அவர் பேசியபேச்சு பச்சையான சுயதம்பட்டம். இங்கு திரும்பிவந்த பிறகு பெண்கள் கழகத் தலைவரோடு இதுபற்றிப் பேசினேன். அவர் மூலம் கிராமத் தலைவர்கள் குவின்ஜியாகுய்யிடம் இதுபற்றி விமர்சித்ததாகக் கேள்விப்பட்டேன்."

லி தொடர்ந்தாள்: "அப்போதுதான் தவறு செய்துவிட்டதாக ஒப்புக் கொண்டார். ஆனால் வட்டாரக் கூட்டத்தில் மறுபடி தன்னைப்பற்றி மட்டுமே விளம்பரம் செய்து கொண்டார். இன்றைக்கு இதுபற்றி இரண்டில் ஒன்று பார்த்துவிட வேண்டும். குயாஃபெங் என்ன உதவிகள் செய்தாள், அவள் பங்கு என்ன என்பது பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேணடும்."

ஜியா குய்யை ஒருமுறை பார்த்துவிட்டு பின்னலைப் பின்புறம் ஒதுக்கிக் கொண்டே அமர்ந்தாள் லி. சட்டென கூட்டம் அமைதியானது. எல்லோருடைய கண்களும் ஜியா குய்யை மொய்த்தன.

அவன் இதோ இப்போதுகூட எழுந்திருந்து தன் மனைவிக்கும் பங்குண்டு என்று சொல்லிவிட்டுத்தன் குறைபாடுகளை ஒப்புக் கொண்டால் கூடப்போதும் என்பதுபோல அவர்கள் பார்த்தனர். அப்படியிருந்தால் வெற்றி அவன் பக்கம் தான். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை.

பதவிகளை அனுபவித்து அனுபவித்துப் பழகிவிட்டான் ஜியா. கிராமத்தார் தன்னை ஆதரிப்பார்கள்; கைதட்டி ஆதரித்துத் தேர்ந்தெடுத்துவிடுவார்கள் என்று அவன் எண்ணியிருந்தான். தேர்தலுக்காகவே புதிதாக நீலமேல் கோட்டு கூட அணிந்து வந்திருந்தான்.

இப்போது அவனுக்கு உடம்பெல்லாம் கசகசத்தது; ஓரக்கண்ணால் மனைவியைப் பார்த்தான் - தனக்கு ஆதரவாக ஏதாவது சொல்லமாட்டாளா? "சகோதர சகோதரர்களே! ஜியா குய்யை காரண



படிப்பகம்

www.padippakam.com

மில்லாமல் பழி சொல்லாதீர்கள்..... நான் முன்னேறியிருக்கிறேன் என்றால் அதற்கு அவரது உதவியே முழுக்க முழுக்கக் காரணம்,'' - இப்படி ஏதாவது பேசமாட்டாளா?

ஆனால் அவளோ வாயே திறக்கவில்லை; தலையைத் தொங்கப்போட்டிருந்தாள்; தலைமுடி அவள் கண்களைத் திரையிட்டிருந்தது. இதுபோல ஒரு கூட்டத்தில் அவள் எப்போதும் எழுந்து நின்று பேசியதுகூட இல்லை.

''சகோதர சகோதரிகளே!'' குயின் ஜியா குய் வெறுமனே முனகினான். வாய் உலர்ந்தது. குரல் தழுதழுத்தது. ''லி குய் ஹுவா இப்போது சொன்னது உண்மையல்ல....''

லி உடனே எழுந்து அதை மறுத்தாள். ''நீங்கள் ஒரு நல்ல பரஸ்பர உதவிக்குழு தலைவர் என்பதை முழுக்க ஒப்புக் கொள்கிறேன்; நமது கிராமத்தில் உற்பத்தியை முன்னே தள்ளியதில் உங்களுக்குப் பங்கு உண்டு, நான் மறுக்கவில்லை. உங்களை ஒரு வேட்பாளராகக் கூட அங்கீகரிக்கிறேன். ஆனால் இன்றைய கூட்டம் மிக முக்கியமானது. குயாவ் ஃபெங்கின் நல்ல அம்சங்களை நான் சொல்லியே தீரவேண்டும். அப்படி என்றால் உங்களது குறைகளைச் சொல்லாமல் இருக்க முடியாது. நான் உண்மையைத்தான் சொல்கிறேன்.''

அமைதி சூழ்ந்திருந்தது. பின் வரிசையில் அமர்ந்திருந்த ஒருசில முதியவர்கள் மட்டும் ரகசியக் குரலில் பேசிக் கொண்டனர். ''இதப்போய் இந்தப் பொட்டச்சிங்க பெரிசாக்கறாங்களே. ஜியா குய்யுக்கு இதனால எவ்வளவு பெரிய அவமானம்? எத வேணுமானாலும் இவளுக சொல்லட்டும். அவங்க ரெண்டுபேரும் புருசன் - பெண்சாதி தானே? யாரைத் தேர்ந்தெடுத்தாலும் ரெண்டும் ஒன்னுதானே?''

அன்றைய தேர்தலுக்கான கூட்டத் தலைவர் குயாவ் ஃபெங்கின் வேட்பு முன் மொழிதலை ஓட்டுக்கு விட்டார். எல்லோரும் அந்த வேட்பு மனுவை ஏற்றுக்கொண்டதற்காகக் கை உயர்த்தி ஆமோதித்தனர்.

தன் மனைவி பற்றி கிராமத்தார் இவ்வளவு ஓசத்தியாகப் பேசிக்கொள்கிறார்களே என்று குயின் ஜியா குய் யோசித்தான். அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது; பிறகு கோபமும் கசப்புமாக மாறியது. அவனது குழுவிலிருந்த பெண்கள் மீது வெறுப்பு வந்தது. ''நீங்கள் சற்று முன்னேறியது உண்மையே. ஆனால் நீங்கள் முன்னேறுவதற்கே என் தலைமையல்லவா காரணம்? இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என் மீதே விமர்சனம் வைக்கிறீர்கள். உங்களுக்கு நாகரீகம் தெரியவில்லையே.'' — அவன் மனத்தில் இப்படி எண்ணங்கள் ஓடின. உடனே அந்தக் கூட்டத்திலிருந்து வெளியேறி விட நினைத்தான்.

கட்சிச் செயலர் பேசுவதைக் கேட்கக் கூட குவினுக்கு மனமில்லை. வாங் ஷுன்டேவைப் பேசச் சொல்லி கிராமத்தார் சிலர் கோரினார்கள். தலைவர் குவினைக் கூப்பிட்டார். எதுவும் அவன் காதுகளில் விழவில்லை. இரண்டாம் முறை அவர் அழைத்தபோதுதான் கிறக்கத்திலிருந்து வெளியே வந்தான் குவின்.

மேடைநோக்கி நடந்தான். இப்போதுகூட ஒன்றும் கெட்டுவிடவில்லை. எனது மனைவி குய்யா ஃபெங்கைத்



தேர்ந்தெடுங்கள் என்று ஒருசொல் கேட்டால்போதும், அவனைப் பற்றி எல்லோருமே ஒரு உயர்வான கருத்துக்கு வந்து விடுவார்கள். எப்படியாவது தன் கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவே அவன் நினைத்தான் - முஸ்தீபுடன் அவன் பேச்சு ஆரம்பித்தது.

''சகோதர, சகோதரிகளே, என்னுடைய பரஸ்பர உதவிக்குழுதான் இந்தக் கிராமத்திலேயே முதலில் துவக்கப்பட்டதாகும்....'' மறுபடி பழைய கதை. இரண்டு வருஷம் முன்னால், போன வருஷம், இப்போதைய நிலை என்று அவன் வரிசையாக நீட்டி வளைத்துப் பேசினான்.

''அடேய், எதுக்குடா பழைய கதை'' என்று கிராமத்தார் பொறுமை இழந்தார்கள்.

''உன்னோட வேலைகள் பற்றி உன் போதனையை அவிழ்க்காதே, எங்களுக்கு மனப்பாடம் ஆகிவிட்டது'' என்றார் மற்றொருவர்.

ஒரு வழியாக குவின் முடித்துக் கொண்டான். கைதட்டல் பலமாக மழை போல் கொட்டியது. அது அவனுக்காக அல்ல. அடுத்து பேச அழைக்கப்பட்ட குய்யா ஃபெங்குக்காக.

குவின், மனைவியைப் பார்த்தான். அவள் தலை சட்டென்று நிமிர்ந்தது; அவளது தோள்கள் உயர்ந்தன; அவளது கன்னங்கள் ஒளி சிந்தின; பெரிய கறுப்புக் கண்கள் சுடர்விட்டன; எல்லோரையும்விட சற்று உயரமாகக் கூட தெரிந்தாள். அவன் சற்றும் எதிர்பாராதவிதமாக அவள் தெளிவாக நிதானமாகப் பேசினாள்.

''சகோதர, சகோதரிகளே! நாம் செய்துள்ள வேலைகளைத் திரும்பிப் பார்க்கும் போது எனக்கே கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது, முதலாவதாக, இந்த வருச அறுவடையின் போது குழு உறுப்பினர்களை ஒன்று திரட்டி சிறுவர் பள்ளி ஒன்றைத் துவங்கி விட வேண்டும் என்று நான் எண்ணியிருந்தேன்; அப்படித்துவங்கியிருந்தால், தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை அங்கே விட்டுவிட்டு கள வேலைகளுக்குப் போக வசதியாக இருந்திருக்கும். அது திட்டம். ஆனால் அந்த நேரம் எனக்கு உடம்பு சுகமில்லை. நான் அந்த வேலையை முடிக்கவில்லை. பிரச்சினைகள் வரும்போது அவற்றை எதிர்த்துப் போராடி காரியத்தைச் சாதிக்கும் மனஉறுதி என்னிடம் போதிய அளவு இல்லை. இது என்னுடைய தவறு. அடுத்ததாக, பரஸ்பர உதவிக் குழுவை நிறுவி மூன்றாண்டுகள் ஆகியும் இன்னமும் இது ஓர் கூட்டுறவுச் சங்கமாக வளரவில்லை. அதற்குத் தகுந்த முயற்சியை நான் மேற்கொள்ளவில்லை... நான் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இல்லையென்றாலும் இந்த இரு விஷயங்களுக்காக நான் உழைக்கப் போகிறேன்.''

கூட்டம் அவளது நேர்மையைப் பாராட்டியது; கைதட்டி அங்கீகரித்து ஆரவாரம் செய்தது.

லி குய் ஹுவா ஓடிப்போய் அவளை அணைத்துக் கொண்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

''நடந்ததை எண்ணிப் புலம்பாமல் வரப் போகிற காலத்தில் என்ன செய்ய வேண் டும் என்று குய்யா ஃபெங் பார்க்கிறாள். இப்படித்தானே வேட்பாளர் இருக்க வேண்டும்?'' அவள் கூட்டத்தைப்பார்த் துச் சொன்னாள்.

திடீரென குய்யாவின் மாமியார் எழுந்து நின்றாள். ''இதென்னய்யா கொடுமை! நம்மூருக்கு மூணு பிரதிநிதி கள்தான் அனுப்ப முடியும். நீங்க நாலு பேரை வேட்பாளரா நிப்பாட்றீங்க. கட்சி செயலாளருக்கு எல்லாரும் ஓட்டு போட் டுப்புடுவாங்க; டாக்டரய்யாவுக்கு யாரா வது ஓட்டுப் போடாம இருப்பாங்களா, அவருக்கும் போட்டுப்புடுவாங்க. கடை சில எம்மவனுக்கும் மருமவளுக்கும் தான்போட்டியா?'' என்று வெளிப்படை யாக அரற்றத் தொடங்கினாள்.

மாமியார்க்காரியின் பிரச்சினை என்ன என்று எல்லோருக்குமே தெளி வாகத் தெரிந்தது. மருமகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் மகன் நிலைகுலைந்து போவான். ஏற் கெனவே கூட்டத் தலைவர் கூட் டம் முடிந்ததை அறிவித்துவிட் டார். மாலையில் தேர்தல் நடக் கும். மாமியாரின் பிரச்சினை யைப் பற்றி யாரும் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை.

இது தேர்தல். பாரபட்சம் காட்ட முடியாது. யார் நல்லவர் என்றாலும் அவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அதில் ஆண் என்ன, பெண் என்ன? மகனா, மருமகளா என் பதற்கெல்லாம் இங்கென்ன வேலை?

● ○ ●

குவின் ஜியா குய் நேரே வீடு சென்றான். ஒரு வார்த்தை யும் சொல்லாமல் படுக்கையில் பொத்தென்று விழுந்தான்.

அவனது தாய்க்குச் சமையலில் உதவி செய்தவாறு குய்யா ஃபெங் கல கலவென்று பேசிக் கொண்டிருந்தாள். குவினுக்கு அது பொறுக்கவில்லை.

''ஏய் இங்கே வா'' அவன் கத்தி னான்.

அவள் உள்ளே வந்தாள். அவள் கைகளில் மாவு, முகத்தில் சிரிப்பு.

''கூட்டத்தில் என்னவெல்லாம் பேசினே? பெரிய இவன்னு நெனப் போ?''

''ஏன், அப்படி என்ன தப்பாப்பேசி னேன்?'' குய்யா அதிர்ச்சி அடைந்தாள்.

''எதற்காக அப்படிப் பேசினாய்? நம் குழு மூன்று வருசத்தில் கூட்டுறவுச் சங்கமா வளரல்லேன்னு பேசினியே. எதற்காக அப்படிச் சொன்னே?''

''சே, நீ எப்படிப்பட்ட ஆளுன்னு தெரிஞ்சு போச்சு'' குய்யா பொங்கி விட் டான். அவள் நேர்மையானவள், சூது வாது தெரியாதவள். குவின் அப்படிக் கேட்டது அவளுடைய ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது.

அப்படியே தொடுத்துத் தொடுத்து சண்டை வளர்ந்தது. இரண்டு பேரும் சாப்பிடவில்லை.

மாமியார்க்காரியும் திணறினாள். மருமகள் மீது தப்புச் சொல்ல முடியாது; மகனைத் திட்டவும் முடியாது. கையைப் பிசைந்தாள்; பெருமூச்சு விட்டாள்; முன கினாள். கொதிக்கும் மனதை யாரிடமா வது கொட்டி ஆற்ற வேண்டும் போல அவளுக்குத் தோன்றியது. அதன் விளைவு என்ன ஆகும் என்று அவள் யோசிக்கவில்லை.



வெளியே சென்றாள். பெண்கள் கழகத் தலைவர் முதலில் அகப்பட்டார், ''தலைவரே, முதல்லேயே தலைப்பாடா அடிச்சுகிட்டேன். ரெண்டு பேரையும் நிக்க வெக்காதீங்கன்னு, கல்யாணம் கட் டினதுலேருந்து இப்படி அவுங்க அடிச்சு கிட்டு நின்னதில்லே' அவங்க ரெண்டு பேரும் சாப்பிடக்கூட இல்லே...''

அடுத்து லி குய் ஹுவா, அதற்க டுத்து மருமகளை வேட்பாளராக முன் மொழிந்த 'யின்' என்ற பெண்... எல்லோ ரிடமும் வீட்டில் நடந்த சண்டையை வரி விடாமல் கொட்டித்தீர்த்தாள்.

'யின்' பக்கத்து வீடுதான். சண்டை யின் உச்சத்தில் அவன் கத்தியதெல்லாம் அவளுக்கும் காதில் விழுந்தது. கேட்டு உள்ளுக்குள்ளே கொதித்துக் கொண்டி ருந்தாள்.

செய்தி கேள்விப்பட்டு அநேகமாக கிராமத்தில் பெண்களும் ஆண்களு மாய்ப் பலர் கூடிவிட்டார். ''இவ்வளவு மோசமானவனா குவின்?'' எல்லோர் மனத்திலும் அந்தக் கேள்வி எழுந்தது.

● ○ ●

மாலை நேரம் வந்தது, தேர்தல் நடந்தது. முடிவு எல்லோருக்குமே அதிர்ச்சி தந்தது. குவினுக்கு மூன்றே ஓட் டுக்கள். மற்ற எல்லோரும் குய்யா ஃபெங்குக்கு ஓட்டுப் போட்டிருந்தார்கள்.

குவினால் தாங்க முடியவில்லை. கூட்டம் முடிவதற்கு முன்னே அவன் கிளம்பிவிட்டான். அவன் தாய் அவ னைத் துரத்திக்கொண்டு ஓடினாள் - அழுது புலம்பிக் கொண்டே.

பெண்கள் கழகத் தலைவ ரும், அடுத்த வீட்டுக்காரியும் வந்து பார்த்தபோது அவன் படுக்கையில் படுத்துத் தலைய ணையால் முகத்தை மூடியிருந் தான்.

அவர்கள் சமாதானமாய்ப் பேசிப் பார்த்தார்கள். அவன் பதில் பேசவில்லை, கிராமத்தி லிருந்தே தன்னைத் தள்ளி வைத்து விட்டதைப் போல அவன் நினைத்துக் கொண் டான். எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் ஏதும் கேட்காததால் அவன் அம்மாவும் படுத்துவிட் டாள். நீண்ட நேரம் அவளது முணுமுணுப்பு மட்டும் கேட்டுக் கொண்டேயிருந்தது.

குய்யா ஃபெங் எல்லோ ரையும் திருப்பியனுப்பினாள்; தானே பேசுவதென்று முடிவு செய்தாள். குவினின் முகத்தை மூடியிருந்த தலையணையை அகற்றி னாள். அவன் கண்களில் நீர் திரண்டு வழிந்தது. அவள் அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். ''ச்சீ... உன் மேல எனக் கொண்ணும் கோபம் இல்ல. ஆனா நீ கொஞ்சம் யோசிச்சுப் பாக்கணும்'' நெஞ்சை நீவிவிடுவது போல இதுமாகச் சொன்னாள்.

''ம்... யோசிச்சுப் பாக்கறேன்'' சொல்லும்போதே அவன் குரல் அடைத் தது; கண்களில் நீர் திரண்டது.

மூலம்: சீனச் சிறுகதைத் தொகுப்பு ''ஐம்பதாம் ஆண்டுகளின் சீனக் கதைகள்'' (1984)
தமிழில்: புதூர் இராசவேல்.



படிப்பகம்

www.padippakam.com

## 'தவிப்பு' - நூல் விமர்சனம்

# "துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியலதிகாரம் பிறக்கிறது" அரசியல் சித்தாந்தமல்ல

✦ துப்பாக்கியால் ஞானஸ்நானம் பெற்றவர்களெல்லாம் போராளிகளா? ✦ நீதியற்ற வழிமுறைகளைக் கோருகிற இலட்சியம் நீதியான இலட்சியமா? ✦ உயிரைத் துறக்கும் போராளிக்கு நேர்மையைத் துறக்கும் உரிமை உண்டா?
நாவல் விமரிசனத்தினூடாகப் பரிசீலிக்கப்படும் கேள்விகள் இவை.

ஆனந்த விகடனில் தொடர் கதையாக வெளிவந்த ஞாநியின் (பத்திரிகையாளர்) 'தவிப்பு' எனும் நாவல் நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

இந்த நூல் வெளியீட்டுக் கூட்டத்தில் பேசிய 'நந்தன்' சிறப்பாசிரியர் சுப. வீரபாண்டியன், தனித்தமிழ்நாட்டிற்கான நியாயங்களை ஞாநி நேர்மையாக, தெளிவாகக் குறிப்பிட்டுள்ளாரென்றும், எனவே அந்த வகையில் உள்ளடக்கத்தில் தனக்கு முரண்பாடு இல்லை என்று கூறியிருக்கிறார்.

"பஞ்சாப், அசாம் மாநிலங்களில் நடந்த போராட்டங்களும் அவற்றை டெல்லி ஆட்சியாளர்கள் எதிர்கொண்ட விதமுமே இந்தக் கதைக்கு ஆதார நிகழ்ச்சிகள். அவற்றைத் தமிழ்ச் சூழலுக்குப் பொருந்துவதாக மாற்றி அமைத்துக் கற்பனை செய்திருக்கிறேன்" என்று தன் முன்னுரையில் கூறுகிறார் ஞாநி.

தனி நாடா - இல்லையா என்பது குறித்த அரசியல் விவாதம் நமது நூல் விமரிசனக் கட்டுரையின் வரம்புக்கு அப்பாற்பட்டது.

ஆனால், ஈழ விடுதலை இயக்கங்களுக்கும், தமிழ்நாட்டில் தற்போது பேசப்படும் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் இருக்கின்ற தொப்பூள் கொடி உறவை மறுக்கவியலாது.

இனி கதைக்கு வருவோம்.

● ○ ●

இந்திய ஒருமைப்பாடு, அநீதிக்கெதிரான மிதவாத எதிர்ப்பு ஆகிய கொள்கைகளில் நம்பிக்கை கொண்ட, அரசியலெல்லாம் அதிகம் தெரிந்து கொள்ளாத தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளரான விஜயன்,

தனது சொந்த ஊரான செங்கல்பட்டில் பல இடங்களில் குண்டு வெடித்த செய்தியைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைகிறான். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள் அவனுக்கு உள்துறை அமைச்சகத்திலிருந்து அழைப்பு வருகிறது.

குண்டு வெடிப்பை நடத்திய தமிழ் நாடு விடுதலைப் புரட்சியாளர் குழு (தவிப்பு) என்கிற அமைப்பின் தலைமைக் குழுவினருடைய புகைப்படங்கள், வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய கோப்பினை விஜயனிடம் காட்டுகிறார் உளவுத்துறைத் தலைவர்.

விதவிதமான உயர்கல்வி கற்ற தமிழ் இளைஞர்களின் படங்களுக்கு நடுவே ஆனந்தி! அவனுடைய கல்லூரித் தோழி. நம்ப முடியாமல் அந்தப் புகைப் படத்தையே வெறித்துக் கொண்டிருந்த விஜயனிடம் "உங்களுக்கு இவளைத் தெரியுமா?" என்று கேட்கிறார் உளவுத் துறை அதிகாரி. "தெரியும்" என்கிறான் விஜயன். "அது எங்களுக்கும் தெரியும்" என்று பதில் வருகிறது.

மறுநாளே தவிப்பு குழுவினர் சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குனரைக் கடத்தி விட்டனர் என்ற செய்தி வருகிறது. தவிப்பு குழுவினரைச் சந்தித்துப் பேசும் பொறுப்பு விஜயனிடம் ஒப்படைக்கப்படுகிறது. விஜயன் புறப்படுகிறான்.

ஆனந்தியின் புகைப்படத்தைப் பார்த்தது முதல் அவளை நேரில் சந்திக்கும் தருணம் வரை விஜயனின் சிந்தனையில் ஆனந்தியைப் பற்றிய பழைய நினைவுகள் கிளர்ந்தெழுகின்றன.

- விஜயனின் நினைவுகளினூடாக ஆனந்தியின் பாத்திரம் நாவலில் நிறுவப்படுகிறது.

ஆனந்தியை நேரில் சந்திக்கிறான் விஜயன், "நீ எப்படி இந்த வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தாய்" என்று கேட்கிறான். எண்பதுகளில் போலீசால் கொலை செய்யப்பட்ட நக்சல்பாரி இயக்கத் தோழர் பாலனின் (நாவலில் ராஜன்) கதையைச் சொல்லி, "அதுவரை வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தமேயில்லை" என்று அப்போதுதான் தெளிந்ததாகச் சொல்கிறாள் ஆனந்தி.

தனித் தமிழ்நாடு கேட்பதற்கான நியாயங்கள் குறித்து ஆனந்தியும் அவளது தோழர்களும் வைத்த வாதங்கள் எதற்கும் விஜயனிடம் பதில் இல்லை. ஆனால் வன்முறை இதற்கு வழியல்ல என்ற கருத்து அவனிடம் ஓங்கி நிற்கிறது.

தவிப்பு குழுவினரின் கோரிக்கைகளில் சில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தனடிப்படையில் நிலைய அதிகாரி விடுவிக்கப்படுகிறார்.

ஆனால் இந்தப் பேச்சு வார்த்தையினூடாக தவிப்பு குழுவினருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட மத்திய உள்துறை அமைச்சன், தன்னைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கூறுகிறான். 'எச்சரிக்கையாகப் பயன்படுத்துவது' என்று முடிவு செய்கிறது தவிப்பு.

பணமும் ஆயுதங்களும் ஏற்பாடு செய்து தருகிறது உளவுத்துறை. குழுவினரிடம் குடிப் பழக்கமும் உல்லாசமும் பரவுகிறது. பணத்துக்காக போதை மருந்து கடத்தல் துவங்குகிறது.

ஆனந்தியும் சில தோழர்களும் எதிர்க்கின்றனர். பிறகு ஒரு நாள் சக தோழர்களாலேயே கொல்லப்படுகின்றனர்.

● ○ ●

விஜயன் அழுகிறான். தன்னைப் போல தெளிவு பெற வாய்ப்பு இருந்தவர்களெல்லாம் வேடிக்கை பார்க்கிறவர்களாக மட்டுமே இருந்துவிட்டதனால் தான், டெல்லியில் அதிகாரத்தில் வந்து அமரும் யாரோ ஒருவனின் அயோக்கியத் தனத்துக்காக அன்பும் அறிவும் ததும்பும் இளைஞர்கள் பலியாக்கப்படுகிறார்கள். எனவே அரசியலில் ஈடுபடுவதென முடிவு செய்கிறான்.

செங்கல்பட்டில் இடைத் தேர்தலில் நிற்கும் மத்திய உள்துறை அமைச்சருக்கெதிராகப் போட்டியிட்டு வெல்கிறான்.

● ○ ●

ஒரு அமைச்சன் தனது சொந்த அரசியல் லாபத்துக்காகப் போராளிக் குழுவொன்றைப் பகடைக் காயாக்கிக் கொண்டான் என்பதல்ல பஞ்சாப், அசாம், காஷ்மீர் பிரச்சினைகளின் அனுபவம். உறவாடி, ஊடுருவி, கைக்கூலி



படிப்பகம்

www.padippakam.com

களை உருவாக்கிக் கெடுப்பது என்பது, 'ஒருமைப்பாட்டையும்', பிராந்திய மேலாதிக்கத்தையும் காப்பாற்ற இந்திய அரசு மேற்கொள்ளும் போர்த் தந்திரமாகவே உள்ளது.

அதேபோல ஆனந்தியுடனான விஜயனின் நட்பும், அவனிடம் தங்கிக் கிடக்கும் ஆனந்தியைப் பற்றிய நினைவுகளும், எட்டாண்டுப் பிரிவை நியாயப்படுத்துவனவாக இல்லை.

ஆனந்தியின் மரணத்தினால் குற்ற உணர்வுக்கு ஆளாகும் விஜயன், அதிகாரிகள் - அமைச்சர் - உளவுத்துறை ஆகிய அனைவரிடமும் நெருங்கியிருந்து குடுபட்ட பின்னரும், நம்பிக்கையுடன் தேர்தலில் நிற்கிறான் - வெல்கிறான். இது வலிந்து ஒட்டவைக்கப்பட்ட முடிவாக இருக்கிறது.

- இவ்வாறு நாவலின் பாத்திரப் படைப்பு, கலைத் தன்மை, ஒத்திசைவு ஆகியவற்றை நாவலின் வரம்புக்குள்ளேயே நின்று விமரிசிக்கலாம்.

ஆனால் நாவலின் மையமான கதாபாத்திரங்களான போராளிகள், அவர்களது சிந்தனை, நடவடிக்கைகள், அவை எழுப்பும் கருத்தியல் ரீதியான வினாக்கள் ஆகியவற்றினூடாக 'விடுதலை இயக்கம்' என்பதைப் புரிந்து கொள்வது அதைவிட முக்கியமானது.

இதை ஒரு இயக்கத்தின் கதையாகச் சொன்னால், தியாக உள்ளம் கொண்ட படித்த இளைஞர் குழுவொன்று சிறிது வழி தவறியதால் அழிந்த கதை என்று சொல்லலாம்.

அல்லது ஆனந்தியின் கதையாகச் சொல்வதென்றால், கவிதை உள்ளமும் தலைமைப் பண்புகளும் கொண்ட ஒரு பெண், சக தோழர்களின் தவறுகளால் அநியாயமாகப் பலியான கதை என்று சொல்லலாம்.

"தொடர்கதை முடிவடைந்து பத்து மாதங்களுக்குப் பிறகும் எங்கேனும் சந்திக்கும் ஏதோ ஓர் வாசகர் 'ஆனந்தி செத்துப் போயிருக்க வேண்டியது அவசியம் தானா?' என்று கேட்டுக் கொண்டுதானிருக்கிறார். எனக்குள்ளும் அதே கேள்வி இருக்கிறது" - என்று தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார் ஞாநி.

கதை சொல்லப்பட்டிருக்கிற முறையிலும் சரி, வாசகர்கள் பழக்கப்பட்டிருக்கும் முறையிலும் சரி, இது ஆனந்தியின் கதைதான். எனவே ஆனந்திக்காக வாசகர்கள் வருந்துவதில் வியப்பில்லை.

"பலவீனமில்லாத இயக்கம் இருக்க முடியாது; போராளிகள் மடிந்தாலும் போராட்டம் தொடரும் என்று முடித்திருக்க வேண்டும்" என்று கருத்துத் தெரி




வித்திருக்கிறார், சுப. வீ.

தவிப்பு இயக்கத்தின் பலம் எது பலவீனம் எது? ஆனந்தி உயிர் பிழைத்திருந்தால் - ஆனந்த விகடன் வாசகர் அடையக்கூடிய மன ஆறுதலுக்கு மேல் - வேறென்ன நடந்திருக்கும்? தேர்தல் பாதையில் நம்பிக்கை கொண்ட விஜயனும் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட ஆனந்தியும் உண்மையில் அரசியல் எதிர்த்துருவங்களா?

இந்தக் கேள்விகளுக்கு நாம் விடை காண முயல வேண்டும்.

● ○ ●

"ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், நல்லெண்ணம் மிக்க சில முட்டாள்தனமான நம்பிக்கைகள் அறிஞர்களின் மூளைகளில் 'தேவையான முறையில்' தோன்றுகின்றன" என்றார் பிளக்கானவ்.

அத்தகைய அறிஞர்கள் 'வீரர்களாகவும்' ஆகிவிடும்போது அவர்கள் தம்மை உயர்வகை மானிடர்களாகப் 'பணிவுடன்' கருதிக் கொள்கிறார்கள்.

அவர்கள் மக்களை எவ்வளவுதான் நேசித்தாலும் மக்களை பூச்சியங்களின் கூட்டம் என்றே 'அன்புடன்' மதிப்பிடுகிறார்கள்.

பூச்சியங்களுக்குத் தலைமை வகிப்பதன் மூலம் அவற்றுக்கு மதிப்பை ஏற்படுத்தித் தருகின்ற "எண்கள்" என்ற தகுதியில், மக்களின் ஜீவமரணப் பிரச்சினைகளில் அவர்களை ஈடுபடுத்தாமலேயே, அவர்கள் மத்தியில் பணியாற்றாமலேயே, அவர்களுக்காக முடிவெடுக்கும் உரிமையைத் தம் கையிலெடுத்துக் கொள்கிறார்கள். இது தம்முடைய தியாகத்துக்கு மக்கள் வழங்க வேண்டிய 'நியாயமான விலை' என்று உளப்பூர்வமாக நம்புகிறார்கள்.

எதார்த்தமே கொள்கையின் உரைகல்லாக இருக்க வேண்டும் என்ற விஞ்ஞானத்தை இவர்கள் மறுக்கிறார்கள். தங்கள் சொந்த மன உணர்வுக்கேற்ப யதார்த்தத்தைப் பிசைந்து கொள்கிறார்கள்.

இத்தகையவர்கள்தான் தவிப்பு குழுவினர்.

**சிந்தனை ஒன்று - முகங்கள் மூன்று!**

மக்களாகிய மந்தைகள் மீது ஒரு வகை வெறுப்புக் கொண்ட குமாரசாமி; அனுதாபம் கொண்ட ஆனந்தி. இவ்விரண்டும் ஒரே நடுத்தர வர்க்க சிந்தனையின் இரண்டு முகங்கள்.

பண்பாட்டு விழுமியங்கள், கலை ரசனை, அறநெறிகள் போன்ற அனைத்திலும் குமாரசாமியுடன் தீவிரமாக வேறுபடும் ஆனந்தி தனித் தமிழ்நாடு என்ற அரசியல் கொள்கையில் மட்டும் உடன்படுவதால் இருவரும் தவிப்பு குழுவின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள்.

மற்றெல்லாவற்றிலும் ஆனந்தியுடன் ஒத்திசைவு கொண்ட விஜயன், வன்முறைப் பாதையை மறுக்கின்ற ஒரே காரணத்தால் அந்நியன்.

விஜயனும் ஆனந்தியும் வேறானவர்களா? இல்லை. இவர்களும் கூட அதே சிந்தனையின் இரண்டு முகங்கள்தான்.

அதனால்தான் ஆனந்தி ஒரு தீவிரவாதக் குழுவின் உறுப்பினர் என்று கேள்விப்பட்டதும் அதிர்ச்சியடைகிறான் விஜயன். "பொருந்தாத பொருட்கள் - ஆனந்தியும் துப்பாக்கியும், ஆனந்தியும் வெடிகுண்டும். ஆனந்தியும் கடத்தலும். இவை எப்படிப் பொருந்த முடியும்" என்று அதிசயிக்கிறான். அவளை நேரில் சந்திக்கும்போது கேட்கிறான்.

ஆனந்தி பதில் சொல்கிறாள்: "எங்களுக்கும் இந்த வன்முறை சம்மதம் இல்லைதான்... அதன் மொழியில் பேசினால்தான் அதற்குப் (அரசுக்கு) புரிகிறது என்பதால் குண்டுகளை வெடிக்க வேண்டியிருக்கிறது."

"ஒரு நல்ல நண்பனோடும் இடைவெளி வைத்துப் பேச வேண்டிய நிலைக்கு என்னைத் தள்ளியிருக்கிற சூழ்நிலை எனக்கு அலுப்பாக இருக்கிறது. இந்த வன்முறைகள் எப்போது முடியும் என்ற தவிப்பு என்னை அலைக்கழிக்கிறது... இதையெல்லாம் செய்தாக வேண்டிய கட்டாயத்துக்கு எங்களைத் தள்ளியிருக்கிற உங்கள் அரசாங்கம் மீது எனக்கு மேலும் மேலும் வெறுப்பாயிருக்கிறது. நிறைய முகமூடிகளை அணிந்து கொண்டு போராட வேண்டியிருப்பது



படிப்பகம்

www.padippakam.com

அலுப்பாக இருக்கிறது... ஒவ்வொரு முகமூடியாக உதற வேண்டியிருக்கிறது. வன்முறை கூட ஒரு முகமூடிதான். எங்கள் உண்மையான முகங்கள் வேறு. நீ அதைப் புரிந்து கொண்டால் நான் எவ்வளவு சந்தோஷப்படுவேன்.''

ஆம்! ஆனந்தியும் துப்பாக்கியும் பொருந்தாத பொருட்கள்தான் என்று அவளே விளக்கிவிட்டாள். இந்தக் குமுறலைக் கொஞ்சம் கூர்ந்து கவனியுங்கள்.

**கட்டாயத்துக்கு ஆளானவர்கள்!**

''இதையெல்லாம் செய்தாக வேண்டிய கட்டாயத்திற்கு எங்களைத் தள்ளியிருக்கும் அரசாங்கம்...'' - எதையெல்லாம்? நகரின் மத்தியில் குண்டு வைத்து பொதுமக்களைக் கொல்வது போன்ற 'புரட்சிகர' நடவடிக்கைகளையெல்லாம்!

கட்டாயத்திற்கு ஆளானவர்கள்! எப்பேர்ப்பட்ட புகழ்மிக்க சொற்றொடர்! தனது சொந்த நடவடிக்கைக்கான தார்மீகப் பொறுப்பிலிருந்து நடுத்தர வர்க்கம் விடைபெற்றுக் கொண்டுவிட்டது!



யூதர்களைக் கொலை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு மனிதாபிமானமுள்ள ஜெர்மன் அதிகாரிகளை உள்ளாக்கிய நாஜி அரசு, நம்மூரின் 'நேர்மையான' அதிகாரிகளை ஊழலுக்கு உடன்பட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கும் அமைச்சர்கள், 'முற்போக்கு' இளைஞர்களை வரதட்சிணை வாங்கும் கட்டாயத்திற்கு ஆளாக்கும் பெற்றோர்கள்!

இந்த இரண்டு வார்த்தைகள் அளிக்கும் தார்மீகப் பாதுகாப்பில்தானே நடுத்தர வர்க்கம் வாழ்ந்து கொண்டிருக்கிறது!

அப்படியானால் இந்த வன்முறைக்கு யார் பொறுப்பேற்பது? 'இந்த வன்முறை கூட ஒரு முகமூடி தான்' என்று கூறி தார்மீகப் பொறுப்பை முகமூடியின் மீது சுமத்துகிறாள் ஆனந்தி. ''நிறைய முகமூடிகளை அணிந்து கொண்டு போராட வேண்டியிருப்பது அலுப்பாக இருக்கிறது'' என்கிறாள்.

**புரட்சி என்பது முகமா, முகமூடியா?**

விந்தை! ஒரு சராசரி மனிதன், தனக்கு ஏற்கனவே அணிவிக்கப்பட்டிருக்கும் முகமூடிகளை ஒவ்வொன்றாகக் கழற்றியெறியும் முயற்சியினூடாகத் தான் புரட்சியாளனாக மாறுகிறான். சாதி, மதம், இனம், சமூக அந்தஸ்து, தகுதி போன்ற பல முகமூடிகளைப் பிய்த்தெறியும் துன்பமும் புரட்சியாளனாக, முரணற்றவனாக உருவாகும் இன்பமும் பிரிக்கவொண்ணாதவை.

வன்முறை என்பது புரட்சியாளனின் முகமூடி அல்ல; சூழ்நிலையின் கைதியாக, தன் சொந்த விருப்பத்துக்கு விரோதமாக ஈடுபடும் இழிந்த நடவடிக்கையல்ல வன்முறை.

ஒரு புரட்சிகர அமைப்பும் அதன் உறுப்பினரும் சுதந்திரமாக, அறிவுபூர்வமாகச் சிந்தித்து உணர்வு பூர்வமாக ஈடுபடும் நடவடிக்கை. உயிருக்குப் போராடும் மனிதனைக் காப்பாற்றுவதும், எதிரியைக் கொலை செய்வதும் அவனது உணர்வு பூர்வமான நடவடிக்கைகள் தான்.

ஆனால் ''நான் அவளில்லை'' என்கிறாள் ஆனந்தி. அவள் விஜயனின் 'பழைய' ஆனந்திதான். புரட்சிக்காரி என்பதுதான் அவளுடைய முகமூடி. அதனால்தான் அவளுக்கு **'அலுப்பாக'** இருக்கிறது.

**தமிழன் திருந்த மாட்டான்!**

தங்களது சொந்த மன உணர்வின் அடிப்படையில் சமூக நிலைமையை மதிப்பிட்டதால் தோன்றுவது தவிப்பு; அதே மன உணர்வுக்கு மக்களும் வரவில்லை என்பதால் ஏற்படுவது அலுப்பு.

இதே அலுப்புதான் 'தமிழன் திருந்த மாட்டான்' 'தமிழனுக்குச் சொரணை இல்லை' என்று அறிஞர்களைப் பேச வைக்கிறது. ''எனக்கென்ன வந்தது, நான் வசதியாக வாழ்ந்து விட்டுப் போயிருக்கலாம்'' என்று அங்கலாய்க்க வைக்கிறது.

தமது வாழ்க்கை வசதிகளை விட்டொழித்ததன் மூலம் தங்களது விடுதலையைச் சாதித்துள்ளதாக அவர்கள் கருவதில்லை. ''உங்களுடைய விடுதலைக்காக மற்றவர்கள் இழக்க விரும்பாததை நான் இழந்தேன்'' என்று மக்களுக்கு நினைவு படுத்துகிறார்கள். ''நினைத்திருந்தால் நான் நடுத்தர வர்க்க அற்பனாகவே வாழ்ந்திருக்க முடியும்'' என்று சொல்வதன் மூலம், தற்போது தான் அணிந்திருப்பது முகமூடிதான் என்பதை மக்களுக்கு நினைவு படுத்துகிறார்கள்.

இந்த முகமூடிக்காரர்களின் அலுப்பின் உள்ளே உறைந்திருப்பது நடுத்தர வர்க்க மேட்டிமைத்தனம்; பூச்சியங்களுக்குத் தலைமை தாங்கும் 'எண்களின்' அகம்பாவம்!

இந்த அலுப்புதான் பொருளாதாரம், அரசியல், பண்பாடு ஆகியவை குறித்த அறிவியல் பூர்வமான ஆய்வுகளை ஏளனத்துடன் நிராகரிக்கிறது. தங்கள் சொந்த நடைமுறை குறித்த விமரிசனங்களை வன்மத்துடன் எதிர்கொள்கிறது.

**எயிட்ஸ் விளம்பரத்தின் நீதி!**

நாவலுக்கு வருவோம். ''ஆயுதம் தருகிறேன், பயிற்சி தருகிறேன், பணமும் தருகிறேன். என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று தவிப்பு குழுவினரிடம் கூறுகிறான் உள்துறை அமைச்சன்.

''அவ்வாறு பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை'' என்று கருதுகிறது மத்தியக் குழுவின் பெரும்பான்மை. **'இது ஆபத்தானது'** என்கிறாள் ஆனந்தி.

இது இலட்சியத்துக்கு எதிரான நடைமுறை என்றோ, நெறி தவறிய செயல் என்றோ ஆனந்தி கூறவில்லை. இதிலிருக்கும் 'ஆபத்தை' மட்டுமே சுட்டிக் காட்டுகிறாள்.

ஆபத்து எதில்தானில்லை? ஆர்ப்பாட்டம் நடத்தினால் துப்பாக்கிச் சூடு நடக்கும் ஆபத்து இருக்கிறது; ஆதிக்க சக்திகளை எதிர்த்தால் கொலை செய்யப்படும் ஆபத்து இருக்கிறது; ஏன், உண்ணாவிரதம் இருந்தால்கூட செத்துப் போகும் ஆபத்து இருக்கிறது.

உளவுத்துறையைப் பயன்படுத்துவது என்ற முடிவு தங்கள் இலட்சியத்



படிப்பகம்

www.padippakam.com

திற்கு ஏற்படுத்தும் ஆபத்தையோ, தங்கள் நாணயத்திற்கு ஏற்படுத்தும் ஆபத்தையோ, மக்களுக்கு ஏற்படுத்தவிருக்கும் ஆபத்தையோ ஆனந்தி கருதவில்லை. தங்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை எண்ணியே கவலைப்படுகிறாள்.

எயிட்ஸ் தடுப்பு விளம்பரங்களும் கூட இப்படித்தான் சொல்கின்றன. ''உங்கள் மனைவியைத் தவிர யாருடனும் உறவு வைத்துக் கொள்ளாதீர்கள் அப்படி வைத்துக் கொள்வதென்றால் ஆணுறை அணியுங்கள்.''

முதல் வரியில் ஒழுக்கக் கோட்பாடு. இரண்டாவது வரியில் ஆபத்தைத் தடுக்கும் எச்சரிக்கை. ஆணுறை அணிந்து ஆபத்தைத் தவிர்ப்பவர்களின் கள்ளத்தனம், அதன் காரணமாகவே நல்லொழுக்கமாகி விடுமா?

**தந்திரங்கள்!**

ஆம். அப்படித்தான் ஆகிவிடுகிறது! இந்திய உளவுத்துறை, இந்திய இராணுவப் பயிற்சி ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டபோதும் அமைதிப் படையை எதிர்த்து நின்றதனால் புலிகள் நெறி தவறாதவர்களாகி விட்டார்கள்; அது மட்டுமல்ல, ''எச்சரிக்கையாகப் பயன்படுத்திக் கொள்ளும்'' இந்தக் கோட்பாடு, விடுதலைப் போராட்டத்தின் ''நடைமுறைத் தந்திரம்'' என்ற அரசியல் அந்தஸ்தையும் பெற்றுவிட்டது.

இதே தந்திரத்தின் அடிப்படையில், ஈழத்தமிழர்களின் போராட்டம் இந்துக்களின் போராட்டம் என்று கூறி தாக்கரேயின் ஆதரவைப் பெறலாம்; காஷ்மீர் விடுதலையை எதிர்ப்பதன் மூலம் ஈழ விடுதலையைத் துரிதப்படுத்தலாம். எதுவும் செய்யலாம்.

ஆனால் இவையெதுவும் போராளிகளின் ஆளுமை மீது, போராளி அமைப்பின் மீது, அவர்களது நேர்மை, நல்லொழுக்கத்தின் மீது, அவர்களது இலட்சியத்தின் மீது ஒரு சிறிய கீறலைக் கூட ஏற்படுத்தாது என்பதுதான் அவர்களது ஆதரவாளர்களின் நம்பிக்கை.

ஏனென்றால் ''இலட்சியம், வழிமுறைகளை நியாயப்படுத்துகிறது.''

—இதுதான் தவிப்பு குழுவினரின் கோட்பாடு. அவர்கள் மட்டுமல்ல இந்திய அரசின் துணைகொண்டு ஐ.ஆர்.8 போல தமிழீழத்தைக் குறுகிய காலத்தில் அறுவடை செய்ய எண்ணிய ஈழத்தின் எல்லா 'தவிப்பு' குழுக்களுக்கும் இதுதான் கோட்பாடு.

இவர்கள் மட்டுமல்ல; எப்படியாவது தனித்தமிழ்நாடு பெறத் தவிப்பவர்கள், எப்படியாவது புரட்சியை விரைவுபடுத்தத் துடிப்பவர்கள், எப்படியாவது (ஜெ யுடன் சேர்ந்தாவது) பாரதிய ஜனதாவைத் தோற்கடிக்க முயலும் போலி கம்யூனிஸ்டுகள்... இன்னோரன்ன அனைவருக்கும் இதுதான் கோட்பாடு.

அதனால்தான் கடத்தல்காரர்களிடம் மாமூல் வாங்குவது, அவர்களையே இயக்கத்தில் சேர்ப்பது, பேருந்து நிலையங்களில் குண்டு வைத்து மக்களைக் கொல்வது போன்ற நடவடிக்கைகளும் ஆனந்திக்கு முறிவை ஏற்படுத்தவில்லை. ஏனென்றால் ''இலட்சியம் வழிமுறைகளை நியாயப்படுத்துகிறது.''

**நீதியான லட்சியம்**
**நீதியற்ற வழிமுறைகள்**

''நியாயப் படுத்துகிறது'' என்ற இந்தச் சொல்லே நியாயமற்ற ஒரு கொள்கை அல்லது செய்கைக்கு, அது தன்னியல்பில் பெற்றிராத ஒரு தகுதியை வலிந்து அதற்கு வழங்கும் மோசடியாகும். நெறியற்ற நடவடிக்கைகளுக்கு 'இலட்சியப் போர்வை' போர்த்தி மறைக்கும் பித்தலாட்டமாகும்.

இலட்சியம் வழிமுறைகளை நியாயப்படுத்துவதில்லை; தீர்மானிக்கிறது. அதே போல, வழிமுறைகளும் இலட்சியத்தின் வெற்றியைத் தீர்மானிக்கின்றன.

இலட்சியத்திற்கு உகந்த வழிமுறை கடைப் பிடிக்கப்பட வில்லையானால், எத்தகைய வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவோ அதற்குப் பொருத்தமான இலட்சியத்தையே அடைய முடியும்.

''நீதியற்ற வழிமுறைகளைக் கோருகின்ற இலட்சியம் நீதியான இலட்சியமல்ல'' என்றார் மார்க்ஸ்.

> இலட்சியத்துக்கும் – வழிமுறைக்கும், அறிவியலுக்கும் – அறநெறிக்கும், கொள்கைக்கும் – நடைமுறைக்கும் இடையே இருக்கவேண்டிய இணைப்புக் கண்ணியை மார்க்சியத்தின் துணைகொண்டு மட்டுமே அறிவியல்பூர்வமாக நிறுவ முடியும்.

இலட்சியத்திற்கும் - வழிமுறைக்கும், அறிவியலுக்கும் - அறநெறிக்கும், கொள்கைக்கும் - நடைமுறைக்கும் இடையே இருக்க வேண்டிய இணைப்புக் கண்ணியை மார்க்சியத்தின் துணை கொண்டு மட்டுமே அறிவியல்பூர்வமாக நிறுவ முடியும்.

**அரசியல் - அறவியல் முரண்பாடு**

தாக்குதல் - தற்காப்பு, போராட்டம் - சமரசம், தியாகம் செய்தல் - தேவையற்ற தியாகத்தைத் தவிர்த்தல் போன்ற பல பிரச்சினைகள் தோற்றுவிக்கின்ற 'அரசியல் - அறவியல்' முரண்பாடுகளை மார்க்சியத்தின் துணை கொண்டு மட்டுமே அறிவியல் பூர்வமாகப் பரிசீலித்து விடைகாண முடியும்.

மற்றெல்லா இசங்களும், அவற்றைப் பின்பற்றும் இயக்கங்களும் 'குத்துமதிப்பாக' இவற்றைப் பற்றிப் பேசலாம்; அவரவர் வசதிக்கேற்ப வரையறுத்துக் கொள்ளலாம்; தேவைக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம். அவற்றில் ஓர் ஒருங்கிணைவு இருக்க முடியாது.

போராட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் எதிரியுடன் தற்காலிக சமரசம் செய்து கொள்வதன் 'அரசியல் தேவை' குறித்து ஒருவர் பேசினால், அதனையே 'துரோகம்' என்று அறவியல் வழிநின்று இன்னொருவர் சாட முடியும்.

''அமைச்சனின் கூலிப்படையாக மாறுவதற்கா இத்தனை தியாகங்கள் செய்தோம்'' என்று ரவித்தம்பி அறவியல் (தார்மீக) ஆவேசத்துடன் கேட்கும் போது, ''ஆளும் வர்க்கங்களின் உள் முரண்பாடுகளைப் பயன்படுத்துவதில் என்ன தவறு'' என்று குமாரசாமி அரசியல் ரீதியாக அதற்கு மடையடைக்க முடியும்.

நாவல் முழுவதிலும், தவிப்பு குழு முழுவதிலும், அவர்களுடைய சிந்தனை - செயல்பாடு முழுவதிலும் இந்த முரண்பாடு நிரம்பியிருக்கிறது.

**நாய் விற்ற காசு கடிக்கும்!**

கோப்பை நிரம்பிவிட்டது; அது வழிவதற்கான கடைசித் துளி மட்டுமே தேவைப்படுகிறது. அந்தக் கடைசித்துளிதான் போதை மருந்துக் கடத்தல்.

''நாய் விற்ற காசு குரைக்காது, போதைப் பொருட்கள் தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படாது: வேறு எந்த நாட்டுக்காரனோ பயன்படுத்தட்டும்'' என்று கூறுகின்ற தமிழ்மணி, குமாரசாமியின் நியாயங்களை ஆனந்தி எதிர்க்கிறாள்.

போதைப் பொருள் கடத்தலை நிறுத்துவது என்று முடிவு செய்யப்படு



படிப்பகம்

www.padippakam.com

கிறது. ஆனால் விடுதலை இயக்கத்தைக் கடத்தல் இயக்கமாக மாற்றி, அந்தக் கடத்தலுக்கு 'உதவி செய்யாவிட்டால் கொன்றுவிடுவோம்' என்று இயக்கத்தின் ஆதரவாளர் ஒருவரையே மிரட்டிய தமிழ்மணி, குமாரசாமி போன்றோர் இயக்கத்தில் தொடர்ந்து இருப்பதைப் பற்றி ஆனந்திக்கும் குழுவினருக்கும் ஆட்சேபம் எதுவும் இல்லை.

**அப்பாவியா - விஷமியா?**

ஒரு மனிதனை எப்படி மதிப்பீடு செய்வது? வேறொரு இடத்தில் இதற்கு விளக்கம் தருகிறாள் ஆனந்தி. தவிப்பு குழுவினால் கடத்தப்பட்ட பாண்டே எனும் அதிகாரியை - தங்கள் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் - கொன்று விடுவோம் என்று ஆனந்தி கூறிய போது "அதெப்படி நியாயம்" என்று கேட்கிறான் விஜயன்.

"ஒருவரை அப்பாவி என்றோ விஷமி என்றோ ஒட்டு மொத்தமாக வர்ணித்துவிட முடியாது. பாண்டே சாதுவான நல்ல மனிதராக இருக்கலாம். நீ கூடத்தான்... ஆனால், அரசாங்கத்தின் கட்டளைகளை நிறைவேற்றும் பொறுப்பில் இருக்கும் போது, உங்கள் நடவடிக்கைகள் எமது தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருக்கின்றனவா, எதிரானவையா என்பதைப் பொறுத்துத்தான் உங்கள் அப்பாவித்தனம் தீர்மானிக்கப்படும்" என்கிறாள் ஆனந்தி.

இந்த அளவு கோலை குமாரசாமிக்கும் பொருத்த வேண்டும் என்று ஆனந்தி எண்ணவில்லை. பாண்டேயைப் போல கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பில் அல்ல, முடிவுகளை எடுக்கும் பொறுப்பில் உள்ள குமாரசாமி, ஜனநாயக விரோதமாக தன்னிச்சையாக முடிவு செய்த போதை மருந்து வியாபாரம் அப்பாவித்தனமானதா? அறியாமையால் செய்த பிழையா?

குமாரசாமியை ஒரு போராளி என்றே மதிப்பிடுகிறாள் ஆனந்தி. "ஒரு மனிதனை ஒட்டுமொத்தமாக இன்ன தன்மை கொண்டவரென்று வரையறுத்து விட முடியாது" என்ற ஆனந்தியின் சிந்தனையும் இங்கே வேலை செய்கிறது.

**கலப்பற்ற மனிதன் உண்டா?**

தன்னுடைய அனைத்து சுய முரண்பாடுகளையும் நியாயப்படுத்துவதற்கு நடுத்தரவர்க்கம் தன் கைவசம் வைத்திருக்கும் வாளும் கேடயமும் இந்தக் கோட்பாடுதான்.

ஒரு பொருள், மனிதன் அல்லது இயக்கத்தின் பன்முகத் தன்மையை ஆராய்ந்து, அதன் சாராம்சமென்ன என்பதை வரையறுத்து, பிறகு அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சியை மதிப்பிடுவதுதான் அறிவியல் நோக்கு.

"இயற்கையிலும் சரி சமுதாயத்திலும் சரி, 'கலப்பற்ற' நிகழ்வுகள் எவையும் இல்லை." ஆனால் ஒரு நிகழ்வின் தன்மையை இன்னதென்று வரையறுத்துச் சொல்லும் நேரத்தில், அதில் இது கலந்திருக்கிறதே "என்பதை யாரேனும் நினைவுபடுத்துவாரானால் அவர் அளவு கடந்த அசட்டுப் புலமை வாய்ந்தவராகவோ அல்லது சொற்புரட்டராகவோ எத்தராகவோதான் இருக்க வேண்டும்" என்றார் லெனின்.

சந்தனக் கடத்தல், போதை மருந்து கடத்தல், உளவுத்துறை உறவு ஆகிய எதை வேண்டுமானாலும் தமிழர் விடுதலைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனும் கண்ணோட்டம், பழமைவாதம், ஆணாதிக்கம் ஆகிய அனைத்தும் குமாரசாமியிடம் இருக்கின்றன. எனினும் அவனை போலீசு சித்திரவதைக்குப் பணியாத உயிரைத் துச்சமாக மதிக்கும் போராளியாகவே மதிப்பிடுகிறாள் ஆனந்தி.

இந்த நூலின் வெளியீட்டு விழாவில் பேசிய சுப.வீரபாண்டியனும் இதையேதான் வேறு வார்த்தைகளில் சொல்லியிக்கிறார். "பலவீனமில்லாமல் ஒரு இயக்கம் இருக்க முடியாது."

**பலத்தை வென்றது பலவீனம்!**

ஆனால் என்ன விந்தை! பலவீனம் பலத்தை அழித்துவிட்டது. ஆனந்தி கொலை செய்யப்படுகிறாள். ஆனந்தியின் கருத்துக்களை ஆதரித்த வேலு என்ற மத்தியக்குழு உறுப்பினர் விஜயனுக்கு எழுதிய கடிதம் நாவலின் இறுதிப் பகுதியில் வருகிறது.

"அடுத்த வரும் நாட்களில் எங்கள் இயக்கம் மக்கள் முன்பு கொச்சைப் படுத்தப்படும். நாங்கள் செய்த தவறுகள் அம்பலப்படுத்தப்படும். அந்த வேளையில் தமிழ் விடுதலைப் போராளிகள் என்றாலே இப்படித்தான் என்ற கருத்து மக்கள் மனதில் தோன்றத் தொடங்கும்.

இல்லை. அப்படி இல்லை. ஒழுக்கம், அறநெறிகள், மனித நேயம் இவற்றில் ஆழ்ந்த பற்றுள்ள பல போராளிகள் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டதால் தான் இந்தச் சீரழிவுகள் நிகழ்கின்றன என்பதை மக்கள் உணரச் செய்ய வேண்டும். அதை உங்களைப் போன்றோரால் தான் செய்ய முடியும் என்பதாலேயே இந்தக் கடிதம். எங்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டி அல்ல, எமது மானத்தை, சுய மரியாதையைக் காப்பாற்றவே இக்கடிதம்."

**இழக்க ஏதுமில்லாப் போராளிகள்!**

தம்மையும், ஆனந்தியையும் அறநெறியில் பற்றுக் கொண்டவர்களாகக் கூறுகிறார் வேலு. அறநெறியில் பற்று கொண்ட ஆனந்தி கொலை செய்யப்படுவதற்கு முன்பு உள்துறை அமைச்சனை சந்திக்கிறாள். தமிழகத்தில் தங்களை நசுக்கும் நோக்கத்துடன் இறக்கப்பட்டிருக்கும் ராணுவம் உடனே விலக்கப்பட வேண்டும் என்று கோருகிறாள். "விலக்காவிட்டால்?" என்று கேட்கி



**'தவிப்பு' நூல் வெளியீட்டு விழாவில் சிதறிய சில சிந்தனைகள்**

| | |
|---|---|
| சுப.வீ | : மாற்றுக் கருத்து கொண்டவர்களுக்கும் பேச இடமளிக்கும் ஞாநியின் பண்பைப் பாராட்டுகிறேன். |
| ஞாநி | : இந்த மேடையில் நீங்களும், ஜெயகாந்தனும் பேச வேண்டும், இராம. கோபாலனும் பேச வேண்டும். |
| ஜெயகாந்தன் | : காந்தியம் தான் இந்த நாட்டின் மார்க்சியம்.... சுப.வீ அவர்களே, நீங்கள் தமிழ் ஈழத்தை ஆதரித்து பேசி வருகிறீர்கள். தனித் தமிழ் நாட்டுக்கு ஆயுதப் போராட்டம் என்று பேசியிருக்கிறீர்களா? |
| சுப.வீ. | : அதை மக்கள் தீர்மானிப்பார்கள். |



படிப்பகம்

www.padippakam.com

றான் அமைச்சர்.

ஆனந்தி பதிலளிக்கிறாள். ''எங்களுடன் நீங்கள் நடத்திய பேரம் பற்றி முதலமைச்சர் ஆறுமுகத்துக்கும், பொது மக்களுக்கும் அறிவிப்போம். அது பகிரங்கமாவதில் எங்களுக்கொன்றும் இழப்பு இல்லை. நீங்கள்தான் தேர்தலில் நிற்கிறீர்கள்!''

''எங்கள் தவறுகள் அம்பலமாகும்; நாங்கள் கொச்சைப்படுத்தப் படுவோம். இருப்பினும் அதைச் சந்திப்போம். ஆனால் உன்னை அம்பலப்படுத்தாமல் விடமாட்டோம்'' என்றுகூடச் சொல்லவில்லை ஆனந்தி.

அமைச்சன் பதவியை இழக்கலாம்; தேர்தலில் தோற்கலாம்; ஆனால் அவனிடம் இழப்பதற்கு மானம் இல்லை. இலட்சியமும் இல்லை.

எங்களுக்கும் இழப்பதற்கு ஒன்றும் இல்லை என்கிறாள் ஆனந்தி. ஆனால் வேலுவோ ''இந்த உறவாடலில் நாங்கள் இழந்தவை ஏராளம்'' என்று கடிதம் எழுதுகிறார்.

கள்ள உறவின் இரகசியங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் திறமையில் தான் இவர்களது ''அறநெறியின் ஆன்மா'' ஒளிந்திருக்கிறது போலும்!

**இந்தியா ராஜீவை இழந்தது**
**ஈழம் விடுதலையை இழந்தது**

ஈழப் போராளிகளுடனான இரகசிய உறவில் இந்திய அரசு ராஜிவ் காந்தியை இழந்தது; சில நூறு சிப்பாய்களை இழந்தது. ஈழ மக்களோ தம் விடுதலையை இழந்தார்கள். ஆனந்திகளுக்கோ இழப்பு ஒன்றுமில்லை!

தாங்கள் தமிழ் மக்களுக்கிழைத்த நம்பிக்கைத் துரோகத்தைப் பற்றியோ, அவர்களது 'விடுதலை'யைத் தொலைத்தது பற்றியோ அக்கடிதம் வருந்தவில்லை: தங்கள் மானத்தை சுயமரியாதையைக் காப்பாற்றவே கவலைப்படுகிறது. தங்களது நடவடிக்கையின் சமூக விளைவுகளை எண்ணி வருந்தாமல், தன் நிலை எண்ணி வருந்தும் அறிவாளிகளின் உளவியல் இது.

பூச்சியங்களுக்குத் தலைமை தாங்கும் அகம்பாவத்தில் திளைத்திருந்த 'மதிப்பு மிக்க' எண்கள், இதோ தன்னிரக்கத்தில் வீழ்ந்துவிட்டன!

அந்த இடத்தில் சிக்கெனப் பொருந்துகிறது ஆனந்திக்குப் பிடித்தமான சுந்தர ராமசாமியின் (பசுவய்யா) கவிதை.

*நான் விடைபெற்றுக் கொண்டுவிட்ட*
*செய்தி*
*உன்னை வந்து எட்டியதும்*
*நண்பா பதறாதே.*

> ''நான் அவளில்லை''
> என்கிறாள் ஆனந்தி.
> அவள் விஜயனின்
> 'பழைய' ஆனந்திதான்.
> புரட்சிக்காரி என்பதுதான்
> அவளுடைய முகமூடி.
> அதனால்தான் அவளுக்கு
> 'அலுப்பாக' இருக்கிறது.

*ஒரு இலை உதிர்ந்ததற்கு மேல்*
*எதுவும் அதில் இல்லை.*
*இரங்கற்கூட்டம் போட*
*ஆட்பிடிக்க அலையாதே*
*நம் கலாச்சாரத் தூண்களின்*
*தடித்தனங்களை எண்ணி*
*மனச் சோர்வில் ஆழ்ந்து கலங்காதே.*

கலாச்சாரத் தூண்கள் (சாகித்திய அகாதமி போன்றவை) தன்னை கவுரவிக்க வேண்டுமென்ற விருப்பம், விருப்பம் நிறைவேறாததால் தனக்கு ஏற்பட்ட மனச்சோர்வு, அந்தக் கோபத்தில் வெடிக்கும் தடித்தனம் என்ற வசவு, நானும் இலைதானா - மரமில்லையா என்ற ஆதங்கம், பிறகு இலைகளின் மீது அனுதாபம்!

இதுதான் ஆனந்திக்குப் பிடித்தமான கவிதை என்றால், நாவலாசிரியர் இக்கவிதை மூலம் ஆனந்தியின் பாத்திரத்திற்குப் பெருமை சேர்க்க வில்லை.

**தன்னிரக்கம்!**

மக்களுக்காக மரிக்கும் போராளி, தனது மறைவுக்காக மக்கள் கண்ணீர் சிந்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் ஒரு நியாயம் இருக்கிறது. தனக்காக கலாச்சாரத் தூண்கள் கண்ணீர் சிந்த வேண்டும் என்று எண்ணுபவன் போராளியல்ல; கலாச்சாரத் தூண்களால் அலங்கரிக்கப்படும் அரசவையின் அங்கீகாரத்தைப் பெருவதற்காகப் 'புரட்சி'யை ஒரு கருவியாகப் பயன்படுத்துபவன்.

இந்தக் கவிதையின் அழகியலைக் கொண்டு ஆனந்தியின் அரசியலை மதிப்பிடலாமெனில், ''எங்களைக் கண்டு கொள்; எங்களை அங்கீகரி; எங்களுடன் பேசு'' என்று அரசை நிர்ப்பந்திப்பதற்காகக் குண்டு வெடிக்கும் 'அழுத்த அரசியல்'தான் (Pressure politics) அது.

ஆனால் போராளிகள் என்பவர்கள் மக்களால் கண்டுகொள்ளப் படுவதற்காக, அங்கீகரிக்கப் படுவதற்காக மக்களிடம் பேசுபவர்கள், அவர்களைத் திரட்டுபவர்கள், அவர்களைப் பேச வைப்பவர்கள், அவர்களைப் போராடச் செய்பவர்கள். ஆம்! 'பூச்சியங்களின்' பின்புலத்தில்தான் எண்களின் மதிப்பு உயர்கிறது.

● ○ ●

ஆயுதம் தாங்கிய விஜயன்தான் ஆனந்தி! ஆயுதம் ஏந்திய அமைச்சன் தான் குமாரசாமி! ஆயுதம் தாங்கிய அமிர்தலிங்கம்தான் பிரபாகரன்!

தவிப்பு எனும் ஆயுதம் தாங்கிய அறிஞர்களின் ஊனம் அவர்களது மூளையில்தான் இருக்கிறது. அவர்களது அரசியல் சித்தாந்தம் ஒரு வேளை அவர்களுக்கு அழிவைத் தேடித்தராமல் இருந்திருந்தால், தமிழ் மக்கள் தங்களுக்கு நேரவிருக்கும் அழிவை எதிர்த்துப் போராட நேரிட்டிருக்கும்.

● ○ ●

இது சீனப் புரட்சியின் ஐம்பதாவது ஆண்டு. தோழர் மாவோவின் புகழ் பெற்ற மேற்கோள் ஒன்றைக் குறிப்பிட்டு முடித்துக் கொள்வோம்.

''துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் அரசியலதிகாரம் பிறக்கிறது'' என்றார் மாவோ. சமாதான மாற்றம், தேர்தல் பாதை என்று சரணடைந்த போலி கம்யூனிசத்திற்கு அளிக்கப்பட்ட பதில் அது.

அந்த வாக்கியம் ஓர் அனைத்தும் தழுவிய உண்மை. தொழிலாளி வர்க்கத்திற்கு மட்டுமல்ல, முதலாளி வர்க்கத்திற்கும் அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் பிறக்கிறது.

போராளிகளையும் புரட்சியாளர்களையும் இனங்காண்பதற்கான அடையாளமே துப்பாக்கிதான் என்று கருதியிருப்போர், மாவோவின் அந்த மேற்கோளை அருள்கூர்ந்து இன்னுமொருமுறை படியுங்கள்.

துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியல் அதிகாரம்தான் பிறக்கிறது. அரசியல் சித்தாந்தம் பிறப்பதில்லை.

● மருதையன்

**'தவிப்பு'**
**ஆசிரியர்: ஞாநி**
**பதிப்பு:**
**அறிவாலயம், 107/7**
**கௌடியா மடம் சாலை,**
**சென்னை - 600 014.**
**விலை ரூ. 60.00**

**● நூல் கிடைக்குமிடம்:**
**கீழைக்காற்று வெளியீட்டகம்.**



படிப்பகம்

www.padippakam.com

# சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்



'அவர்களின்' இன்றைய கதாநாயகன் 'தாராசிங்.' 13 மாத ஆட்சியில் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் ஏராளம். ஒரிசாவில் 2 பாதிரியார்களையும், இசுலாமிய வியாபாரியையும் கொன்ற தாராசிங் அதில் முன்னணி வகிக்கிறான். ''மதம் மாற்றலாமா, மத மாற்றம் குறித்து தேசிய விவாதம் நடத்தப்பட வேண்டும், தாராசிங் இந்து அமைப்பு எதிலும் உறுப்பினரில்லை, காங்கிரஸ் ஆட்சியில்தான் இவை நடக்கின்றன'' — என்ற மயிர்பிளக்கும் வாதங்களிலும் ஆர்.எஸ்.எஸ். வெற்றி பெற்றுவிட்டது.

ஆம். தாக்குதல்களைக் கண்டிக்கும் அனைவரும் தாக்குவதற்கான காரணங்களையும் கண்டிக்கிறார்கள. மதத்தால் சிறுபான்மையினராக இருந்தாலும் வாழ்க்கையில் இந்தியன்ாக, பாரதீயனாக, அதாவது இந்துவாக இருக்க வேண்டும் என்று அறிவுரை வழங்குகிறார்கள்.

இசுலாமிய, கிறித்தவ மதத்தைச் சார்ந்த மக்கள் காலை எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை அவர்களது வாழ்க்கை பாரதீய பண்பாட்டில் வரவில்லை என்று இந்து மதவெறியர்கள் கூறுகின்றனர். 70 ஆண்டுகளாக அவர்கள் செய்துவரும் அவதூறுப் பிரச்சாரம் இன்று பெரும்பான்மையினரின் கருத்தாக மாற்றப்பட்டு வருகிறது. அந்தப் பலத்தில்தான் 'தாராசிங்' போன்றவர்கள் இறக்கிவிடப்படுகிறார்கள்.

இதுநாள்வரை பார்ப்பன எதிர்ப்பு, இந்து மதவெறி எதிர்ப்புச் சவடால் அடித்துவந்த பா.ம.க, ம.தி.மு.க, தி.மு.க ஆகிய 'ஈரோட்டுப் பாசறை'யில் பயிற்சி எடுத்த தளபதிகள், மாவீரர்கள் எல்லாம் இந்துத்துவத்தின் திரிசூலத்திற்கு எண்ணெய் தடவிக் கொண்டிருக்கிறார்கள்.

''பா.ஜ.க மதவாதக் கட்சியே அல்ல; கடந்த 13 மாத ஆட்சியில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக எதுவுமே நடக்கவில்லை'' — என்ற பச்சையான பொய்களை, காக்கி நிஜார் பேர்வழிகளுக்கேயுரிய திமிரோடு பேசுகிறார்கள்.

இந்த திராவிட, தமிழினவாதக் கட்சிகள் இந்து மதவெறியை எதிர்ப்பதாகப் பேசிக் கொண்டிருந்த காலத்திலேயே அவர்களது கட்சி அணிகளிடம் அத்தகைய உணர்வு எதுவும் இருந்தது கிடையாது. ஆர்.எஸ்.எஸ் முன் வைக்கின்ற பார்ப்பனப் பண்பாட்டு விழுமியங்கள் பலவற்றை அவர்கள் பெருமிதத்தோடு பின்பற்றி வருபவர்கள்தான்.

இனி, தங்கள் கூட்டணியை நியாயப்படுத்துவது என்ற முறையில் ஆர்.எஸ்.எஸ்ஸின் மதவெறிக் கருத்துக்களையே மதச்சார்பற்ற கருத்துக்களாக முன்வைத்து இவர்கள் பிரச்சாரம் செய்வார்கள். ''இதுநாள் வரை நம்முடைய கொள்கைகளை இப்படி ஜனரஞ்சகமாகப் பிரச்சாரம் செய்ய நமக்குத் தெரியாமல் போனதே'' என்று ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகர்களே வியக்கும் வண்ணம் இவர்களது பிரச்சாரம் அமையும்.

''தமிழ்ப் பண்பாட்டைத்தான் இந்துத்துவா என்று நாங்கள் அழைக்கிறோம்'' என்று திருவாய் மலர்ந்திருக்கிறார் இராம. கோபாலன். இனி இந்துப் பிரச்சாரம் தமிழ்ப் பிரச்சாரமாக மாறும். பார்ப்பனப் பண்பாடே தமிழ்ப் பண்பாடாக விபீடணர்களால் சித்தரிக்கப்படும்.

கூட்டணி தொடர்ந்தாலும், உடைந்தாலும் இந்தப் பிரச்சாரம் மதவெறிக் கலவரத்திற்கு ஏற்ற சருகாக மக்களின் மனங்களை மாற்றிவிடும். எனவே சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்ஸின் அவதூறு பிரச்சாரத்தை முறியடிப்பது முன்னிலும் அவசரமான பணியாகிவிட்டது. எனவே, இந்துமதவெறியர்கள் வெளியிட்டிருக்கும் வெளியீடுகளிலிருந்து அத்தகைய அவதூறுகள் எடுக்கப்பட்டு, அதனை அம்பலப்படுத்தும் ஒரு தொடர் கட்டுரையை இவ்விதழிலிருந்து வெளியிடுகிறோம்.

●○●

*''மத மாற்றம் என்பது வெறும் கடவுளை மட்டும் மாற்றிக் கொள்ளும் விசயமல்ல. அது ஒரு தேசிய மாற்றம். இந்து மதத்திலிருக்கும் போது 'வணக்கம்' சொன்னவர், முஸ்லீமாக மாறும்போது 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்கிறார்.*

*கிறிஸ்தவர் 'தோத்திரம்' அல்லது 'குட்-மார்னிங்' என்கிறார். வேட்டி மாறி பேண்ட்டோ, லுங்கியோ நிரந்தர உடையாக மாறுகிறது. பெண்கள் பூச்சூடி, பொட்டு வைத்து, கோலமிட்டு, குத்துவிளக்கு ஏற்றுவது நின்று போகிறது. தேங்காய் உடைத்து, குத்துவிளக்கு கற்பூரம் ஏற்றி பாரத பண்பாட்டின்படி ஆரம்பிக்கப்படும் காரியங்கள் ரிப்பன் வெட்டி ஆரம்பிக்கப்படுகிறது. பிறந்த நாட்களுக்கு கோவிலுக்குப் போகும் பழக்கம் மாறி கேக் வெட்டும் பழக்கம் வருகிறது.*

*'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற பண்பாடு பல தாரமணம், விவகாரத்து செய்வதுமான கலாச்சாரச் சீர்கேடு ஏற்படுகிறது. பாரதத்தில் உள்ள புனிதஸ்தலங்கள் மறந்து விதேசங்களிலுள்ள மெக்கா, மதினா, வாடிகன், கான்ஸ்டாண்டிநோபிள், ஜெருசலேம் - புனித நகரங்களாகக் கருதப்படுகின்றன. முன்னோர்கள், தாத்தா, பாட்டிகளை முட்டாள்கள், அறிவிலிகள் என்று கருதும் எண்ணம் வளர்கிறது. சித்திரை முதல் தேதியை புத்தாண்டாகக் கொண்டாடியது போய் ஜனவரி 1 கொண்டாடப்படுகிறது.*

*மொத்தத்தில் ஆன்மீக நாட்டம் நொடிந்து லோகாயதவாதம் பெருகி கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற எண்ணற்ற குற்றங்கள் பெருகி வளர்கின்றன. மதமாற்றத்தில் ஏற்படும் தேசிய மாற்றங்களுக்கு இவை ஒரு சில உதாரணங்களே.''*

— இந்து முன்னணி வெளியிட்டிருக்கும் 'மதமாற்றத் தடைச் சட்டம் ஏன்?' என்ற வெளியீட்டில் இருந்து.

**அ. நமஸ்காரம் போய் குட்மார்னிங், தோத்திரம், அஸ்ஸலாமு அலைக்கும்.**

முதலில் வணக்கம் என்ற வார்த்தை பார்ப்பன இந்து பண்பாடல்ல. 'நமஸ்காரத்தை' ஒழித்து தமிழகத்தில் 'வணக்கத்தை'க் கொண்டு வந்தது திராவிட இயக்கத்தின் முயற்சியாகும். அது மட்டுமல்ல, க்ஷேமம் நலமாகவும், அபேட்சகர் வேட்பாளராகவும், பொதுக்



படிப்பகம்

www.padippakam.com

கழிப்பிட ஸ்திரீ - புருஷன், ஆண் — பெண்ணாகவும், இன்னும் ஏராளமான சொற்கள் மாற்றப்பட்டு மக்களுக்கு உதவி புரிந்தன.

ஆனால் இன்றும் ஆர்.எஸ்.எஸ்.-இல் இருக்கும் இளித்தவாய் தமிழர்கள் கூட 'நமஸ்தே ஜீ' எனக் கூற வேண்டும் என்பதுதான் அவர்கள் மரபு.

அடுத்து, 'குட் மார்னிங்' சொல்பவனெல்லாம் கிறித்தவனா? வெள்ளையர்கள் கொண்டு வந்த மரியாதை குறித்த சொற்களும் பழக்கங்களும்தான் இந்தியாவில் பரப்பப்பட்டன; அநேக நாடுகளிலும் வழக்கத்திலிருக்கிறது.

அரசு அதிகார வர்க்கத்தில் தொடங்கிய இந்த ஆங்கில மரியாதையை அனைவருக்கும் பரப்பி விட்டதே 'அவாள்'தான், இன்று 'குட்மார்னிங்' பழைய சம்பிரதாயமாகி, ''ஹாய், ஹலோ''தான் நகரங்களில் கொடி கட்டிப் பறக்கிறது. இதைப் பரப்பிவிட்டவர்கள் பாதிரியார்களா என்ன?

தோத்திரம் என்ற சொல் ஸ்தோத்திரம் என்ற சமஸ்கிருதச் சொல்தான். பார்ப்பனர்கள் கிறித்தவ மதத்திற்கு மாறிய போது சடங்குகளையும் சமஸ்கிருதத்தையும் கொண்டு சென்றதன் விளைவே இது. அதிலும் 'ஸ்'-ஐ உருவிவிட்டு வெறும் தோத்திரமாக்கியது தாழ்த்தப்பட்ட கிறித்தவ மக்களே.

'கிறித்தவர்களின்' கை குலுக்கலும், இசுலாமியர்களின் ஆரத் தழுவும் முறையும், பார்ப்பனீயத்தை விட நாகரீகமான பழக்கங்களாகும். நமஸ்காரம் என்பது கை கூப்பி, தலை தாழ்த்தி முழு உடலையும் கிடத்தி வணங்கும் முறையாகும். அதுவும் கடவுள், பார்ப்பனர்கள், மன்னர்கள், மடாதிபதிகள், மேல்சாதியினர், தற்போது தலைவர்கள் - அதிகாரவர்க்கம் - மந்திரிகள் போன்றோருக்கு செலுத்தப்படும் அடிமைத்தனமாகும்.

மாறாக மக்களுக்குள் மனிதர்களுக்குள் பரஸ்பரம் மரியாதை செலுத்தி விசாரித்தல் என்பது இந்து மரபிலேயே இல்லை. பார்ப்பனியத்தின் கறைபட்ட தமிழின் 'வணக்கமும்' இதற்கு விதிவிலக்கல்ல. முக்கியமாக நமஸ்காரம் யாரையும் தொட வேண்டிய அவசியமில்லாமல், தீண்டாமையை க்ஷேமமாகப் பாதுகாக்கிறது.

ஆக கிறித்தவ, இசுலாமிய மேலை நாட்டு பண்பாட்டின்படி சக மனிதனை கைகுலுக்கி, ஆரத்தழுவும் முறையையே நாம் மேற்கொள்ள வேண்டும். புதிய தமிழ்ச் சொல்லும் கண்டுபிடிக்க வேண்டும். இம்முறையில் தீண்டாமை ஒழிப்பும் உள்ளது. எனவே அவமரியாதை



**இந்து மதவெறியர்களின் அவதூறுப் பிரச்சாரம் இன்று பெரும்பான்மையினரின் கருத்தாக மாற்றப்பட்டு வருகிறது. அந்தப் பலத்தில்தான் 'தாரா சிங்' போன்றவர்கள் இறக்கி விடப்படுகிறார்கள். பா.ம.க., ம.தி.மு.க., தி.மு.க. ஆகிய 'ஈரோட்டுப் பாசறை'யில் பயிற்சி எடுத்த தளபதிகள், மாவீரர்கள் எல்லாம் இந்துத்துவத்தின் திரிசூலத்திற்கு எண்ணெய் தடவிக் கொண்டிருக்கிறார்கள்.**

பார்ப்பனப் பண்பாட்டின் சொந்தக்காரர்கள் மரியாதை குறித்துப் பேசத் தேவையில்லை.

### ஆ) வேட்டி போய் பேண்ட், லுங்கி

இந்துப் பண்பாட்டின்படி வெளி ஆடைகள் மட்டுமல்ல, உள் ஆடைகளும் மாறியிருக்கிறதா என்று ஏன் ஆராயவில்லை? கோவணம், லங்கோடு அணியாதவர்கள் எப்படி 'இந்து'க்களாக இருக்க முடியும்? ஏதோ குர்-ஆனிலும், பைபிளிலும் சொல்லப்பட்டிருப்பது போல லுங்கி இஸ்லாத்திற்கும், பேண்ட் கிறித்தவத்திற்கும் சொந்தமானது என்பது முழு முட்டாள்தனமாகும். அரேபியாவில் எந்த முஸ்லீம் லுங்கி உடுத்துகின்றான். உடைகள் என்பது வர்க்கம், வசதி, தட்பவெட்பநிலை சம்பந்தப்பட்டதுதான். பேண்ட் உலகத்திற்கும், லுங்கி ஆசியாவுக்கும் பொதுவான உடைகள்தான்.

உழைக்கும் மக்களுக்கு லுங்கி உடுப்பது வேலை செய்ய வசதியாக இருக்கிறது. லுங்கி உடுத்துபவர்கள் எல்லாம் முஸ்லீம்கள் என்றால், இந்துக்கள் எண்ணிக்கை சிறுபான்மையாகிவிடும். சேலையை விட முகலாயர்கள் அறிமுகப்படுத்திய சுரிதார், சல்வார்கமீஸ் வசதியாக இருக்கிறது என்பதால் பெண்கள் விரும்பி அணிகிறார்கள். வேண்டுமானால் அதை ஆர்.எஸ்.எஸ். தடுக்கட்டுமே?

அவ்வளவு ஏன்? ஷாகாவில் பயிற்சி பெறும் ஸ்வயம் சேவக குண்டர்கள் அணியும் அரைக்கால் சட்டை, பெல்ட், ஷூ எல்லாம் இந்துப் பண்பாடா? இன்னும் இராணுவம், போலீசு, கமாண்டோ எல்லாருக்கும் வேட்டி, மரச் செருப்பை மட்டும் போடவைத்து பாரதப் பண்பாட்டைக் காப்பாற்றுங்கள். டெண்டுல்கருக்கு பஞ்சகச்சம் உடுத்துங்கள். பி.டி. உஷாவிற்கு மடிசார் கட்டி ஓடச் சொல்லுங்கள்.

இவற்றைவிட சட்டை, பேண்ட் துணி தயாரிக்கும் விமல், அர்விந்த், ஜே.சி.டி, குவாலியர், ரேமண்ட்ஸ், மதுரா கோட்ஸ், லட்சுமி மில் போன்ற இந்து பனியா முதலாளிகளிடம் அதை நிறுத்தச் சொல்லி, வேட்டி, கோவணம், லங்கோடு மட்டும் தயாரிக்க ஆணையிடுங்களேன்.

### இ) பெண்கள் பூச்சூடி, பொட்டு வைத்து கோலமிட்டு, குத்து விளக்கு ஏற்றுவது நின்று போகிறது.

வீடு வாசல் தெளித்து கோலமிட வேண்டுமென்றால் முதலில் வீடும் வாசலும் வேண்டும். அப்படியே இருந்தாலும் 'அழகு படுத்துவது' என்பது வர்க்கம், வசதிக்கேற்பவே மாறுகிறது. மீனவப் பெண் வீட்டின் முன் கருவாடும், விவசாயப் பெண்ணின் வீட்டில் தானியமும், குயவர் பெண் வீட்டில் களிமண் சேறும், கால்நடை வளர்க்கும் பெண் வீட்டில் புழுக்கைகளும் நிறைந்திருக்கும்.

ஆனால் பார்ப்பன - மேல்சாதி - மேல்தட்டுப் பிரிவினரின் வீடுகள் முன் பெரிய வாசல், துளசி மாடம், சிறு கோவில், தோட்டம் எல்லாம் இருக்கும். ஏதோ உலகிலேயே இந்து வீடுதான் சுத்தமாக இருப்பது போலவும் ஏனைய வீடுகள் பன்றித் தொழுவமாக இருப்பதாகவும் இவர்கள் கூறுவது பிதற்றல்.

குத்து விளக்கு வகையறாவெல்லாம் என்றைக்குமே ஒடுக்கப்பட்ட சாதிப் பெண்கள் பயன்படுத்தியது கிடையாது, முடியாது. முதலில் அகல் விளக்கு, காடா விளக்கு, சிம்னி, அரிக்கன் என்றுதான் மாறியது. தற்போதுதான் குத்து விளக்கு அறிமுகமாகிறது என்றாலும் அது இல்லாத வீடு இந்து வீடில்லை என்றால் இந்துக்கள் சிறுபான்மையாகி விடுவார்கள்.

அதேபோல பட்டுச் சேலை உடுத்தி, தலை நிறைய பூச்சூடி, உடல் முழுதும் ஆபரணங்கள் அணிவது மேல் சாதி மேட்டுக்குடியினர் மட்டும்தான். உழைக்கும் பெண்களைப் பொறுத்த வரை இப்பேர்ப்பட்ட அலங்காரங்



படிப்பகம்

www.padippakam.com

களெல்லாம் வெகு அபூர்வம். மேலும் இந்த அழகுக் கலைக ளெல்லாம் பெண்களைப் போகப் பொருளாக்கி நுகர்வதற்க்காக ஆணாதிக்கமும், மதமும் உரு வாக்கிய அடிமைத்தனம்தான். எனவே அனைத்து மதங்களும் பெண்கள் போகப் பொருளாக வைப்பதற்கு விதித்திருக்கும் பூ, பொட்டு, பர்தா, போன்றவை களை ஒழிக்க வேண்டும் என்கி றோம்.

தற்போது சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா ராய் போன்ற இந்து அப்சரஸ்கள் உலக அழகி பட்டங் களை வென்று பாரத மாதாவின் புகழை எட்டுத் திக்கும் பரப்பி வந்தா லும், அவர்கள் அழகை வளர்த்த விதமே 'கிறித்தவ' பாணியிலான மேற்கத்திய முறைகளில்தான்.


இது குறித்து கவலைப்படும் இந்து மதவெறியர்கள், இந்து பண்பாட்டின்படி அழகிகளை உருவாக்கி உலகை வீழ்த்து வதற்கு, காமசூத்திரம், சௌந்தர்யல ஹரி, கனகதாரா ஸ்தோத்திரம் ஜெயதே வரின் அஷ்டபதி போன்ற பக்தி ரசம் சொட்டும் இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்து, ஆர்.எஸ்.எஸ் தொண்டர்களை வைத்துக் கல்லூரிப் பெண்களிடம் விநியோகிக்கலாம்.

செருப்பாலடித்து 'ஈவ் டீசிங்' கேஸில் பிடித்துக் கொடுப்பார்கள்.

**ஈ) 'பாரத பண்பாட்டின்படி ஆரம்பிக் கப்படும் காரியங்கள் மறைந்து போதல்'**

விமானந் தாங்கிக் கப்பல்களோ, கண்டம் விட்டுக்கண்டம் பாயும் ஏவுக ணைகளோ, அணுகுண்டு வெடிப்போ அனைத்தும் நாள் நட்சத்திரம் பார்த்து, யாகம் வளர்த்து, கற்பூரம் - குத்து விளக்கு ஏற்றி, தேங்காய் உடைத்துத் தான் இன்றும் செய்கிறார்கள். அன்னியச் செலாவணி தட்டுப்பாடோ, பணவீக் கமோ என்றால் ரிசர்வ் வங்கியில் உடனே ஒரு பூசை செய்கிறார் கள்.

குடமுழுக்கிற்கு மட்டுமல்ல, தேர்தல் நாளையே சங்கராச்சாரி தான் குறிக்கிறார். வருடந் தோறும் தமது அலுவலகங்களை வாஸ்து சாஸ்திரப்படி கன்னாபின் னவென்று இடித்து மாற்றுகின்றன பெரும் நிறுவனங்கள். இந்தியா என்பது 'பாம்பாட்டிகளின் தேசம், பண்டாரங்களின் நாடு' என்று பெயர் வருவதற்குக் கார ணமே இந்தப் பார்ப்பன முட்டாள் தனங்களினால்தான்.



அறிவியல், பகுத்தறிவு, மதச்சார் பற்ற நோக்கில் முன்னேறிவரும் வாழ்க் கைக்கு மதச்சடங்குகள் தேவையில்லை. ஏனென்றால் இம்மூன்றும் வளருவதற்கு தடைவிதித்ததே மதங்கள்தான். எனவே லட்சக் கணக்கான ரூபாய்கள் வீணடிக் கப்பட்டு - பாரத பண்பாட்டின் படி ஆரம் பிக்கும் காரியங்கள் அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும். அவைகளுக்கு ரிப்பன் வெட்டுவது எவ்வளவோ மேல்.

அதிருக்கட்டும். துவக்க விழாக்க ளில் 'இந்து' குத்துவிளக்கை 'கிறித்துவ' மெழுகுவர்த்தியால்தான் கொளுத்துகி றார் அத்வானி. பாரதப் பண்பாட்டின்படி அவர் கையில் தீபட்டியைக் கொடுத்து விடலாமே. பொருத்தமாகவும் இருக் கும்.

**உ) 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற பண் பாடு பலதாரமணம், விவாகரத்து போன்ற சீரழிவுகளுக்கு மாறுகிறது**

'ஒருவனுக்கு ஒருத்தி' என்பது இந் துப் பண்பாடல்ல. 'ஒருத்திக்கு ஒருவன் தான்' இந்துப் பண்பாடாகும். அதாவது ஆணுக்கு எத்தனை மனைவிமார்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் பெண்ணுக்கு ஒருவன் மட்டுமே கணவனாக முடியும். மேலும் இந்தப் பண்பாடு உலகெங்கிலும் இருக் கும் ஆணாதிக்கப் பண்பாடுதான்.

பல தாரமணத்தை ஒழித்து 'ஒருவனுக்கு ஒருத்திதான்' என் பதை 1950-இல் அம்பேத்கார் தான் சட்டமாக கொண்டு வந்தார். அதை மட்டுமல்ல, குழந்தை மணத்தடை, விதவை மறுமணம், விவாகரத்து அனைத்தையும் இந் துமதவெறியர்கள்தான் எதிர்த் தார்கள், முசுலீம்கள் அல்ல. எனவே சமீபகாலம் வரை ஒரு வன் பல பெண்களை வைத்திருப் பதுதான் இந்துப் பண்பாக இருந் தது.

7-ஆம் நூற்றாண்டிலாவது நபி நாயகம் 4 மனைவிக்கு மேல் மணக் கக் கூடாது என்க் கட்டுப்பாடு விதித்தார். ஆனால் இந்து மதத்தில் 20-ஆம் நூற் றாண்டு வரை அந்தக் கட்டுப்பாடு கூட இல்லை என்பதே முக்கியம்.

விவாகரத்து என்பது மேற்கிலி ருந்து வந்த சாபக்கேடு என்கிறார்கள். இல்லை, அது ஒரு ஜனநாயக உரிமையா கும். இந்து தர்மப்படி புல்லாக பொறுக்கி யாக இருந்தாலும் கணவனே கண் கண்ட தெய்வம் என்னும் அடிமைத்தனத்திலி ருந்து விடுவித்து விவாகரத்து ஒரு பெண்ணுக்குரிய உரிமைகளைக் கொடுக் கிறது. எனவே மேற்கோ, கிழக்கோ எங் கிருந்து வந்தாலும் முதலில் மரியாதை செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்து மத இலக்கியங்களில் தெய் வங்களும், பார்ப்பனர்களும் மாறுவே டம் பூண்டு கள்ள உறவு கொள்வது, கற்ப ழிப்பது என்பது சாதாரண விசயம். இத்த கைய 'உரிமைகள்' இன்று பறிபோன நிலையில்தான் இந்துமதவெறியர்கள், குய்யோ முறையோ என்று கத்துகிறார் கள். இந்தக் கொடுமைகள் பெருமளவு இல்லாமல், விவகாரத்து, மறுமணம் போன்றவை நம் நாட்டு உழைக்கும் மக்க ளிடம் இயல்பாக இருந்தது. இதை எண்ணித்தான் நாம் பெருமைப் பட வேண்டும்.

**ஊ) பாரத புனிதஸ்தலங்களை மறந்து விதேச புனித நகரங் களை நினைப்பது**

அப்படிப் பார்த்தால் இந்துக் களின் புனித இடங்களான பசுபதி நாத் நேபாளத்திலும், கைலாய மும் மானசரோவரும் சீனாவிலும் இருக்கிறது. இவ்விடங்களுக்குச் செல்லும் இந்துக்கள் இந்தியா வின் தேசவிரோதிகள் என்றே கருத வேண்டும். உலகெங்கும் வாழ்ந்து வரும் புத்த மதத்தினர்,

**'ஒருவனுக்கு ஒருத்தி' என்பது இந்துப் பண்பாடல்ல. 'ஒருத்திக்கு ஒருவன்தான்' இந்துப் பண்பாடாகும். அதாவது ஆணுக்கு எத்தனை மனைவிமார்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், பெண்ணுக்கு ஒருவன் மட்டுமே கணவனாக முடியும். மேலும் இந்தப் பண்பாடு உலகெங்கிலும் இருக்கும் ஆணாதிக்கப் பண்பாடுதான்.**



படிப்பகம்

www.padippakam.com

தென் கிழக்காசிய நாடுகளில் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். இவர்களுக்கு இந்தியாவின் புத்த கயா புனிதமான இடமென்பதால், அவர்கள் அந்தந்த நாடுகளின் தேச விரோதிகளா?

அதேபோல் இந்தியாவில் இருந்து பல தலைமுறைகளுக்கு முன்பே, இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, பிஜித் தீவுகள், மொரீஷியஸ், மாலத் தீவு, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் இந்தியர்கள் வாழ்கிறார்கள். இன்று அந்நாடுகளின் குடிமக்களாக, ஏன் அமைச்சர் களாகக் கூட இருக்கிறார்கள். இந்தியா மறந்து போனாலும் மதம் என்ற அடிப்படையில் இங்குள்ள புனித இடங்கள்தான் அவர்களுக்கும் புனிதம். இதனால் இவர்களைத் தேசதுரோகி என்று அந்நாடுகள் அடித்துத் துரத்தலாமா?

வாடிகனும், பெத்லஹேமும், மெக்கா, மெதினாவும் உலக கிறித்தவ, முசுலீம் மக்கள் அனைவருக்கும் புனிதமான இடங்களாகும். ஆர்.எஸ்.எஸ். கணக்குப்படி எல்லா கிறித்தவ முசுலிம் நாடுகளுக்கும் தேசபக்தி இருக்கக் கூடாது. அல்லது உலகில் ஒரு கிறித்தவ நாடும், ஒரு முசுலீம் நாடும் மட்டும் தான் இருக்க வேண்டும். ஏன் அப்படி இல்லை?

அப்படி இருக்க முடியாது என்பதைத்தான், ஒரு மதம் ஒரு தேசத்ததையோ, தேசபக்தியையோ உருவாக்க முடியாது என்ற உண்மை நமக்கு உணர்த்துகிறது. தேசம் உருவாக அரசியல், சமூக, பொருளாதார, மொழி, பண்பாடு - போன்றவைதான் காரணமாக முடியும். மத நம்பிக்கையும், புனித நகரங்களும் யாருக்கும் தேசபக்தியை உருவாக்க வக்கற்றவையே!

பார்ப்பன, மேல் சாதியினரைத் தவிர்த்து பெரும்பான்மை உழைக்கும் மக்களின் பண்பாட்டில் தீர்த்த யாத்திரைகளெல்லாம் கிடையாது. நாட்டுப்பற்று என்றால் என்ன? ஸ்வயம் சேவகர்கள் பாரதமாதா போட்டோவுக்குப் பூசை செய்வது அல்ல. நாட்டு மக்களை சுரண்டல், ஒடுக்குமுறை, பிற்போக்கு அனைத்திலும் இருந்து விடுவிக்க தளராமல் போராடுவதுதான் நாட்டுப்பற்றைக் குறிக்கும். இது காசிக்கோ, மெக்காவுக்கோ யாத்திரை செல்வதால் வருதல்ல.

**முன்னோர்களை, தாத்தா, பாட்டிகளை - முட்டாள்கள், அறிவிலிகள் என்று கருதும் எண்ணம் வளருகிறது.**

''கங்கைக் கரையிலும், காவிரிக் கரையிலும் அரிசியை உணவாக உட்கொண்டு வாழும் சில ஜந்துக்கள், வேதத்திலேயே எல்லாம் கண்டுபிடிச்சாச்சாக்கும் என்று மமதையுடன் பிதற்றுவதை'' புதுமைப்பித்தன் குறிப்பிடுகிறார். வேதம் மட்டுமல்ல அனைத்து பிற்போக்குத் தன்மைகளையும் முதியோருக்கு கட்டுப்படல் என்ற இன்னொரு பிற்போக்கின் மூலம்தான் பார்ப்பனியம் வாழையடி வாழையாகத் தொடருகிறது. அதனால்தான் எல்லாப் பிரிவினரிலும் உள்ள புதுமையும், துடிப்பும் கொண்ட இளைய பிரிவினர், இத்தகைய முட்டாள் முதியவர்களால் விரைவில் முதியவராகி விடுகின்றனர்.

எனவே வயது, இயலாமை, ஓய்வு என்ற அளவிலே மட்டும்தான் முதியவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு ஒரு சமூகத்துக்கு இருக்க வேண்டும். மாறாக இவர்களது முட்டாள்தனங்கள் பிற்போக்கு குணங்கள் ஆகியவற்றை ஒழிப்பதற்குப் போராடுவதையும் அதே சமூகம் செய்ய வேண்டும் என்கிறோம்.



**சேலையைவிட, முகலாயர்கள் அறிமுகப்படுத்திய சுரிதார், சல்வார் கமீஸ்வசதியாக இருக்கிறது என்பதால் பெண்கள் விரும்பி அணிகிறார்கள். வேண்டுமானால் அதை ஆர்.எஸ்.எஸ். தடுக்கட்டுமே!**

**ஏ) சித்திரைபோய் ஜனவரி கொண்டாடுதல், ஆன்மீகம் அருகி லோகாயதம் சீர்கேடுகள் பெருகுதல்**

இந்துப் பஞ்சாங்கத்தின்படியே எல்லா இந்துக்களுக்கும் ஒரே வருடப்பிறப்பு என்பது கிடையாது. தமிழ், தெலுங்கு, பஞ்சாபி, வடகிழக்கு போன்ற இடங்களில் பல வருடப்பிறப்புக்கள் கொண்டாடப்படுகின்றன. வழக்கம்போல இவையும் பார்ப்பன மேல் சாதி - மேல்தட்டினர் கொண்டாடுபவைதான். வாழ்நாள் முழுதும் ஏழ்மையில் உழலும் அடித்தட்டு மக்களுக்கு பழைய - புதிய என்ற வருடப்பிரிவினைக்கு முக்கியத்துவம் ஏதுமில்லை.

ஜனவரி ஆரம்பம் - கிறித்தவ மதத்திற்கு மட்டுமல்ல, உலகமே கொண்டாடி வருகிறது. கோயிலில் போய் அர்ச்சனை செய்து புத்தாண்டு கொண்டாடுவது நடுத்தர வர்க்க மக்களின் பழக்கமாகும். பல இசுலாமிய நாடுகளிலும் இத்தினம் விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிறந்த நாளுக்கு கோவிலுக்குப் போவதோ, கேக் வெட்டுவதோ முக்கிமல்ல. அப்படி ஒருநாள் இருப்பதே தெரியாமல்தான் சாதாரண மக்கள் வாழுகின்றனர். மேலும் 'ஜன்ம நட்சத்திரம்' என்ற கடவுளர்கள், மன்னர்கள், பார்ப்பனர்கள் ஆகியோரது தினங்கள் தான் இந்துக்களுக்கு முக்கியமாகும்.

மற்றபடி பொதுமக்கள் தங்கள் பிறந்தநாள், திருமண நாள் கொண்டாடுவது ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்தியவைதான். இவையும் காசு உள்ள நடுத்தர வர்க்கம்தான் கொண்டாடுகிறது. கேக்கோ, பாயசமோ, எல்லாம் நுகர்வுக் கலாச்சாரத்தின் மூலம் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தான் லாபமே ஒழிய, மக்களுக்கல்ல. சர்வ தேச மூலதனச் சுரண்டலுக்கு மதலேபிளெல்லாம் கிடையாது.

லோகாயதம் பெருகி அராஜகங்கள் வளருவது என்று சாரத்தில் பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டங்களைத் தான் குறிப்பிடுகிறார்கள். அதாவது சாதி, தீண்டாமை எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பெண்ணடிமைத்தன எதிர்ப்பு, இடஒதுக்கீடு, தேசிய இன ஒடுக்குமுறை எதிர்ப்பு, ஆகிய போராட்டங்கள்தான் அவர்களுக்கு கலிகாலத்தை உணர்த்துகிறது.

மற்றபடி கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவைகள் மதமாற்றத்தினால்தான் நடக்கிறது என்றால் எதைச் சொல்லி அழ? பிரேமானந்தா, சந்திரா சுவாமி, சாயிபாபா, ஜெயா - சசி கும்பல், அர்ஷத்மேத்தா, ஜெயின் சகோதரர்கள், சம்பல் கொள்ளையர்கள் போன்றோர்களெல்லாம் ரகசியமாக மதம் மாறியவர்களா? இதற்கு இராம.கோபாலனைப் போட்டு ஒரு விசாரணைக் கமிஷன் நியமித்து, வெள்ளை அறிக்கை வெளியிடுங்களேன்!

— தொடரும்.

★☆★



படிப்பகம்

www.padippakam.com

*சிறுகதை:*

# பள்ளிக்கூடப் பாவாடை

● இலட்சுமணப் பெருமாள்

ஊர்க்கஞ்சி எடுத்து வந்த சுப்பு, அதில் நெல்லுச் சோற்றை மட்டும் தனியாய்ப் பிரித்து சாப்பிடும் வட்டிலில் எடுத்து வைத்தாள்.

''பார்வதி! அடியேய்! ஒரு கிண்ணத்தை எடுத்துக்கிட்டுப் போயி கடை கருப்பையாபிள்ளை வீட்டுலெ சுண்ட வச்ச பழைய குழம்பு இருக்குன்னாக போயி வாங்கியாந்து இந்த சோத்துல ஊத்தி சாப்பட்டு பள்ளிக்கூடம் போ திங்கக் கிழமையில்லெ இன்னக்கி.''

தினமும் சாப்பிடக்கூட ஆர்வங் காட்டாமல் காலையிலேயே தடபுடலாய்ப் புறப்பட்டு பைக்கட்டை இடது கையில் நுழைத்து தோளில் சேர்த்துக் கொண்டு சம்சாரி தெரு வழியே பிள்ளைகள் போறாகளா என்று எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டேயிருப்பாள் பார்வதி. உடனொத்த பிள்ளைகளின் நடமாட்டங்காணவும் சந்தோசமாய்க் குதித்துக் கொண்டு பள்ளிக் கூடம் ஓடுபவள் அன்றைக்கு ரொம்ப சொணங்கிப் போயிருந்தாள்.

டீச்சர் கேள்வி கேட்க கேட்க டக்கு டக்கென்று பதில் சொல்வாள். அதுவும் ஆதிலட்சுமி பதில் சொன்ன பிறகு அது தப்பாயிருந்தாதான் இவள் சொல்லணும். இல்லையென்றால் ''முந்திரிக் கொட்டை சும்மா கெடக்கமாட்டே'' என்று டீச்சரம்மா ஸ்கேலால் பார்வதியில் தலையில் அடிப்பாங்க. மனக்கணக்கு போட்டாலும் ஆதி லட்சுமி சிலேட்டுல எழுதி கீழே கவுத்தின பிறகு தான் இவள் கவுத்தணும். இல்லென்னா டீச்சருக்கு கோபம் சண்டாளமா வரும். போன வாரம் சின்ன ஈயச் சட்டியை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு தெருவழியே போகும் போது பண்ணை தர்மர் நாயக்கர் வீட்டுக்கு நேரே வந்தாள்.

''ஏட்டி சுப்பு மகளே இங்க வாடி''

முதலாளியம்மாள் கூப்பிட்டதும், ''என்ன தாயி?'' என்று பக்கத்தில் போய் நின்றாள்.

பண்ணைக்கூலிகள் பத்திருபது பெண்களை அங்கங்கே வேலைக்குப் பிரித்து விட்டுக் கொண்டிருந்த பணியை நிறுத்திவிட்டு மெனக்கெட்டு பார்வதியை விசாரித்தாள்.

''போன திங்கக்கிழமை பள்ளிக்கூடத்துக்கு எங்க ஆதிலட்சுமி பாவாடை சட்டையவாடி போட்டுக்கிட்டு போனே? திமுரா? ஒங்க ஆத்தா இந்தப் பக்கமா வந்தான்னா வெளக்கமாத்தால சாத்திப் புடுவேன் கண்டார ஒலிய! அவரு காதுக்கு இன்னும் போகலே. தெரிஞ்சது செருப்புட்டே நொப்பன பறி மாறிருவாரு. ஓம் மொகர கட்டக்கி பாலீஸ்டர் பட்டு கேக்குதாக்கும்? இன்னிமே எங்க துணிய கெட்டுதைப் பாத்தேன் கண்ணு ரெண்டையும் விட்டுட்டு உரிச்சிருவேன் உரிச்சி!''

பேக்வேர்டு கிளாஸ் மாணவ மாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப் வந்திருந்தது. ஆதிலட்சுமி பார்வதி உட்பட எல்லாரும் போய் ஹெட்மாஸ்டர் ரூமில் வரிசையாய் நின்றார்கள். அன்று திங்கட்கிழமை எல்லோரும் யூனிபாமில் வந்திருந்தார்கள். ஆதிலட்சுமி மட்டும் பட்டுப்பாவாடை சட்டையில் வந்திருந்தாள்.

''ஏம்மா நீ பணக்காரிங்கிறது எங்களுக்கு தெரியணுமா? எல்லோரும் எப்படி ஒண்ணுபோல டிரஸ் பண்ணியிருக்காங்க? அட இந்த பார்வதி! மேச்சட்டையிலெ மூணு ஊக்கு பாவாடையிலெ ஏழு ஊக்கு மாட்டி உடுத்திக்கிட்டு வர்றவ இன்னக்கிப்பாரு எவ்வளவு டிஸ்ஸிப்பிளீனா வந்துருக்கா?''

எல்லோரையும் போல ஆதிலட்சுமியும் ஆச்சரியமாய் பார்வதியைப் பார்த்து விட்டுச் சொன்னாள்.

''சார் சார் அது என் யூனிபாம் சார் துவைக்கப்போட்டதை எடுத்து உடுத்திக்கிட்டு வந்திருக்கா சார்.''

''அதானெ பாத்தேன் என்னடா மழைக்கோட்டு போட்ட மாதிரி இருக்கேன்னு! உருவத்துக்கும் உடுப்புக்கும் சம்பந்தமேயில்லாம''

ஹெட்மாஸ்டர் உள்பட எல்லோரும் சிரித்தார்கள்.

> 'ஏமா! அந்த அம்மாவுக கூடமாட இரும்மா. நெறய சொந்தக்காரங்க பாக்க வரும்போது பழம் பலகாரம் பண்டம்னு ஒரே வாக்குல வாங்கி யாருவாக. இங்கென திங்க யாரிருக்கா? மிச்சம் சொச்சம் சிந்தனது சிதறுனது பூரா நமக்குத்தான். பள்ளிக்கூடம் போயி என்ன ஆகப் போகுது?

''ஆதிலட்சுமியம்மா!'' வெளியே வந்ததும், பார்வதி, பிள்ளைகளோடு சிரிச்சிப் பேசி போயிக் கொண்டிருந்தவளை பயத்தோடு கூப்பிட்டாள்.

''ஒங்க துணிதாம்மா! யூனிபாமில்லாம பள்ளிக்கூடத்துக்குள்ள நொழயக் கூடாதுன்னாட்டாங்கல்ல. ஒங்க எண்ணா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. அதும்போக, அந்த அம்மாவுக்கு மூணு உருப்படிபோல பள்ளிக் கூடத்துச் சட்டையிருக்கு. இன்னக்கி ஒரு நாளக்கி இத நீ போட்டுக்கோன்னு எங்க ஆத்தா தான் சொன்னா. சாயிந்திரம் போயி அலசி தேச்சி கொண்டாந்திர்றேம்மா.''

''சரி சரி! ஆதி! இனிமே நம்ம வீட்லயெல்லாஞ் சொல்லி சுப்புகிட்டே துணிமணிகளை தொவைக்க போடக்கூடாதும்மா. அப்படி போட்டமாக்கும் அது இவளுக்குப் போகத்தான் நமக்கு மிச்சம்.''

அங்கே கூடியிருந்த ஆம்பளப்புள்ளகளும் பொம்பளப்புள்ளெகளும் கேலியாய்ச் சிரித்தார்கள். பார்வதிக்கு ரொம்ப அவமானமாயிருந்தது.

● ○ ●

''சரி கழுத! பள்ளிக்கூடத்துக்கு போகாட்டா இன்னக்கி ஒரு பொழுது கெட. பெழைக்கிற பெழப்புல ஊனிபாமுக்கு எங்க போக ஊனிபாமுக்கு. தன்னால கஞ்சித் தண்ணிக்கே லோல்பட்டு சீரழிய வேண்டியிருக்கு. நாளப்பின்ன போயிக்கிடலாம். வருசக்கூலி வாங்கி ஒத்தச் சட்டை எடுக்க முடியுமான்னு பாப்பம். அப்ப எங்கூட தொறக்கி வா போவம். நொப்பன் முள்ளுக்கு போகட்டும். வெள்ளாவி வக்கெ வேண்டிய துணிக அப்படியே கெடக்கு.''

பெரிய அழுக்கு மூட்டையைச் சுமந்து கொண்டு அம்மா கூட கிளம்பினாள் பார்வதி. கண்மாயிலிருந்து வீடு வந்து சேர மணி ஐந்து ஆகிவிட்டது.

துவைத்த பொதியை ஒரு மூலையில் இறக்கி வைத்ததும் பள்ளிக்கூடத்துக்கு ஓடினாள் பார்வதி. வெறிச்சோடிக் கிடந்தது. பரிதாபமாய் சுற்றுமுற்றும் பார்த்தாள். வராண்டாவில் அங்குமிங்குமாக நடந்தாள். பின்புறமாய் ஓடினாள். சாயுங்காலம் மூணுமணிக்கு ஒண்ணுக்கு விட்டதும் பிள்ளைகளோடு ஓடிவிளையாடும் இடத்தைப் பார்த்தாள். தன் முறைக்கு விட்டிருந்த ரோஜா செடி மொட்டு விட்டிருந்தது. அதுக்கு யாருமே இன்று தண்ணீர் ஊற்றவில்லை. அதுபோலவே இவளும் முகம் வாடிப் போனாள். ரொம்ப நாளாய்ப் பிரிந்து போன வெறுமை கட்டியது. பழையபடி வராண்டாவிற்கு வந்து ஜன்னல் கதவு



படிப்பகம்

www.padippakam.com

களை கம்பிகள் இடுக்கின் வழியே கைக ளால் குத்தினாள். நல்லவேளை ஒரு கத வுக்குமட்டும் உள்புறம் தாழ் போடாமலி ருந்தது.

கம்பி வழியே இவள் வகுப்பைப் பார்த்தாள். இவள் உட்கார்ந்திருந்த பெஞ்சு கோணலாய் சாய்ந்து கிடந்தது. யாரோ இவள் இடத்தைப் பிடித்து விட்ட மாதிரி மனசு படபடவென்று அடித்தது. டீச்சர் உட்காரும் நாற்காலியைப் பார்த்த தும் இப்பவும் மரியாதையாய் உதடுக ளின் மேல் ஆள்காட்டி விரலால் பொத் திக் கொண்டாள். போக மனசில்லாமல் வராண்டாவில் உட்கார்ந்து தூணோடு சாய்ந்து காலை ஆட்டிக் கொண்டு வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள். இருட்ட ஆரம்பித்தது. 'நாளக்கி வந்துருவோ முள்லெ' என்று முனகிக் கொண்டே சந் தோசமாய் சேக்காளிகள் வீடுகளுக்குப் போய் ஒவ்வொருவராய்ப் பார்த்தாள்.

வெளியில் நின்று கொண்டு ஒவ் வொருவரையும் சிரிப்பும் ஏக்கமும் கலந்த முகத்தோடு பார்த்தாள். எல்லோ ரும் இவளை விட எவ்வளவோ படித்து முன்னேறிப்போன மாதிரி தோன்றியது இவளுக்கு. 'நா நாளக்கி பள்ளிக்கூடம் வந்துருவேன்மா' என்று ஒவ்வொருவ ராய்ச் சொல்லிவிட்டு வந்தவளை தெரு வில் வைத்துப் பார்த்த சுப்பு 'தொறையி லிருந்து வந்தும் வராம எங்கடி போனே?' என்று கேட்டாள்.

''பிள்ளைகளெ பார்க்கப் போனேம்மா''

''போதும் போதும் நீ படிச்சது. அந்த தருமர் நாய்க்கெரு மக வயசுக்கு வந்திரிச்சி, அதாண்டி ஒங்கூட படிக்கிற புள்ள''

''ஆங்....'' என்று கண்களை அகல விரித்தாள் பார்வதி.

''ஒன்னய அந்த மொதலாளியம்மா வரச் சொல்லிச்சி போ என்னான்னு கேட் டுட்டு வா! ம்..... ஆதியம்மா ஒஞ்சோடு தான். நேத்துப்புள்ள. திட்டமில்லாம மீறி ருச்சி அவுக அம்மா கணக்க, நீயும் இருக் கியே நலுங்கிப் போயி.''

''போயிட்டு வந்து நாளக்கி பள்ளிக் கூடம் போகலாமுள்ல?''

''ஏ போடி. அங்கிட்டு பெரிய சம் சாரி வீட்டுப் பிள்ளெயே அந்தா இத் தோட சரி இன்னுமே படிக்க போட லேனுட்டாக. நீயி படிச்சி பெரிய கலெக் டராகப் போறயாக்கும். மொதல்ல அங்க போயி என்ன, எவடம்னு சொன்னபடி கேட்டுட்டு வா.''

பார்வதிக்கு ரொம்ப வருத்தமாயி ருந்தது. படிப்பை நிறுத்தி விடுவார் களோ என்று உள்ளுக்குள் பயந்தாள்.



பண்ணை வீட்டிற்குள் ஏகப்பட்ட கூட்டமாயிருந்தது.

''வயசுக்கு மீறுன உடம்பு கட்டு. அவுக அம்மா மாதிரி. ஐயா கூட பொறந்த அத்தை மார்களும் நல்ல வர்க் கமில்லெ.''

வெளியே வந்த பெண்கள் பேசிக் கொண்டு போனார்கள். பார்வதியின் அப்பன் ஒரு ஓரமாய் நின்று கொண்டி ருந்தான். தாய்மாமன்மார்களுக்குச் சேதி சொல்ல அவன்தான் போக வேண்டும். போன இடத்தில் அவர்கள் சந்தோசத் தில் சன்மானம் எதுவும் தருவார்கள்.

அப்பனைப் பார்த்த பார்வதி ஓடி வந்து ''யய்யா நா பள்ளிக்கூடம் போக வேண்டாமாம் அம்மா சொல்றா?'' அழ மாட்டாமல் அப்பன் வேட்டியைப் பிடித் துக் கொண்டு கெஞ்சினாள்.

''ஏமா! அந்த அம்மாவுக கூடமாட இரும்மா. நெறய சொந்தக்காரங்க பாக்க வரும்போது பழம் பலகாரம் பண்டம்னு ஒரே வாக்குல வாங்கியாருவாக. இங் கெனதிங்க யாரிருக்கா? மிச்சம் சொச்சம் சிந்தனது சிறதறுனது பூரா நமக்குத்தான். பள்ளிக்கூடம் போயி என்ன ஆகப்போ குது? பிழைக்கத் தெரியாத புள்ளயா இருக்கெயே!

''ஒம்மக வந்துட்டாளாப்பா?''

மொதலாளியம்மா வெளியே வந்து கேட்டாள். கூட வந்த பெரிய பெரிய சம்சாரிப் பெண்களிடம் பார்வதி யைக் காட்டினாள்.

''இந்தா நிக்காள்ள இவ வயசுதான். இவ காலையில பொழுது புறப்பட பொறந்தா. எம்மக அன்னக்கி சாமம் போல பொறந்தா. என்னப்பா?''

''ஆமாம்மா. ஒரு நா கணக்குத் தான்''

''இப்படி வாடி!'' ஒரு மூலையில் ஆதிலட்சுமியின் திங்கட்கிழமை யூனி பாம் பொட்டலமாக முடிந்து கிடந்தது. ஒரு குச்சியைக் கொண்டு வந்து கையில் கொடுத்தான் அப்பன்.

''இந்தா இதுல கோர்த்து கால் தடந் தெரியும் போதே கம்மாய்க்குக் கொண் டுட்டு போ''

''ஏட்டி பார்வதி போயிட்டு வந்து நம்ம வீட்லயே பாப்பாவுக்கு ஒத்தா சையா இரு. இங்கனயே மூணு நேரமும் சாப்ட்டுக்கோ.'' ''போன வாரந்தான் அவள சத்தம் போட்டேன். இப்பொ அந்த துணி அவளுக்கே ஆகிப்போச்சு.'' அங்கலாய்த்த படியே உள்ளே போனாள் முதலாளியம்மா.

●



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியப் பொதுவுடைமை இயக்கம் வலது, இடது வரலாறு:

# மண்ணுக்கேற்ற மார்க்சியமா? மரபு வழி மார்க்சியமா?

ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள் என்றால் எப்படியும் பேசுவார்கள், கேட்டுக் கேட்டுச் சலித்துப் போனதுதான். ஆனால், ''அட! இப்படியும் பேச முடியுமா!'' என்று ஒரு நிமிடம் திகைக்க வைத்துவிட்டார், சீனிவாசன்.

இவர் நேற்றுவரை இந்தியக் ''கம்யூனிஸ்ட்'' கட்சியின் தேசியக் குழு உறுப்பினர்; தமிழ் மாநிலத் துணைச் செயலாளர். ஆனால் இன்று பாரதீய ஜனதாக் கட்சியில் சேர்ந்துவிட்டார். ''ஒரு மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் திடீரென்று, அக்கட்சியின் பரம எதிரியும், இந்து மதவெறி பாசிசக் கட்சியுமான பாரதீய ஜனதாவுக்கு எப்படி மாறினார். ஏதாவது ஒரு முற்போக்கு சாயலுடைய கட்சிக்குத் தாவினால்கூட கொஞ்சமாவது நியாயமிருக்கும்.

''முன்புகூட சில சி.பி.ஐ. பிரமுகர்கள், தி.மு.க., அ.தி.மு.க.வுக்குப் போயிருக்கிறார்கள். கடந்த தலைமுறையில் மோகன் குமாரமங்கலம், நந்தினி சத்பதி, கே.ஆர். கணேஷ் போன்ற சில தலைவர்கள் காங்கிரசு - இந்திரா மூலமாக சோசலிசத்துக்குப் பாதை போடுவதாகச் சொல்லிக் கொண்டு போயிருக்கிறார்கள். ஆனால், இப்படியா!'' திகைத்து நிற்கிறார்கள், அக் கட்சியில் சிலர்.

''பிழைப்புவாதம் எந்த வயதிலும் வரலாம், இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை!'' என்று சமாதானம் கூறுகிறார், கட்சியின் இளைய - புதிய தலைவர் மகேந்திரன்.

ஆனால், கட்சி மாறிய சீனிவாசன், தனது செயலுக்குச் சித்தாந்தபூர்வமான நியாயம் சொல்லுகிறார். ''மார்க்சியத்தின் மறுவடிவம் பா.ஜ.க.

''அது எப்படி முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுகிறாரே!'' என்று நீங்கள் வியக்கலாம்.

''முடியும்'' என்று சாதிக்கிறார். ''சிகப்பு வெளுத்தால் காவி'' என்று கூடச் சொல்லவில்லை. ''காவியும் ஒரு சிகப்பு வண்ணம்தான்; சாயல்தான் வேறு'' என்று ''நிகழ்'' காலத்துக்கு ஏற்ற ''நிறப் பிரிகை''த் தத்துவம் பேசுகிறார்.

''இந்திய மண்ணில், இந்தியக் கலாச்சார மரபில், இந்தியத் தத்துவஞானத்தில் வேர்விட்டு, மார்க்சியத்தின் சிந்தனை வழியில் நாம் கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்று கட்சியின் அமைப்பு விதியிலேயே திருத்தம் கொண்டுவரப்பட்டது. வேதங்களையோ, உபநிஷத்துக்களையோ, இதிகாசங்களையோ, புராணங்களையோ, மகாபாரதத்தையோ, இராமாயணத்தையோ பற்றிக் குறைந்தபட்ச அறிவுகூட இல்லாமல் எப்படிச் சிறந்த கம்யூனிஸ்டாக இருக்க முடியும்?'' என்று கேட்கிறார், சீனிவாசன்.

மேலும், ''மார்க்சியம் என்பது விஞ்ஞானம். இதை இந்தியச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப செயல்படுத்த இங்குள்ள கம்யூனிஸ்டுகள் தவறிவிட்டார்கள். காங்கிரசு, திராவிட இயக்கங்கள் போன்றவற்றின் சித்தாந்தங்களும் காலாவதியாகிவிட்டன. மார்க்சிய சிந்தனைகளை இந்தியச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப செயல்படுத்தக் கூடிய கட்சி பா.ஜ.க. என்பதால்தான் அக்கட்சியில் சேர்ந்தேன்.''

''இந்திய மரபு, இந்திய அறிவு, இந்திய ஞானம் இவற்றில் நாம் வேரூன்றி நிற்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் வாதம். இது மார்க்சியத்தின் மறுவடிவம்தான்.'' என்றும் கூறுகிறார்.

''ஒரு கம்யூனிசத் துரோகி கண்டதையும் பேசுவான். அதையெல்லாம் ஒரு பொருட்டாய்க் கொள்ளத் தேவையில்லை'' என்று வெகு சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியும். இது ரொம்ப எளிமையான கணக்கு. பாரதீய ஜனதாவோ இந்து வெறி பாசிச - பார்ப்பன சனாதனக் கட்சி, அதில் போய் சேருகிறவன் வேறு எப்படி இருப்பான், எதிரியின் அணியில் சேருபவன் வேறென்ன பேசுவான் என்பதுதான் அந்தக் கணக்கு.



சிங்காரவேலர்

சீனிவாசன் எதிரி முகாமுக்குப் போய் விட்டதாலேயே அவர் சொன்ன கருத்துப் பற்றிக் கணக்குப் போடுவது பலருக்கு எளிதாகப் போய்விட்டது. பா.ஜ.க.வின் எதிரி முகாமாகிய ''நம்மிடையே'' இருக்கும் இவர்களுடைய கருத்துக்களையும் பற்றிக் கணக்குப் போடுவது அதே பலருக்கு சிக்கலாக உள்ளது. பல சமயம் தவறாகவும் போய் விடுகிறது.

பா.ஜ.க.வையும் மார்க்சியத்தையும் இணைப்பதற்கு சீனிவாசன் பயன்படுத்தியிருக்கும் சங்கிலி, ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்.'' முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் முயற்சியாக அவர் இந்து மத வெறி பாசிச - பார்ப்பன சனாதனத்தை மார்க்சியத்திற்குள் புதைத்து மோசடி செய்ய முயலுகின்றார் என்பது ஒரு புறம் இருக்கட்டும். தவிர, ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' பேசுவோர் பட்டியலில் சமீபத்திய அவதாரம்தான் இந்தத் துரோகி என்பது மற்றொரு உண்மை.

''இந்தியப் பொதுவுடைமை இயக்கம் இதுவரை மண்ணுக்கேற்ற மார்க்சியத்தைக் கடைப்பிடிக்கவில்லை'' என்பது சீனிவாசனின் குற்றச்சாட்டு. ''பா.ஜ.க.தான் மண்ணுக்கேற்ற மார்க்சியத்தைப் பின்பற்றும் சரியான கட்சி'' என்பது, அவர் எடுத்திருக்கும் முடிவு.

சீனிவாசனின் முடிவில் மாறுபட்டாலும் அவரது குற்றச்சாட்டில் முற்றாக உடன்படுபவர்கள் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்திற்குள்ளும், பெரியாரியம், அம்பேத்கரியம், காந்தியம், தலித்தியம், தமிழினம், திராவிடம், சமூக நீதி எனப் பல்வேறு பிரிவுகளாக உள்ளவர்கள் வெளியேயும் ஏராளம்.

உள்ளே இருப்பவர்கள் வெளியே போகும் போதெல்லாம், வெளியே இருப்பவர்களின் நிலைப்பாடுகளை பொதுவுடைமை இயக்கத்தவர்கள் விமர்சிக்கும் போதெல்லாம், ஏதோ முற்றிலும் புதிதாகச் சொல்லுவதைப் போல முன்வைக்கப்படுவதுதான் ''மண்ணுக்கேற்ற மார்க்சியம் தேவை'' என்கிற வாய்ப்பாடு.

இவர்கள் அனைவரும் இரண்டு உண்மைகளை மறந்து விடுகின்றனர்.

முதலாவதாக, இந்தியப் பொதுவுடைமை இயக்கத்துக்கு எண்பது ஆண்டு கால வரலாறு உள்ளதென்றால், இந்த ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' என்கிற வாய்ப்பாட்டுக்கும் எண்பது ஆண்டுகால வரலாறு உண்டு.

இரண்டாவதாக, இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் இந்த எண்பதாண்டு கால வரலாற்றில், ஒரு சில குறிப்பிட்ட, குறுகிய காலங்கள் தவிர இங்கு அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தியதே ''மரபு வழி மார்க்சியம்'' அல்ல; ''மண்



படிப்பகம்

www.padippakam.com

ணுக்கேற்ற மார்க்சியம்'' தான். ஆனாலும், ''இந்தியப் பொதுவுடைமை இயக்கம் மண்ணுக்கேற்ற மார்க்சியத்தை வகுத்து வழி நடத்தவில்லை. அது வரட்டுத்தனமாக மரபு வழி மார்க்சியத்தைப் பின்பற்றித்தான் பரிதாபகரமாகத் தோற்றுப் போய்விட்டது'' என்று விமர்சிக்கப்படுகிறது.

இப்படிச் சொல்பவர்கள் எல்லாம் ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' ''மரபு வழி மார்க்சியம்'' என்கிற சொற்றொடர்களுக்கு ஒரே பொருள் விளக்கம் தருவதில்லை. அவரவர் நிலையில் நின்று பலவாறாக விளக்கங்களும் விமர்சனங்களும் தருகின்றனர்.

''இந்த நாட்டின் தனிச்சிறப்பான கூறுகளாகிய ஆன்மீகம், அகிம்சையை, ஐரோப்பியத் தத்துவமான மரபுவழி மார்க்சியம் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. மார்க்சியத்துடன் காந்தியத்தையும் இணைப்பதன் மூலம் மண்ணுக்கேற்ற மார்க்சியத்தை வளர்த்தெடுக்க முடியும்'' என்று சிலர் சொல்லுகின்றனர்.

''இந்த நாட்டின் தனிச் சிறப்பான கூறுகளாகிய தேசிய இனப்பிரச்சினை, சாதிய முறை போன்றவற்றை ஐரோப்பியத் தத்துவமான மரபு வழி மார்க்சியம் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. மார்க்சியத்துடன் பெரியாரியத்தையும் அம்பேத்கரியத்தையும் இணைப்பதன் மூலம் மண்ணுக்கேற்ற மார்க்சியத்தை வளர்த்தெடுக்க முடியும்'' என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

இவ்விரு பிரிவினரின் கருத்துப்படி இந்தியாவில் பொதுவுடைமை இயக்கத்தின் நிறுவியவர்களும், அதன்பின் தலைமையேற்றவர்களும் ஐரோப்பியத் தத்துவமான மரபு வழி மார்க்சியத்தை அப்படியே பின்பற்றினார்கள் என்றாகிறது. ஆனால் அது உண்மையல்ல. இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் நிறுவனர்கள் என்று ''அறியப்படும் அனைவரும்'' மரபு வழி மார்க்சியத்தை ஆரம்ப முதலே ஏற்க மறுத்தவர்கள். உலகப் பொதுவுடைமைக் கட்சிகள் எல்லாம் இணைந்திருந்த மூன்றாவது அகிலம், அதன் மூலமாக லெனின், ஸ்டாலின் போன்றவர்களின் வழிகாட்டுதலை நிராகரித்தவர்கள்தான் அவர்கள்.

''இந்த நாட்டின் தனிச் சிறப்பான கூறு, இங்குள்ள தேசிய முதலாளிகள் முற்போக்கானவர்கள். மூன்றாவது அகிலத்தைச் சேர்ந்த போல்ஷ்விக் (ரஷ்யப் பொதுவுடைமைக் கட்சி) ஏஜெண்டுகளின் மரபு வழி மார்க்சியம் இதைக் கணக்கில் கொள்ளவில்லை. இந்திய தேசியக் காங்கிரசின் முற்போக்குப் பிரிவினருடன் ஐக்கியப்பட்டு, விடுதலையையும் சோசலிசத்தையும் சாதிப்பதுதான் மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' என்று சொல்லி, அந்த திசையிலேதான் பொதுவுடைமை இயக்கத்தைக் கொண்டு சென்றார்கள்.

''தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்'' என்று மண்ணுக்கேற்ற மார்க்சியத்தின் பல பிரிவு வாதாடிகளாலும் ஏற்றுக் கொள்ளப்படுபவர், சென்னை சிங்காரவேலர். அதுவும் 1923-லேயே, இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ் மண்ணில் - மேநாள் கொண்டாடியவர்; 1925-ஆம் ஆண்டு கான்பூரில் நடந்த இந்தியக் கம்யூனிஸ்டுகளின் முதல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கியதுடன் அதில் நிறுவப்பட்ட பொதுவுடைமைக் கட்சிக்குத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர், சிங்காரவேலர்.

இந்தச் சிங்காரவேலர் மரபு வழி மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டவரல்ல. மண்ணுக்கேற்ற மார்க்சியத்தையே வலியுறுத்தி, செயல்படுத்த முயன்றவர். இவர் தனித்தன்மை வாய்ந்த, புரட்சியைச் சாதிக்கவல்ல, இரகசிய — சட்டவிரோத, ஆயுதபாணியாக்கப்பட்ட பொதுவுடைமை இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதில் ஒரு போதும் உடன்பாடு கொள்ளவில்லை.

இவருடைய அரசியல் வாழ்க்கையின் முன்பகுதி, காந்தியின் தலைமையிலான காங்கிரசுக்குள் பொதுவுடைமை

> **இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் நிறுவனர்கள் என்று 'அறியப்படும் அனைவரும்' மரபு வழி மார்க்சியத்தை ஆரம்பம் முதலே ஏற்க மறுத்தவர்கள். உலகப் பொதுவுடைமைக் கட்சிகள் இணைந்திருந்த மூன்றாவது அகிலம், மற்றும் லெனின், ஸ்டாலின், போன்றவர்களின் வழிகாட்டுதல்களை நிராகரித்தவர்களும் அவர்கள்தான்.**

இயக்க அமைப்புக்களை நிறுவி, விடுதலையையும் கம்யூனிசத்தையும் அடைய முடியும் என்ற நம்பிக்கையில் அமைந்தது. அப்போது வன்முறை தவிர்த்த மார்க்சியமே காந்தியம்; புத்தரும் பொதுவுடைமையும், காந்தியமும் ஒன்றே; வழிமுறை மட்டுமே வேறானது. புத்தரின் வாரிசாகவே காந்தியம் அமைந்துள்ளது; புத்தரும் காந்தியும் போதிக்கும் அகிம்சை புரட்சியே சரியானது - இவைதான் சிங்காரவேலரின் ஆரம்பகாலப் பொதுவுடைமைக் கண்ணோட்டம்.

இவருடைய அரசியல் வாழ்க்கையின் இரண்டாம் பகுதி, பெரியாரின் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்துக்குள்ளேயே பொதுவுடைமை கட்சியைக் கட்டி விடுதலையையும் சம தருமத்தையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டது. இதற்காக சுயமரியாதை இயக்கத்தின் ஓர் அங்கமாக சுயமரியாதை சமதருமக் கட்சியை நிறுவினார். இந்தக் காலத்தில் சிங்காரவேலர் கொண்டிருந்த பொதுவுடைமைக் கண்ணோட்டத்தில் காந்தியம் கைவிடப்பட்டிருந்தது; இருந்தாலும் அகிம்சை முறையில் விடுதலை - பொதுவுடைமையைச் சாதிக்கும் நோக்கம் நீடித்தது. சாதி - மத எதிர்ப்பு போன்ற சுயமரியாதைக் கூறுகளும் சேர்க்கப்பட்டிருந்தன.

சிங்காரவேலர் காங்கிரசில் இருந்த போது அதற்குள்ளாகவே, பொதுவுடைமை காணும் நோக்கோடு ''இந்துஸ்தான் பஞ்சாயத்து'' என்ற அமைப்பை நிறுவினார். பொதுவுடைமைக் கட்சியைக் கட்டுமாறு கம்யூனிச அகிலம் கோரியபோது அதற்குப் பதிலாக ''இந்துஸ்தான் லேபர் கிசான் கட்சி'' (தொழிலாளர் விவசாயக் கட்சி)யை நிறுவினார். 1925, கான்பூரில் பொதுவுடைமையாளர்கள் மாநாட்டுக்குத் தலைமையேற்று, கட்சிக்கும் தலைவராவதற்கு முன்பு, தொழிலாளர் அரசியல் கட்சியை நிறுவினார். அது பிரிட்டனின் தொழிலாளர் கட்சியைப் போன்று இயங்கும், (ஆங்கிலேய ஏகாதிபத்தியப் பிரதமரான) இராம்சே மாக்டனால்டு போன்றோரின் கருத்துக்களை வழிகாட்டும் தத்துவமாக ஏற்கும் என்றார்.

காங்கிரசில் இருந்து கொண்டு அதன் மூலம் பொதுவுடைமை இயக்கத்தையும் கட்டும் சிங்காரவேலரின் முயற்சி, பொதுவுடைமை கொள்கையில் உடன்பாடு கொண்ட தொழிலாளர் தலைவர்கள் என்று திராவிட - தமிழினவாதிகளால் போற்றப்படும் திரு.வி.க., சக்கரை (செட்டியார்) ஸ்ரீராமுலு போன்றவர்களாலேயே முறியடிக்கப்பட்டது. அதுவும் கண்ணியமான முறையில் இல்லை. தொழிலாளர் போராட்டத்துக்காக காங்கிரசு கொடுத்த நிதியை சிங்காரவேலர் கையாடல் செய்தார், பதவிக்காக முறைகேடாக முயன்றார், கான்பூர் சதி வழக்கில் ஆங்கிலேய அரசிடம் மன்னிப்புக் கேட்டு விடுதலையானார் என்கிற அவதூறு செய்து ஒதுக்கப்பட்டார்.

சிங்காரவேலரால் தலைமையேற்கப்பட்ட தொழிலாளர் போராட்டங்கள், அனைத்திந்திய தொழிலாளர் காங்கிரசின் தலைவர்களான வி.வி. கிரி, என்.எம். ஜோஷி ஆகியோரின் துரோகத்தால் தோல்வியடைந்தன. இதனால் வெறுப்புற்ற சிங்காரவேலர், அப்போது தொழிலாளர் போராட்டங்களை ஆதரித்த பெரியாருடன் இணைந்து சுயமரியாதை இயக்கம் கண்டார். ஆனால், 1934-இல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியை ஆங்கிலேய அரசு தடை செய்து, கம்யூனிஸ்டுகளை வேட்டையாடத் தொடங்கியவுடன் பெரியார் சுயமரியாதைத் திட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தார். இத்தோடு சிங்காரவேலரின் பொதுவுடைமை இயக்க முயற்சிகள் எல்லாம் முடிவுக்கு வந்தன.



படிப்பகம்

www.padippakam.com

ஏறக்குறைய 15 ஆண்டுகள் தனது ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' அடிப்படையில் தென்னிந்தியாவில் பொதுவுடைமை இயக்கத்தை நிறுவி, வளர்க்க சிங்காரவேலர் முயன்றார். அதே காலகட்டத்தில் மேற்கு இந்தியாவில் டாங்கேயும் அவரது சீடரும், காந்தி ஆசிரமவாசியுமான சத்திய பக்தாவும் அதே முயற்சியை மேற்கொண்டனர்; வட இந்தியாவில் மணிலால் என்பவர் அதே முயற்சியில் இருந்தார். 1922 டிசம்பரில், கயாவில் கூடிய இந்திய தேசியக் காங்கிரசு மாநாட்டையொட்டி சிங்காரவேலர், டாங்கே, மணிலால் மூவரும் சந்தித்து ஒருங்கிணைப்புக்கான முயற்சியில் ஈடுபட்டனர். அதன்பிறகு வங்காளத்தைச் சேர்ந்த முகுந்தலால் சர்க்காரோடு நான்கு மையங்களில் இருந்து நான்கு அறிக்கைகளை முன்வைத்து காங்கிரசுக்குள்ளாகவே நான்கு ''பொதுவுடைமை'' அமைப்புகளைத் தனித்தனியே அமைத்தனர்.

முதலாளித்துவ தேசியவாதத்தை ஆதரிப்பது, சட்டபூர்வ - வெளிப்படையான அமைப்பாக மட்டுமே செயல்படுவது, கம்யூனிச அகிலத்துடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளாமல் இருப்பது என்பதே அன்றைய பொதுவுடைமை இயக்கத்தின் பிரதான - பெரும்பான்மை நிலையாக இருந்தது. தெற்கே சிங்காரவேலரும் வடக்கே டாங்கேயும் இந்த நிலையின் பிதாமகர்களாக இருந்தனர்.

1928-இல் கூடிய கம்யூனிச அகிலத்தின் ஆறாம் மாநாடு ''இந்தியாவில் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்கள் காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகி, எல்லாப் பொதுவுடைமைக் குழுக்களும் தனிநபர்களும் இணைந்து ஒன்றுபட்ட, சட்டவிரோதமான கட்சியைக் கட்ட வேண்டும்'' என்று அறிக்கை நிறைவேற்றியது. ஆனால் அதை அப்போதைய சி.பி.ஐ நிராகரித்துவிட்டது. 1930 இல் மீண்டும் அகிலத்தின் அதிகார பூர்வ பத்திரிக்கை இந்தியாவுக்கான விமர்சனமும் செயல்திட்டமும் எழுதியது. இதை கல்கத்தா மையம் ஏற்ற போதும் டாங்கே தலைமையிலான பம்பாய் மையம் ஏற்கமறுத்து, காந்தி - காங்கிரசு தலைமையிலான இயக்கங்களில் இணைந்து செயல்பட்டது.

இந்தியாவில் குடியேறி செயல்பட்டு வந்த பிரிட்டன் பொதுவுடைமையாளர்களும், கல்கத்தா மையமும் அகிலத்துக்கு அனுப்பிய அறிக்கையின் அடிப்படையில் 1932 - இல் இ.பொ.க.வின் தவறுகளைக் கடுமையாக விமர்சித்து பிரிட்டன், சீனா, ஜெர்மனிப் பொதுவுடைமைக் கட்சிகள் ஒரு பகிரங்கக் கடிதம் அனுப்பின. 1933-இல் மீண்டும் சீனப் பொதுவுடைமைக் கட்சி, இ.பொ.கவின் அமைப்பு - நடைமுறைகள் மீது விமர்சன அறிக்கை அனுப்பியது.

வெளியிலிருந்து வந்த இத்தகைய இடையறாத முயற்சிகளின் விளைவாக 1933-இல் கூடிய இ.பொ.க வின் இரகசிய மாநாடு, பொதுவுடைமை அகிலத்தில் இணைவது என்றும் அதன் வழிகாட்டுதல்களை ஏற்பது என்றும் முடிவு செய்தது. டாங்கே தலைமையிலான காந்திய - காங்கிரசுக் கம்யூனிஸ்டுத் திட்டத்துக்கு மாற்றாக ஒரு புதிய புரட்சிகர அறைகூவலை அந்த மாநாடு அமைத்த மத்தியக் குழு விடுத்தது.

ஆனால், ஆறாவது மாதமே கட்சியையும் அதன் துணை அமைப்புகளையும் ஏகாதிபத்திய அரசு தடை செய்தது. டாங்கே போன்ற ''மண்ணுக்கேற்ற மார்க்சியவாதிகள்'' எல்லாம் ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் காங்கிரசு சோசலிசக் கட்சி என்கிற அமைப்பை காங்கிரசுக்குள்ளாகவே நிறுவி, அதில் இணைந்தனர். சிங்காரவேலருக்குப் பிறகு தமிழ்நாட்டில் பொதுவுடைமை இயக்கத்தின் பொறுப்பேற்ற ஜீவா தலைமையிலான மண்ணுக்கேற்ற மார்க்சியவாதிகளும் அவர்களைப் பின்பற்றினர்.

காங்கிரசு - காந்திய வழியில் தமது ஆசிரம அரசியலைத் தொடங்கிய ஜீவா,

> **மார்க்சியம் மட்டும்தான் தனிச் சிறப்பான கூறுகளுக்கும் பருண்மையான நிலைமைகளுக்கும் ஒருங்கிணைந்த வழியையும் தீர்வையும் கோருகிறது. அதற்கு மாறாக சந்தர்ப்பவாத அரசியலை மட்டும் நடைமுறையாகக் கொண்டவர்கள் வெவ்வேறு பிரச்சினைகளுக்கு வெவ்வேறு தீர்வுகளைக்கூறும் தத்துவங்களைக் கலவையாக்கி இதுதான் ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' என்கின்றனர்.**

1932-இல் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்று சிறைசென்றார். சிறையில் பகத்சிங்கின் கட்சித் தோழர்களிடம் போதனை பெற்று கம்யூனிச அரசியலை ஏற்றார். வெளியில் வந்ததும் பெரியார், சிங்காரவேலருடன் சுயமரியாதை இயக்கத்தில் இணைந்து ஒரு நாத்திக மாநாடும், பிறகு ஒரு ஜமீன்தாரல்லாத மாநாடும் நடத்தினார். பகத்சிங் எழுதிய ''நான் ஏன் நாத்திகனானேன்?'' என்ற நூலை மொழி பெயர்த்ததற்காக ஜீவா சிறையிலடைக்கப்பட்டார். அதை அச்சிட்டவர் வெளியிட்டவர் என்கிற முறையில் பெரியாரும் அவரது சகோதரியும் வழக்கில் சேர்க்கப்பட்டனர்; அதற்காக மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்ததோடு, ஜீவாவையும் அப்படிச் செய்யுமாறு பெரியார் நிர்ப்பந்தித்தார். ஜீவா மறுத்து விட்டார். பார்ப்பனரல்லாதவர்கள் எனத் திராவிட - தமிழினவாதிகளால் இன்றும் போற்றப்படும் பெருவியாபாரிகள், முதலாளிகள், நிலக்கிழார்களின் நிர்ப்பந்தம், அரசின் மிரட்டல் காரணமாக ''கொள்கையைவிட அமைப்பைப் பாதுகாப்பதே முக்கியமானது'' என்று சொல்லி சுயமரியாதைத் திட்டத்தையும் பெரியார் கைவிட்டார்.

இதனால் வெறுப்புற்ற ஜீவா, ''சுயமரியாதை இயக்கம் அவமரியாதை இயக்கமாகிவிட்டது'' என்று கூறி வெளியேறி, சிங்காரவேலரைத் தொடர்ந்து சுயமரியாதை சமதருமக் கட்சிக்குத் தலைமையேற்று பிரச்சாரமும், மாநாடும் நடத்தினார். அதற்கு சிறப்பு அழைப்பாளராக வந்த டாங்கே சிறப்புரையாற்றினார். அவரது ஆலோசனைப்படி சுயமரியாதை - சமதருமக் கட்சியைக் கலைத்துவிட்டு காங்கிரசு மகாசபையிலும், காங்கிரசு சோசலிசக் கட்சியிலும் இணைந்தனர். 1936-இல் சேலத்தில் மாநாடு நடத்தி தமிழ்நாடு காங்கிரசு சோசலிசக் கட்சியின் பொதுச்செயலாளராக ஜீவா ஆனார்.

மாஸ்கோவில் கம்யூனிசப் பயிற்சி பெற்று தென்னிந்தியாவிற்கு வந்த அமீர் ஹைதர் கான் தலைமறைவாக இருந்து சுந்தரைய்யா, பி. சீனிவாசராவ், ஏ.எஸ்.கே. ஐயங்கார், கே. பாஷ்யம் போன்றவர்களைக் கொண்டு இரகசியக் கட்சி வலைப் பின்னலை உருவாக்கியிருந்தார். அவர்கள் உருவாக்கி இருந்த ''யங் கம்யூனிஸ்டு லீக்'' என்ற இளைஞர் பொதுவுடைமை அமைப்பு ஆங்கிலேயக் காலனி அரசால் தடை செய்யப்பட்ட போது, அவர்களும் காங்கிரசு சோசலிசக் கட்சியில் இணைந்தனர்.

இக்கட்சியை வலுவாகக் கட்டி, பல தொழிலாளர் அமைப்புக்களை நிறுவி, பொருளாதார போராட்டங்களை நடத்திய போது, இக்கட்சியின் ஆதரவோடு ஆட்சியைப் பிடித்திருந்த காங்கிரசு முதல் மந்திரி இராஜாஜியும், தொழில் மந்திரி வி.வி. கிரியுமே அவற்றை ஒடுக்கினர். இருந்தாலும் காங்கிரசுக்குள் செயல்பட்டு அதன் அமைப்புப் பதவிகளைப் பிடிப்பதில் முனைப்பாக ஈடுபட்டனர் ஜீவா போன்றவர்கள். இராஜாஜி, காமராஜர், சத்தியமூர்த்தி ஆகியோரோடு போட்டியிட்ட ஜீவா அகில இந்தியக் காங்கிரசுக் கமிட்டி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1939 திரிபுரா காங்கிரசில் சுபாஷ் சந்திரபோஸ், மற்றும் காந்தி - நேரு குழுக்களுக்கிடையே தலைமைக்காக நடந்த மோதலின் போது ஒற்றுமையை உருவாக்கவே டாங்கே, ஜீவா போன்றவர்கள் முயன்றனர். காந்தி கும்பல் அம்மாநாட்டில் தோற்றபோதும், நிர்ப்பந்தம் - மிரட்டல் மூலமாக சுபாஷ் சந்திரபோசை விரட்டிவிட்டு தலைமையைக் கைப்பற்றியது. அதன் விளைவாக கம்யூனிஸ்டுகள் எனக் கருதப்பட்ட அனைவரையும் காங்கிரசு சோசலிசக் கட்சியிலிருந்து விரட்டும்



படிப்பகம்

www.padippakam.com

வேலையை அது மேற்கொண்டனர்.

இப்படி வெளியேற்றப்பட்டவர்கள் ஜோஷி தலைமையில் தனிக் கட்சியாக அமைந்தனர். அதற்கு இங்கே ஜீவா, இராமமூர்த்தி போன்றோர் தலைமையேற்றனர். இரண்டாம் உலகப்போரின் ஆரம்பத்தில் காங்கிரசின் நிலைப்பாடு எடுத்து ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்த ஜோஷி - டாங்கே போன்ற கம்யூனிஸ்டுகள், சோவியத் ஒன்றியத்தை இட்லரின் ஜெர்மனி தாக்கிய போது கம்யூனிச அகிலத்தின் நிலைப்பாட்டைத் தவறாகப் புரிந்து கொண்டனர். ஏகாதிபத்தியப்போரை எதிர்த்துப் புரட்சியைத் தொடுப்பதற்குப் பதில், சோசலிச அரசைப் பாதுகாப்பது என்ற பெயரில் ஆங்கில ஏகாதிபத்திய ஆதரவு நிலை எடுத்தனர். இதனால் தடை நீக்கப்பட்டு வெளியே வந்தார்கள்.

இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதும் நாடு முழுவதும் காந்திய காங்கிரசு வழிமுறைகளை நிராகரித்து, உடனடி விடுதலை கோரி, தொழிலாளர்கள், படைவீரர்களின் ஆயுதந்தாங்கிய போராட்டங்கள் வெடித்தன. இதன்பின்னணியில் கம்யூனிஸ்டுகளின் சதி இருப்பதாகக் கருதிய காங்கிரசு அமைச்சரவை பொதுவுடைமை இயக்கத்தைத் தடை செய்து அதன் அணிகளை வேட்டையாடியது. ஆனால் அதன் தலைவர்களோ, புரட்சிக்கு அவசியமான தொழிலாளர் - விவசாயிகள் கூட்டணியையும், இரகசியக் கட்சி அமைப்புகளையும் நிறுவுவதற்குப் பதிலாக, காங்கிரசு, திராவிடர் கழகப் பிரமுகர்களின் ஆதரவுடன் வெறுமனே தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்டனர். ஆந்திராவின் தெலிங்கானாவில் மட்டுமே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, 1947 அதிகாரமாற்ற நெருக்கடியைப் பயன்படுத்தி, ஆயுதந்தாங்கிய உழவர் பேரெழுச்சியாக வளர்த்தெடுத்தனர். அதே சமயம் இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவரான ரணதிவே நாட்டின் நிலைமையை மிகை மதிப்பீடு செய்து ரஷ்யப் புரட்சியை அப்படியே காப்பியடித்து, உடனடியாகவே நாடு தழுவிய முறையில் ஆயுதப் பேரெழுச்சி நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றும் வழிகாட்டுதலைக் கொடுத்தார். இந்த ''அதீதப் புரட்சி'' காரணமாக கட்சிக்குப் பேரிழப்பு நேர்ந்ததோடு, டாங்கே, மோகன் குமாரமங்கலம், அஜாய் கோஷ் போன்ற துரோகிகளின் சரணடைவுக்குப் பிறகு தடைநீங்கி, இ.பொ.க. சட்டபூர்வக் கட்சியானது.

அதன்பிறகு, நாடாளுமன்ற சகதிக்குள் மூழ்கிக் கொண்டே, எந்தப் பாதையில் நகர்வது என்று குழம்பிக்கிடந்த போது, பொதுவுடைமைத் தலைவர்களுக்கு குருச்சேவின் வருகை பேருதவியாக அமைந்தது. அவர்கள் இந்திய - சீனப்போரைக் காரணமாக வைத்து ''கம்யூனிசக் கட்சி'', ''மார்க்சிசக் கட்சி'' என்று இரண்டு பிரிவுகளாக இயங்கினாலும் அவர்களிடையே அடிப்படைத் திட்டத்தில் ஒரே ஒருவேறுபாடுதான் இருந்தது.

காங்கிரசு, பிற்போக்குப் பெருமுதலாளிகளின் கட்சி அதனுடன் அணிசேரக் கூடாது என்பது ''மார்க்சிஸ்ட் கட்சி''யின் நிலையாகவும், காங்கிரசு முற்போக்குத் தேசிய முதலாளிகளின் கட்சி, அதனுடன் அணிசேர்ந்தே ஆகவேண்டும் என்பது ''கம்யூனிசக் கட்சி''யின் நிலையாகவும் இருந்தது. இந்த இருகட்சிகளுமே காங்கிரசு பற்றிய தத்தமது நிலையை தேர்தல் அரசியலுக்கேற்ப மாற்றிக் கொண்டுள்ளதால் இதுவொன்றும் அடிப்படையான வேறுபாடு அல்ல. 1969-இல் இந்திரா காங்கிரசு அரசு சிறுபான்மையான போது, சி.பி.எம் அதை ஆதரித்துக் காப்பாற்றியது. 1977 தேர்தல் தோல்விகளுக்குப் பிறகு, சி.பி.ஐ. காங்கிரசுக்கு எதிராகப்போய் சி.பி.எம்.மின் நிலை எடுத்தது. இப்போது காங்கிரசுக்கு ஆதரவு என்ற சி.பி.ஐ யின் முன்னாள் நிலையை இரண்டு கட்சிகளுமே எடுத்துள்ளன.



ஜீவா

தமிழகத்தில், சிங்காரவேலருக்குப் பிறகு, டாங்கேயின் வழியில் ஜீவா, கல்யாணசுந்தரம், பாலதண்டாயுதம் போன்றவர்கள் ஒரு பிரிவை வழி நடத்தினார்கள். நம்பூதிரிபாடு வழியில் ராமமூர்த்தி, பாலசுப்பிரமணியம், நல்லசிவம், சங்கரய்யா போன்றவர்கள் மற்றொரு பிரிவை வழிநடத்தினார்கள்.

இந்த இரண்டு பிரிவுகளுமே, ''மரபுவழி மார்க்சியத்தைப் பின்பற்றின, மண்ணுக்கேற்ற மார்க்சியத்தைப் பின் பற்றவில்லை'' என்று இந்த இரண்டு ''மார்க்சியங்களை''யும் அறியாதவர்கள்தான் சொல்ல முடியும். இவ்விருபிரிவினருமே மார்க்சிய - லெனினியப் புரட்சிவழியை நிராகரித்து, குருச்சேவ், பிரஷ்னேவ், கோர்பச்சேவ், டெங்சியாபிங் வழிமுறைகளைப் பின் பற்றுபவர்களாகத்தான் உள்ளனர்.

தேர்தல் அரசியல்வாதிகளாகச் சீரழிந்து போய்விட்டார்கள் என்பதற்காக மட்டும் இதைச் சொல்லவில்லை. அகில இந்தியத் தலைமையான டாங்கே, நம்பூதிரிபாடு ஆகியவர்கள் வேத இதிகாசப் - புராணங்களில், பார்ப்பனிய சனாதனத்தையே மண்ணுக்கேற்ற மார்க்சியமாகத் தேடினார்கள். இதைத்தான் ''இந்திய மரபு, இந்திய ஞான, இந்தியக் கலாச்சாரம் ஆகியவற்றில் வேர்விட்டு பொதுவுடைமை இயக்கத்தை வளர்க்க வேண்டும்'' என்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை ''மார்க்சிஸ்ட் கட்சி - சி.பி.எம்'' காரர்கள் நம்பூதிரிபாடின் சனாதன வியாக்கியானங்களைப் பற்றி ஒழுகுகின்றனர். ஆனால் சிங்காரவேலர், ஜீவா வழிவந்த சி.பி.ஐ.காரர்கள் பாரதி, வள்ளுவம், கம்பராமாயணம் இவற்றில் எல்லாம் பொதுவுடைமைச் சித்தாந்தத்தைத் தேடி ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' உருவாக்கி, அந்த வகையில் திராவிட - தமிழினவாதிகளின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளனர்.

இவை ஒருபுறமிருக்கட்டும். மரபுவழி மார்க்சியமே மண்ணுக்கேற்ற மார்க்சியத்தைத் தான் போதிக்கிறது. மார்க்சியத் துரோகிகளும் எதிரிகளும் அவதூறு செய்வதுபோல, எல்லாப் பிரச்சினைகளுக்கும், எல்லாக் காலங்களுக்கும், எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய நடைமுறைகளை வைத்திருப்பதாக மரபுவழி மார்க்சியம் ஒருபோதும் உரிமை கொண்டாடவில்லை. மார்க்சியத் தத்துவத்தின் சாரத்தையும், பொது விதிகளையும் செரித்துக் கொண்டு அவற்றை அந்தந்த நாட்டின் பருண்மையான, தனிச்சிறப்பான - குறிப்பான நிலைமைகளுக்குப் பிரயோகிக்க வேண்டும் என்றுதான் மரபுவழி மார்க்சியம் போதிக்கிறது. மார்க்சிய - லெனினிய இயக்கம் மட்டும்தான் இந்த வழியிலே முயற்சிக்கிறது. எனவேதான், அதிகார பூர்வ கம்யூனிசக் கட்சிகள் புறக்கணித்த தேசிய இனம், சாதியப்பிரச்சினைகளை, தமிழின, தலித்தியவாதிகள் தோன்றுவதற்கு பல ஆண்டுகள் முன்பே கையிலெடுத்தது.

இதைக் காண மறுத்துக் கண்களை மூடிக் கொள்ளும் தமிழின, தலித்தியவாதிகள் பெரியாரிய, அம்பேத்கரியப் பார்வையை ஏற்றுக் கொண்டால்தான் தேசிய இன, சாதியப் பிரச்சினையை அணுகித் தீர்க்கும் ''மண்ணுக்கேற்ப மார்க்சியம்' இல்லையென்றால் 'மரபுவழி மார்க்சியம்' என்று அடாவடி பேசுகின்றனர்.

மார்க்சியமோ, தனிச்சிறப்பான கூறுகளுக்கும், பருண்மையான நிலைமைகளுக்கும் ஒருங்கிணைந்த வழியையும் தீர்வையும் கோருகிறது. அதற்கு மாறாக, சந்தர்ப்பவாத அரசியலையே நடைமுறையாகக் கொண்டவர்கள் வெவ்வேறு பிரச்சினைக்கு வெவ்வேறு தீர்வுகளைக் கூறும் தத்துவங்களைக் கலவையாக்கி, இதுதான் ''மண்ணுக்கேற்ப மார்க்சியம்'' என்கின்றனர். இந்த வகையில் தமிழின, தலித்திய வாதிகள் மட்டுமல்ல, இந்துமதவெறி பாசிச - பார்ப்பன சனாதனிகள் கூட ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' பேசமுடியும் என்பதுதான் சமீபத்திய முன்னேற்றம்!

• சாத்தன்



படிப்பகம்

www.padippakam.com



# தேவ ஊதியம்

பயணிகளின் காலைநேர அவசரத்திலும், அவஸ்தையிலும் தாம்பரம் பேருந்து நிலையம் பரபரப்பாக இருந்தது. வெண்ணிறக் குறுந்தாடி, வெள்ளைச் சட்டை, வெள்ளை பேண்ட், கச்சிதமாக கஞ்சிபோட்ட மாதிரி தோளில் ஒரு நீலவண்ண ஜோல்னா பை சகிதமாய் அய்ம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் அனைவர் கவனத்தையும் கவரும்படி அளவெடுத்து நடந்து வந்தார்.

எனக்குப் பக்கத்தில் சோற்று வாளியுடன் நின்று கொண்டிருந்தவரிடம் போய் ஒரு மொட்டவிழும் புன்னகையைத் தவழவிட்டார். முன்பின் தெரியாத ஆள் நம்மைப் பார்த்து புன்னகைக்கிறாரே என்று சோற்றுவாளிக்காரர் குழம்பியது அவரது கண்களில் தெரிந்தது. அவரது குழப்பம் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பே வெண்தாடிக்காரர் அவரது கையை ஆறுதலாய் பற்றியபடி கண்களை மூடி முணுமுணுக்க ஆரம்பித்தார்.

''யேசுவே இவருக்கு பிணி முதலிய உடல் உபாதையற்ற வாழ்நாளை வழங்குவாயாக! கஷ்ட ஜீவனத்தில் உழலும் இவரது மனைவி, மக்களை நோய் நொடியின்றி காத்தருள்வாயாக! ஏழைகள் பால் இரக்கம்காட்டும் தேவனே. இவரை விசுவாசித்து நேசம் காட்டும் நெஞ்சங்களை உறவாக்குவாயாக! வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் இந்த எளியவருக்கு இரங்கி ரட்சிப்பாயாக! பிரார்த்திக்கிறேன் ஆண்டவரே!''

பின்பு சத்தமின்றி முணுமுணுத்தபடி சிலுவை போட்டு கண்களைத் திறந்து—மீண்டும் அவரைப் பார்த்துப் புன்னகைத்தார். முன்பின் தெரியாதவர் தனக்காக நெகிழ்ந்து ஆண்டவனிடம் வேண்டிக் கொண்ட அன்பு அதிர்ச்சிக்கு ஆளாகியிருந்தார் சோற்று வாளிக்காரர். மறக்காமல் துண்டு நோட்டீசு எடுத்துக் கொடுத்த வெண்தாடிக்காரர் பரவலாகக் கூட்டத்தைப் பார்க்காமல் குறிவைத்துப் பார்வையை ஏவினார்.

குழந்தையோடு நின்று கொண்டிருந்த பெண் அவரை ஆர்வமாகப் பார்க்க, அருகில் சென்று சிறுநகையோடு குழந்தையின் தலையில் கைவைத்தபடி ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். ''யேசுவே இந்தப் பெண்ணின் குடும்பபாரத்தை இறக்கி வைத்து ரட்சிப்பீராக! இந்தக் குழந்தையின் சகல செளகரியங்களுக்கும் காத்தருள்வாயாக! உன்னுடைய பாரத்தை முறையிட, சேலையூர் ஜெபக்கூட்டத்திற்கு வாம்மா'' சிலுவை போட்டு முடித்துக்கொண்டபின், அடுத்து அவரது பார்வை என் மேல் பட்டது.

தூரப்பார்வையாலேயே என்னை அளந்து கொண்டுவந்தவர் ''ஹலோ பிரதர்'' என்று கையைப்பிடித்துக் கொண்டு ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். ''யேசுவே இந்த இளைஞரின் ஆசைகளை நிறைவேற்றுவீராக! இந்த இளைஞரின் எதிர்காலம் பிரகாசிக்கும்படியான வேலை வாய்ப்பை வழங்குவாயாக'' கண்களைத் திறந்தவர் நான் பேசமுற்பட்டதைப் புரிந்து கொண்டு ''சொல்லுங்க பிரதர்'' என்றார் பரிவுடன்.

''இவ்ளோ பாசம் காட்டுவீங்கண்ணு எதிர்பார்க்கலே, நானும் நாலு வருசமா இரும்பு சாமான்களைத் தூக்கிட்டு, நாய் படாத பாடுபட்டு இந்த வேலை செஞ்சிகிட்டு இருக்கேன். இதோ நீங்க செய்த இந்த வேலை ஈசியான வேலையா படுது. வாங்கித் தர்றீங்களா?''

கேட்டதுதான் தாமதம், தீட்சண்ய பார்வைபோய், ஒரு நிமிடத்தில் சந்தேகப் பார்வைக்கு வந்தார். வறட்டுப் புன்னகையை வரவழைத்துக் கொண்டவர் ''காட் பிளஸ் யூ'' என்று சிலுவை போட மறந்து நடையைக் கட்ட ஆரம்பித்தார். ''பிரதர்.. பிரதர்..'' இப்போது அவரை நான் கூப்பிட ஏசு நாதரே கூப்பிட்டாலும் திரும்பிப்பார்க்காத நடை அது.

— சுடர்விழி

## தாமிரவருணியிலிருந்து...

- நெஞ்சு
  சட்டென கனத்தது
  நிதானித்து
  மூச்சு விட்டுக் கொண்டேன்.
- திடீரென
  நுரையீரல் விரிந்து
  மூக்கு வழியே
  சூடான காற்று...
  மெதுவாக வெளியேற்றி
  உள்ளிழுத்துக் கொண்டேன்.
- எதிர்பாராமல்
  நெற்றி வியர்த்தது.
  ஒன்றும் புரியவில்லை.
  வேட்டியை எடுத்து
  துடைத்துக் கொண்டேன்.
- தொண்டையில் என்னமோ
  ஊதிய பலூன் போல
  அடைத்தது.
  எச்சிலை முழுங்கி
  தொண்டையை
  ஈரப்படுத்தினேன்.
- பொசுக்கென கண்ணீர்
  விழிகளின் மேல் ததும்பியது.
  தலையைத் தூக்காமலே
  வெட்கத்தில் நீரை
  இழுத்துக் கொண்டேன்.
- வாய்விட்டு அழுது
  தீர்த்திருப்பேன்
  தேவையில்லாமல் எதற்கு?
  தாமிரவருணிக் கண்ணீர்
  இன்னும் வற்றவில்லையே!
- 44 பிணங்கள் சேர்ந்து
  ஒரு பண்ணையாரைப்
  பழி தீர்த்தது.
  17 பிணங்கள் சேர்ந்து
  எத்தனை முதலாளிகளுக்கு
  நாள் குறிக்கும்?
- ஏனென்றால்
  இது
  பிணங்களின் காலம்.

★ சா. செல்வராசு, திருச்சி



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



''இந்துத்துவம் வேறு ஒன்றையும் சொல்லியது. பூனை, பாம்பு, பல்லி, தவளை, எலி இவைகளைக் கொல்வது பாவம் என்றும், கொல்பவர்கள் நரகத்திற்குப் போவார்கள் என்றும் நம்பப்பட்டது. இந்துக்கள் வீட்டில் பூனை வளர்ப்பதும், அதைக் கொல்லக்கூடாது என்பதும் கூட எலிகளைக் கட்டுப்படுத்த கையாண்ட பழைய முறையாகும். இன்று நாம் முன்வைக்கும் 'ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு நிர்வகிப்பு' (I.P.M.) என்ற கோட்பாடு மற்றும் நடைமுறைகளின் வேர்கள் இந்தியாவின் வேதகாலந்தொட்டே தொடங்கிய ஒன்று.''

எப்படியிருக்கிறது மான்சாண்டோ கதை இலாகாவின் கண்டுபிடிப்பு? பூனை எலியை பிடிப்பதை இந்துத்துவத்தின் கண்டுபிடிப்புபோல கதை விடுகிற மோசடி ஒருபக்கம் இருக்கட்டும். இந்து வீட்டு பூனையல்ல எந்த் (மதத்து) வீட்டுப் பூனையும் எலிபிடிக்கும் என்ற எளிய உண்மை கூட நமக்குத் தெரியாது என்று கதை கட்டுவதில் மான்சாண்டோ ஜகத்குருக்களையும் தாண்டிவிட்டது.

மேலும் தஞ்சை மாவட்ட விவசாயிகளும் பல கிராமப்புற மக்களும் எலிக்கறி, பூனைக்கறியை விரும்பிச்சாப்பிடும் உணவுப் பழக்கமாக இன்றளவும் வைத்திருக்கும் போது, ''கிராமங்களில் பூனையைக் கொல்வது இல்லை, காரணம் இந்துப் பண்பாடு'' என்று பூனை கண்களை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிட்டது என்பதுபோல மான்சான்டோ கண்ணை மூடிக்கொண்டு இந்தியாவே சைவம் என்கிறது.

பிளேக் நோயைப் பரப்பிய எலிகளை வெள்ளைக்காரன் ஒழித்தபோதே எலிகளைக் கொல்லக்கூடாது இது இந்துக்களின் தெய்வாம்சம் என்று இந்துவெறிபிடித்த திலகர் போன்றவர்கள் போராடிய வரலாறு இருக்கும்போது, இந்துக்கள் பூனை வளர்த்து எலிபிடிக்கும் ''உயிரியல் கட்டுப்பாட்டு நடவடிக்கை'' என்பது ஏற்கனவே உள்ள இந்துப் பண்பாட்டு ஜாடிக்கு எடுப்பான மூடியாக இல்லையே!

பொய் சொன்னாலும் பொருத்தமாகச் சொல்வதற்கென்றே ஒருவர் இருந்தார். இப்பண்டிகை, புராணங்களை எடுத்து தூசுதட்டி, அதிலே ஒரு அறிவியல் இழைப்பு இழைத்து ''சாணிக்கு கிருமிகளைக் கொல்லும் ரசாயன சக்தி உண்டு அதனால்தான் இந்துக்கள் சாணியை பிள்ளையார் பிடித்து வழிபடுவதுண்டு'' என தெய்வத்தின் குரல்' என்று பெயரில் அறிவியலையும் ஆன்மீகத்தையும் இழைத்துக் கொடுத்த அந்த சங்கர் ஆச்சாரி, தயானந்த சரஸ்வதி வகையறாக்களும், இதையே திடலடியாக ''வேதகாலத்திலேயே எல்லாம் இருக்கு, உயிரினங்களின் பரிணாமத்தை தசாவதாரத்திலேயே சொன்னது இந்துப் பண்பாடு. விஞ்ஞான பூர்வமானது'' எனும் வகையறாக்களும் விளக்கங்கள் கொடுத்தது போக ஒரு கிறித்துவ - அமெரிக்க பின்னணியில் உள்ள பன்னாட்டு விதைக் கம்பெனி பார்ப்பன இந்துப்பண்டிகையான தீபாவளிக்குப் புதுவிளக்கம் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன என்பதுதான் முக்கியமானது.

**எலிகளைக் கொல்லக் கூடாது இது இந்துக்களின் தெய்வாம்சம் என்று இந்துவெறி பிடித்த திலகர் போன்றவர்கள் போராடிய வரலாறு இருக்கும்போது, இந்துக்கள் பூனை வளர்த்து எலி பிடிக்கும் ''உயிரியல் கட்டுப்பாட்டு நடவடிக்கை'' என்பது ஏற்கனவே உள்ள இந்துப் பண்பாட்டு ஜாடிக்கு எடுப்பான மூடியாக இல்லையே!**



ஏற்கனவே பசுமைப்புரட்சி என்ற பெயரில் பன்னாட்டுக் கம்பெனிகள் நம் நாட்டில் பலப்பல உரம், பூச்சி மருந்துகளை இறக்குமதிசெய்து அதை வியாபாரமாக்க இங்குள்ள வானொலி, தொலைக்காட்சிகளில் வயலும் வாழ்வும், பண்ணைச் செய்திகள் என்ற பெயர்களில் ''மண்ணை எல்லாம் பொன் கொழிக்கச் செய்திடுவோம்'' என்று பாட்டுப்பாடி உரம், பூச்சி மருந்துகளை விவசாயிகள் தலையில்கட்ட வில்லுப் பாட்டு, வேளாண்செய்தி, விளம்பரப் படங்களில் பூச்சிகளை அரக்கனாகக் காட்டி அதை தேவரூபத்தில் ஒருவர் வந்து பாக்டம்பாஸ் அடித்துக் கொல்வதைப்போல எல்லாம் இங்குள்ள பழங்கதைகளைத் தமது வியாபாரத்திற்கு பயன்படுத்திக் கொண்டனர்.

உரம், பூச்சி மருந்தால் மண்ணையும் கெடுத்து மகசூலையும் கெடுத்த அதே நிறுவனங்கள், இன்று உயிரியல் தொழில் நுட்பத்தின் அடிப்படையிலான தங்கள் சரக்குகளை விற்க புராணக் குப்பைகளையே வேறுவிதமாகப் பயன்படுத்துகின்றன.

மான்சாண்டோவின் டெர்மினேட்டர் மரண விதைகள் மண்ணையும் மக்களையும் மலடாக்கும் என்ற உயிரியல் உண்மை நமது நாட்டில் புரிய ஆரம்பித்துள்ளதால், மான்சாண்டோ திடீர் என மண்ணின் மைந்தனாகி தீபாவளி கட்டுக்கதைக்கு தனது வியாபாரத்திற்கு ஏற்ற மாதிரி ஒரு ஒட்டுக் கதைப் போட்டு, ''நாங்கள் கொண்டு வரும் உயிரியல் தொழில்நுட்பம் அந்நியமோ, புதிதோ அல்ல. உங்களுடைய வேதகாலத்திலிருந்து நீங்கள் கடைப்பிடித்து வரும் தீபாவளி போன்ற ஒரு முறையைத்தான் புதிய பரிமாணத்தில் 'பூச்சிக் கட்டுப்பாடு நிர்வகிப்பு' (IPM) என்ற பெயரில் தருகிறோம்'' என்று கொளுத்திப் போடுகிறது.

திடீர் ரசப்பொடி போல ''கோழி சூப்பு பொடி''யை வளைகுடா முஸ்லீம் நாடுகளில் விற்பனை செய்யும் கென்டகி நிறுவனம், (அமெரிக்க பன்னாட்டு நிறுவனம்) ஒவ்வொரு பாக்கெட்டிலும் ''ஹலால் சொல்லி அறுக்கப்பட்டது'' என்று அச்சிட்டிருக்கிறது. இந்தக் கேலிக்கூத்தை எங்கே சொல்லி சிரிப்பது!

இந்துத்துவக் கம்பெனியாரின் உணர்வுகளை மதிக்கும் வகையில் மான்சாண்டோ கம்பெனியார் இவ்வாறு அறிவிக்கக்கூடும்:

''அறிவுச் சொத்துடைமை என்று சொல்கிறோமே அது ஒன்றும் புதிதல்ல, அதுதான் உங்கள் பார்ப்பனீயம்!''

• துரை. சண்முகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

www.padippakam.com



# நீ இந்துவென்றால் சொல் சம்மதமா?

சம்மதமா.. சம்மதமா - நீ
இந்துவென்றால் சொல் சம்மதமா
சொல் இது உன்னால் முடியுமா - நீ
உண்டு ஒதுங்கும் விலங்கினமா - இல்லை
கண்டும் காணாத கல்லினமா

கண்ணில் விழுந்ததும் தூசியல்ல - என்
கண்ணீரும் ஓயவில்ல
நெஞ்சை அறுக்கும் சோகமடா - அந்தப்
பிஞ்சுமுகம் கண்ணில் ஆடுதடா

தொழுகை முடிந்த வாசலிலே - அந்த
அழுகை யாருக்கும் கேட்கலையே
கேட்டது கொலை வெறிச் சத்தமடா - அது
வேட்டைக்கு அலைந்த கூட்டமடா

குழந்தை மறைந்தது கூட்டத்திலே - பிஞ்சுக்
குரலும் மறைந்தது கூச்சலிலே - சின்ன
நெஞ்சைப்பிளக்க மனம் வருமா - அது
முஸ்லீம் என்றால் சம்மதமா - நீ
இந்துவென்றால் சொல் சம்மதமா..

கங்கை சுமந்தது மீன்களையா - தலை
துண்டாய்ப்போன உடல்களையா
மண்ணில் விளைந்த கோதுமையே - நீ
தின்று வளர்ந்தது பிணங்களையா
கண்கள் அவிந்த பகல்பூரே - உன்
பங்கினைக்கேள் இந்தப் பாவத்திலே

தோட்டத்தின் மேலே பூக்களடா
தோண்டத் தோண்ட தலைகளடா
கோதுமைக் கதிர்கள் பொன்னிறமாய்
தூர்களின் சேறோ செந்நிறமாய்

ஜென்மமடா - ராமஜென்மமடா - ரத்த
கங்கையில் பிறந்த ஜென்மமடா
மனிதக்கறி நரமாமிசமா - உடல்
முஸ்லீம் என்றால் சம்மதமா - நீ
இந்துவென்றால் சொல் சம்மதமா.

ஓடி வந்தனரே உயிர்பிழைக்க - இடம்
தேடி வந்தனர் உடல் நடுங்க
துரத்தி வந்தது கும்பலொன்று - ஊரில்
இருக்க வைத்தார் அடைக்கலமென்று

தேடிய கும்பல் நுழைந்ததடா
மூடிய கதவு திறந்ததடா
அடைக்கலம் தந்த கைகளல்ல - அது
ஆள்காட்டிகளின் கைகளடா

துரோகமடா - கொடுந்துரோகமடா
தூக்கத்தில் கொன்ற துரோகமடா
கொடுத்த சோறு செரிக்குமுன்னே
குடலை அறுத்த துரோகமடா

துரோகிகள் மதம்தான் உன்மதமா - நீ
இந்துவென்றால் சொல் சம்மதமா.

☆ ☆ ☆

★ ஐதராபாத் கலவரத்தில்
இரண்டு வயது முஸ்லீம் குழந்தை
கொல்லப்பட்ட சம்பவம்.

● உ.பி மாநிலம் பகல்பூரில்
முஸ்லீம்களைக் கொலை செய்து
சாக்கில் கட்டி கங்கையில் விட்டனர்.
கொலைகளை மறைக்க அவர்களது
உடலை காலி பிளவர் கோதுமை வயல்களில்
புதைத்து மேலே பயிரிட்டிருந்தனர்.

■ கர்நாடக மாநிலத்தில் நடந்தது.
உயிர் தப்பி ஓடிவந்த முஸ்லீம்களுக்கு
அடைக்கலம் தருவதுபோல் நடித்து
அறையில் அடைத்துக் கொன்ற சம்பவம்.

○ ○ ○

செப்டம்பர் '99-இல் வெளியிடப்பட்ட மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் 'காவி இருள்' பாடல் ஒலிப்பேழையில் இடம்பெற்றுள்ள பாடல்.

ஒலிப்பேழை கிடைக்குமிடம்:
சீனிவாசன்,
3 நான்காவது தெரு,
செகந்நாதபுரம், சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.